அறைவு 04 இயம் 18 Nov 28- Dec 4, 2015

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு
MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்

பக்கங்கள் : 20 விலை : 30.00




தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தித் தனது உயிரை மாய்த்துக்கொண்ட மாணவன் இராஜேஸ்வரன் செந்தூரனுக்கு முரசின் அஞ்சலிகள்






## மீண்டும் ஏமாற்றப்பட்டனர் அரசியல் கைதிகள்

# புனர்வாழ்வு

## – காலக்கெடு 26ம் திகதி முடிவு –



அருட்தந்தை சக்திவேல்

தமிழ் அரசியல் கைதிகளில் புனர்வாழ்வு பெறுவதற்கு விருப்பமானவர்களில் முதல் தொகுதியினரை புனர்வாழ்வுக்கு அனுப்ப அரசாங்கம் வழங்கிய உறுதிமொழி கடந்த 26ம் திகதி காற்றாகிப் போனது.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையைப் பொறுத்தவரை அவர்கள் போராடும் போது வழங்கப்படும் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுவதில்லை என்பது வரலாறாகிப்போன நிலையில் தற்போது அவர்களின் விடுதலை மேலும் சிக்கலுக்குள் வீழ்ந்துள்ளது.

அரசியல் கைதிகளை புனர்வாழ்விற்கு அனுப்புவதற்குப் போதுமான சட்ட ஏற்பாடுகள் இல்லையென்று சட்ட அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்தவாரம் தமிழ்சிவில் சமூக அமையத்தின் இணைப்பேச்சாளர்களில் ஒருவரான குருபரன் இவ்விடயம் தொடர்பாகக் கேள்வி எழுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

2009ஆம் ஆண்டு அரசாங்கம் வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தலின் படி சரணடைந்தவர்களையே புனர் வாழ்வுக்கு அனுப்ப முடியும். அவ்வாறு புனர்வாழ்வுக்கு அனுப்புவதாயின் கைதிகள் நீதிமன்றத்தில் குற்றத்தை ஒப்புக்கொள்ளவேண்டிய நிலை காணப்படுவதாக மனித உரிமை ஆர்வலரும், கைதிகளை விடுதலை

17

## திருமலை வதைமுகாம்

# இயக்கிய அரசபடையினர் யார்? யாஸ்மின் சூக்கா தெரிவிப்பாரா?



அம்மையார் சூக்கா

திருகோணமலையில் இருப்பதாக கூறப்படும் இரகசிய சித்திரவதை முகாமுடன் தொடர்புடைய பாதுகாப்பு அதிகாரிகள் குறித்த விபரங்கள் தங்களிடம் இருப்பதாக, மனித உரிமைகள் செயற்பாட்டாளர் அம்மையார் யாஸ்மின் சூக்காவின் தலைமை - யிலான சர்வதேசத் தன்னார்வ குழு ஒன்று தெரிவித்துள்ளது.

இதனையடுத்து இத்தகவல்களை அவர் உரிய தரப்புக்களிடம் வழங்குவாரா என்ற கேள்வி எழுந்துள்ளது.

தென்னாப்பிரிக்காவில் இயங்கும் இலங்கையின் நீதி மற்றும் உண்மைக்கான வேலைத்திட்டம் என்ற இந்த அமைப்பே தன்னிடம் அத்தகவல்கள் இருப்பதாகத் தெரிவித்தள்ளது.

குறித்த அதிகாரிகளே கைது செய்யப்பட்ட மற்றும்......

17

# கங்குவேலி தமிழ் விவசாயிகள் மீண்டும் ஏமாற்றம்

அத்துமீறிப் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் சிங்கள விவசாயிகளால் பெரும் அவதிக்குள்ளாகி வரும் கங்குவேலித் தமிழ் விவசாயிகள் முறைப்பாடுகளைச் செய்தும் விசாரணைகளின்றிக் காவல்துறையினரால் மீண்டும் மீண்டும் திருப்பியனுப்பப்படுவதாகத் தெரிவித்துள்ளனர்.

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கங்குவேலி மற்றும் படுகாடு வயல்களில் சட்டத்திற்கு மாறாக அத்துமீறி உழவு செய்வொரை தடுப்பது தொடர்பான விடயம் கடந்த வியாழக்கிழமை மூதூர் காவல்துறையால் ஆராயப்படவிருந்தது.

எனினும் இரண்டாவது தடவையாகவும் அங்கு வந்திருந்த தமிழ் விவசாயிகள் காவல்துறையால் திருப்பியனுப்பப்பட்டுள்ளனர்.

முறைப்பாட்டாளர்களான தமிழ் விவசாயிகள் மட்டுமே அங்கு வந்திருந்ததாகவும் சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபடும் நபர்கள் காவல்துறையின் அழைப்பையேற்று அங்கு வருகைதரவில்லை என்றும் தமிழ் விவசாயிகள் தெரிவித்தனர்.

மேற்படி வயல் வெளிகளில் அத்துமீறி காணிகளை பிடித்திருப்பது பற்றிய பிரச்சனையை ஆராய பல மாதங்களுக்கு

17

## ஒலுவில் பொறியியல் பீடம்

# "இலங்கைப் பொறியியல்துறைக்கு இடர்"

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் துறைக் கல்வியில் ஏற்படுத்தப் - பட்டுள்ள பின்னடைவானது இலங்கையின் பொறியியல்துறைக்குப் பெரும் இடரை உருவாக்கக்கூடியது என அங்கு கல்வி கற்கும் மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பொறியியல்துறைப் பீட மாணவர் அமைப்பினால் கல்வி அமைச்சர் மற்றும் உயர்கல்வி இராசாங்க அமைச்சர்

17



ஒலுவில் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
026 2227677
malaimurasu@hotmail.com 075 4252042

# இனியும் பேசுவோம்..... தொடர்ந்து

கடந்த வாரம் ஸ்ரீலங்காவற்கு வருகை தந்த அமெரிக்கப் பிரதிநிதியுடன் தமிழரின் தேர்வு செய்யப்பட்ட அரசியல் தலைமையானது பேச்சுக்களை நடாத்தியிருந்தது.

இப்பேச்சுக்கள் தொடர்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் கருத்தைத் தெரிவிக்கையில் அமெரிக்க சிரேட்ட பிரதிநிதிக்கு தமிழர்களின் பிரச்சனைகள் தொடர்பாக விளக்கம் அளித்தோம் என ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார்.

அவர் அலையூடயங்களுக்கு வழங்கிய செவ்வியை அடுத்து எழுந்த கேள்வி தமிழர்களின் பிரச்சனை என்ன என்பது பற்றித் தெரியாமலா உலகின் பிரதிநிதிகள் ஸ்ரீலங்காவிற்கு வருகை தருகின்றனர் என்பதே!

யுத்தம் முடிந்து சில நாட்களுக்குப் பின்னர், அதாவது 2009 மே மாதத்தின் பின்னர் தொடங்கித் தற்போது வரை பன்னாட்டுப் பிரதிகள் பலர் ஸ்ரீங்கா தேசத்திற்கு வருகை தந்துள்ளனர்.

அவர்களுள் யாரெல்லாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சந்தித்து உரையாடுகின்றரோ அவர்களுக்கு எல்லாம் தமிழரின் பிரச்சனைகளை விளங்கப்படுத்தினோம் - பேசினோம் என்று அச் சந்திப்புக்களுக்குப் பின்னர் அறிக்கைவிடுவதும், அதற்கும் ஒரு படிநிலை தாண்டிச் சென்று குறித்த பன்னாட்டுப் பிரதிநிதியால் பிரதிநதித்துவப்படுத்தும் நாடு தமிழரின் ஓயாத பிரச்சனைக்குத் தீர்வைக் கண்டு கொள்ள உதவும் என்ற உறுதிப்பாட்டை வழங்கியிருப்பதாக நம்பிக்கையுடன் அறிக்கை விடுவதும் இன்றும் தொடர்கின்றது.

குறித்த காலத்திற்கு ஒருமுறை பன்னாட்டுப் பிரதிநிதிகள் புதிதாக நியமனம் செய்யப்படுவர். அவ்வாறு புதிதாக நியமனம் செய்யப்படுபவர் தமது பதவிக்காலத்தில் ஒருமுறையேனும் ஸ்ரீலங்காவிற்கு உத்தியோகபூர்வ வருகையை நிகழ்த்துவர். அவர் தமிழரின் பிரதிநிதிகளைச் சந்திப்பர். அச்சந்திப்பின் பின் எமது பிரதிநிதிகள் மேலே குறிப்பிட்ட அறிக்கையை அனைத்து ஊடகங்களுக்கும் வெளியிடுவர்.

காலங்காலமாக இந்நடவடிக்கை தொடர்வதை நாம் அவதானிக்கின்றோம்.

இம்முறை அமெரிக்க பிரதிநிதி அம்மையார் சமந்தா பவர் ஸ்ரீலங்காவில் வெளியிட்ட கூற்று ஒன்று முக்கியமாக அவதானிக்கப்பட வேண்டியது. அதாவது ஒவ்வொரு நாளும் அமெரிக்க சனாதிபதி ஒபாமா ஸ்ரீலங்கா தொடர்பாகத் தன்னிடம் விடயங்களைக் கேட்டு அறிந்து கொள்வார் என்பதே அது. ஆக, தமிழர்களின் பிரச்சனையை நாம் அம்மையாருக்கு விலாவாரியாகத் தெரிவிக்க வேண்டிய எந்தத் தேவையும் இருந்திருக்க வாய்ப்பில்லை.

போரின் பின்னர் எமது பேச்சுக்களின் ஊடாக எந்தத் தீர்வும் எட்டப்படவில்லை என்பதுதான் இற்றைவரைக்கும் நடைபெற்ற பேச்சுக்களின் இறுதி அடைவாகப் பதிவாகியுள்ளது.

ஆனால் தமிழர்களின் ஆயுத பலம் மேலோங்கியிருந்த காலங்களில் விடுதலைப்புலிகளும், ஸ்ரீலங்கா அரசும் சர்வதேசத் தலையீட்டுடன் நடத்திய பேச்சுக்களில் எல்லாம் தமிழர்களின் தீர்வு பற்றியே விலாவாரியாக ஆராயப்பட்டு ஒவ்வொரு பேச்சுக்களின் இறுதியிலும் சிலகாலங்களுக்காவது நிலைத்திருக்கக் கூடிய தற்காலிகத் தீர்வுகள் எட்டப்பட்டமையை நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும்.

எனவே பேச்சுக்களில் ஈடுபடும்போது பலம். மற்றும் தெளிவு ஆகிய இரண்டு விடயங்கள் தீர்வு நோக்கி நகரத் தமிழ் மக்களுக்குத் தேவையானவையாக இருக்கின்றன.

தற்போதுள்ள அரசியல் தலைமையானது மக்கள் பலத்துடன் செயலாற்றுகின்றது. வடக்குக்கிழக்கின் மொத்தத் தமிழ் மக்களின் பெரும்பாலான வாக்குகளைத் தமதாக்கிக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குப் பலம் என்பது பற்றிய பயம் தேவையில்லாதது.

ஆனால் தெளிவு என்பதில் தான் இக்கூட்டமைப்பு மிகப் பலவீனமாக இருக்கின்றது. அதன்படி முதலாவதாக தமிழர்களுக்கான தீர்வின் திட்டவட்டமான வடிவம் எது என்பதை இன்று வரை கூட்டமைப்பு நிலைநிறுத்தத் தவறியிருக்கின்றது.

அதிகாரப்பரவலாக்கத்தின் கீழான தீர்வு என மட்டும் அறிவிக்கும் தமிழ்த் தலைமை அவ்வதிகாரப் - பரவலாக்கத்தின் ஊடாக எந்தத் தீர்வு எட்டப்பட்டால் தமிழ் மக்கள் நிம்மதியாக இருப்பார்கள் என்பதைத் திட்டவட்டமாக வரையறுக்கவில்லை. இதனால் எமது பிரச்சனைக்கு எவரோ ஒருவர் தீர்வை முன்மொழியும் வாய்ப்பை அவ்வெவரோ ஒருவருக்கு வழங்கியுள்ளது.

இரண்டாவது கூட்டமைப்பில் உள்ள கட்சிகளுக்கு இடையிலான தெளிவு.

இத்தெளிவைப் பெற்றுக்கொள்ளும் வரைக்கும், நாளாந்தம் தமிழ் மக்கள் தொடர்பாக அமெரிக்க சனாதிபதிக்கு அறிவிக்கும் சமந்தா பவர் அம்மையாருக்குக் கூட, நமது சந்திப்பின் போது எமது பிரச்சனைகளை நாம் விளங்கப்படுத்தியுள்ளோம் என்று ஊடக அறிக்கையை விடுவதைத் தவிர எமக்கு எவ்வித விமோசனமும் இச் சந்திப்புக்களால் நிகழப்-போவதில்லை!

## சேவை நலன் பாராட்டு

மூதூர்

மூதூர் முஸ்லிம் மகளிர் கல்லூரியில் அதிபராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றுச் செல்லும் அதிபர் ஏ.எஸ்.உபைத்துல்லாவின் சேவையைப் பாராட்டி ஏற்பாடு செய்யப்பட்ட சேவை நலன் பாராட்டு விழா 25.11.2015 புதன்கிழமை இடம்பெற்றது

அதிபரின் சேவையைப் பாராட்டி "அறுவடை" என்னும் பெயரில் நூலொன்றும் வெளியிடப்பட்டது.

அச்சுதன்



இலங்கை வங்கியின் திருகோணமலைப் பிராந்திய முகாமையாளராகக் கடமையாற்றிப் பணியோய்வுபெறும் திரு.சுவாமிநாதஐயர் அவர்களின் சேவையைப் பாராட்டி பிரியாவிடை நிகழ்வொன்று வங்கியாளர்களால் நடாத்தப்பட்டது.



நகரம்

தி.இ.கி.மி. ஸ்ரீகோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் ஆரம்பபிரிவு உப அதிபர் திரு. சங்கரதாஸ் அவர்கள் பிரதி அதிபராக புனித சூசையப்பர் கல்லூரிக்குச் செல்வதையொட்டிய பிரியாவிடை சிறப்பாக நடைபெற்றது.

கதிரவன்

## இருபது வருடம் கடூழியச் சிறை

கைக்குண்டுகள் இரண்டு மற்றும் கைச்சுடுகலனொன்றைத் தம்வசம் வைத்திருந்த சாம்பல்தீவு வாசிக்கு இருபது வருடக் கடூழியச் சிறை தண்டனையாக வழங்கப்பட்டுள்ளது.

திருகோணமலை சிறுப்பிட்டி சாம்பல்தீவு பகதியைச் சேர்ந்த ஐம்பத்தியொரு வயாதான செல்லத்தம்பி சோமசுந்தரம் என்பவருக்கே இத் தீர்ப்பு வழங்கப் பட்டுள்ளது.

உப்புவெளி காவல்துறையினரால் தாக்கல் ெய்யப்பட்ட இவ்வழக்கில் 2007ம் ஆண்டு குறித்த நபர் காவல்துறையால் கைதாகும் போது அவரிடம் மேற்போந்தவை இருந்தமை வெளிக்காட்டப்பட்டிருந்தது.

## சுகாதாரத் தொண்டர்களுக்கு நியமனம் வழங்க நடவடிக்கை எடுப்பேன்

நீண்டகாலமாகப் பணியாற்றிவரும் சுகாதாரத் தொண்டர்களுக்கு நிரந்தரப் பணிநியமனங்களை வழங்க தன்னாலான நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்கொள்வேன் என கிழக்கின் சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்

மாகாணசபை உறுப்பினர் எம்.அன்வரின் வேண்டுகோளை அடுத்தே இந்த உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த பல வருடங்களாகத் தன்னார்வத் தொண்டர்களாக சுகாதாரத் தொண்டர்கள் பணியாற்றிவருகின்றனர். அவர்களுக்குப் பதிலாக பலருக்குக் கிழக்கில் அரசியல் நிமனங்கள் வழங்கப்பட்டதாகத் தெரிவித்து அவர்கள் போராட்டங்களிலும் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.



## மூதூரில் இருந்து கட்டுநாயக்கவிற்கு 350.00வில் நேரடி பேருந்துச் சேவை

மூதூரிலிருந்து கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கான நேரடி பேருந்துச்சேவை இன்று முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

சேருவிலையில் முற்பகல் 11 மணிக்கு தயாராகும் பேருந்து மூதூரிலிருந்து நண்பகல் 12 மணிக்கு பயணிக்கும்.

மேலும் கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து நண்பகல் ஒரு மணிக்கு மூதூருக்கான பேருந்து புறப்படும்.

## காசிம் நகர் பிரதான வீதி சேதம்

குச்சவெளி காசிம் நகர் கிராமசேவகர் பிரிவு பிரதான மஸ்ஜித்வீதி குண்டும் குழியுமாக இருப்பதால் பாதசாரிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். சுனாமிக்குப்பின்னர் சீர் செய்யப்பட்ட இவ்வீதிக்கு வடிகான்கள் போடப்படவில்லை. தெருவிளக்குகள் பொருத்தப்படவில்லை இரவில் நடமாடுவதும் பெரும் ஆபத்தானது என பொது மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

றபாய்தீன்

## தம்பலகாமம் சாரதா வித்தியாலய புலமைப் பரிசிலாலருக்குப் பாராட்டு

தம்பலகாமம்

தம்பலகாமம் இ.கி.மி சாரதா வித்தியாலயத்தில் புலமை பரிசில் பரிட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்காண பாரட்டு விழா 25-12-2015அன்று பாடசாலை அதிபர் திருமதி.உதயகுமார் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் இடம் பெற்றது இவ் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக திருகோணமலை வலயக் கல்விப் பணிப்பாளர் திரு ந.விஜேந்திரன் உதவி கல்வி பணிப்பாளர் எஸ் .கணேசலிங்கம் கோட்டக் கல்வி அதிகாரி .சி .மதியழகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

புலமை பரிசில் பரிட்சையில் அதி கூடிய புள்ளிகளைப் பெற்ற ஐந்து மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

ஹலீம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
மட்டக்களப்பு செய்திகள்

# சான்றுகள் கண்டெடுப்பு

## பூர்வீக குடிகளில் ஒன்றான நாக வம்சத்தினர் சம்பந்தமான தொல்பொருள்கள்

வந்தாறுமூலை, பாற்சேத்துகுடாப் பகுதியில் நாகர் ஆட்சி இருந்தமைக்கான தொல்பொருள்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. வரலாற்றுத்துறை பேராசிரியரும் யாழ். பல்கலைக்கழக வேந்தருமான சி.பத்மநாதன் உட்பட தொல்லியல் ஆய்வுக்குழு உறுப்பினரும் ஆசிரியருமான செ.பத்மநாதன் ஆகியோர் இப்பிரதேசத்தில் கடந்த திங்கட்கிழமை முதல் 03 நாட்களாக ஆய்வு மேற்கொண்டனர்.

இதன்போது, தமிழ்ப்பிராமி எழுத்து பொறிக்கப்பட்ட மட்கல ஓடுகள், கறுப்பு மற்றும் சிவப்பு மட்கல ஓடுகள், அக்கால மக்களின் வழிபாட்டுக்குரிய தாயத்துக் கருங்கற்கள், பெருங்கற்கால பண்பாட்டுச் சான்றான ஈமத்தாழி துண்டம், தமிழ் அரசிளங்குமாரிகள் அணிந்த சிவப்பு முத்துமணியொன்று, கைவளையல் துண்டுகள் வெளிநாட்டில் உற்பத்தியான ரூலட் மட்கல ஓடுகள், நன்கு சுடப்பட்ட பெரிய செங்கற்கள் என்பன கண்டெடுக்கப்பட்டன.

இங்கு கண்டெடுக்கப்பட்ட சான்றுகளில் மணிநாகன்பள்ளி வேள்நாகன் எனும் தமிழ்ப்பிராமி எழுத்துகள் காணப்பட்டன.

அத்துடன், வந்தாறுமூலை நீர்முகப்பிள்ளையார் கோவிலில் கருங்கல்லினால் வடிவமைக்கப்பட்ட விநாயகர் சிலையை ஆய்வு செய்தபோது, சிலையில் மணிநாகன்பள்ளி எனும் தமிழ்ப்பிராமி எழுத்துகள் பொறிக்கப்பட்டிருந்தன.

ஆதியான இலங்கையில் பூர்வீக இனக்குழுக்களில் ஒன்றாக காணப்பட்ட தமிழர் மூதாதயரான நாக வம்சத்தினர் இந்துமதத்தில் தங்களை இணைத்துக்கொண்ட காலப்பகுதியில் விநாயகர் வழிபாட்டை கடைப்பிடித்தனர் என்பதுக்கு இந்த விநாயகர் சிலை சான்றாகும்.

## மீளக் குடியேறியோருக்கு போதிய வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை


புணானை

### நா.உ யோ.சீனித்தம்பியிடம் மக்கள் முறைப்பாடு

மட்டக்களப்பு, எல்லைக் கிராமங்களான புணாணை மேற்கு மற்றும் கிழக்குப் பகுதிகளுக்கு கடந்த வியாழக்கிழமை சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன், அப்பிரதேச மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடினர். மீள்குடியேறிய தங்களுக்கு இதுவரையில் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லையென நாடாளுமன்ற உறுப்பினரிடம் அக்கிராம மக்கள் தெரிவித்தனர். புணாணை மேற்கிலுள்ள முள்ளிவட்டவான், பொத்தானைப்பாலம் ஆகிய கிராமங்களிலிருந்து யுத்த சூழல் காரணமாக வெளியேறிய 150 க்கும் மேற்பட்ட தமிழ்க் குடும்பங்களும் சில முஸ்லிம் குடும்பங்களும் தங்கள் இருப்பிடங்களில் மீள்குடியேற ஆரம்பித்துள்ளனர்.

கோறளைப்பற்று தெற்கு கிரான் பிரதேச செயலகப்பிரிவில் 32 தமிழ்க் குடும்பங்களும் 32 முஸ்லிம் குடும்பங்களும் முதற்தடவையாக மீள்குடியேற அனுமதிக்கப்பட்டது.

இதன்போது, 8 சீமெந்து பக்கெட்டுகளும் 12 கூரைத்தகரங்களும் வழங்கப்பட்டன. இம்மக்களுக்கு வீடு உட்பட வசதிகளை விரைவாக பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பதாகவும் கூறினார்.



## ஏற்பட்ட கைகலப்பினால் ஒருவர் பலி

புதூர்

மட்டக்களப்பு - புதூர் பகுதியில் சகோதரர்களுக்கு இடையில் ஏற்பட்ட கைகலப்பின்போது படுகாயமடைந்தவர் கடந்த வியாழக்கிழமை பிற்பகல் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் உயிரிழந்ததாக காவல்துறையினர் தெரிவித்தனர். மட்டக்களப்பு, புதூர், வீச்சுக்கல்முனை மூன்றாம் குறுக்கை சேர்ந்த இ.பாலேந்திரன் (44வயது) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவித்தனர்.

குறித்த நபரின் சகோதரருக்கும் இவருக்கும் இடையே இடம்பெற்ற வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறிய நிலையில் பொல்லினால் தாக்கப்பட்ட நிலையில் குறித்த நபர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த நபர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தாக்கிய உயிரிழந்தவரின் சகோதரரை காவல்துறை கைது செய்துள்ளது.

## அனைவருக்கும் கண்பார்வை

மட்டக்களப்பு




மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் கண்பார்வை குறைந்தவர்களுக்கு இலவச கட்ரக் சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சுகாதார அமைச்சினால் கடந்த வியாழக்கிழமை மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கி ஆரம்பமாகிய 330 கிலோமீற்றர் துாரத்தைக் கொண்ட ஒளிக்கான பாதயாத்திரையை முன்னிட்டே கடந்த புதன்கிழமை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் இலவச கட்ரக் சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன.

சத்திர சிகிச்சை ஆரம்ப வைபவம் வைத்தியசாலையின் பிரதி பணிப்பாளர் கிறேசி தலைமையில் நடைபெற்றது.

பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணியக அதிகாரி டொக்டர் என். நவலோஜிதன் கண் சத்திரசிகிச்சை நிபுணர் டொக்டர் ஏக. டயஸ் உட்பட வைத்தியதிகாரிகள், தாதிய உத்தியோகத்தர்கள், சுகாதார அமைச்சு அதிகாரிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

சகலருக்கும் கண் பார்வையை வழங்குவதே இந்தப் பாதயாத்திரையின் நோக்கம் என்பது குறிப்பிடத்தக்கது. அதற்கமையவே இந்நிகழ்வும் இடம்பெற்றது.

## வன்முறை ஒழிப்பு வாரம்

சர்தேச பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு வாரத்தினை முன்னிட்டு மட்டக்களப்பு காவியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் பால்நிலை வன்முறைக்கு எதிரான பதினாறு நாட்கள் செயற்பாட்டு வாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வாக பால்நிலை வன்முறைக்கு எதிராக செயற்படுவோம் என்னும் வாசகம் பொறிக்கப்பட்ட கைப்பட்டி அணியும் திட்டம் ஒன்றை நடாத்தியது அந்த நிலையம். மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்றிலில் இது தொடர்பான நிகழ்வு காவியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் தலைவி திருமதி.அஜித்குமார் தலைமையில் நடைபெற்றது. இதன்போது பெருமளவான பெண்கள் கலந்துகொண்டு கைப்பட்டி அணியும் திட்டத்திலும் இணைந்துகொண்டனர். சிறுவர்கள் மற்றும் பெண்கள் மீதான வன்முறையினை தடுத்து அவர்களுக்கு பாதுகாப்பினை வழங்கும் வகையில் இந்த திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நிலையத்தின் தலைவி தெரிவித்தார்.



## பாதுகாப்பை மீள வழங்க வேண்டும்

### மா.உ சிப்லி

கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் மக்களுக்கு செய்யும் சேவையை முடக்கும் செயலாகவே காவல்துறை பாதுகாப்பு அகற்றப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சிப்லி பாறூக் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபையின் அமர்வு கூடியபோது கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களின் காவல்துறை பாதுகாப்பு அகற்றப்பட்டமை தொடர்பில் அவசர பிரேரணை ஒன்றினை முன்வைத்து உரையாற்றினார்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சிப்லி பாறூக், கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருந்த இரண்டு காவல்துறை உத்தியோகத்தர்களின் பாதுகாப்பு எந்தவித முன்னறிவித்தலுமின்றி அகற்றப்பட்டது.


இந்த செயற்பாடானது கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களை பாரிய அசௌகரியங்களுக்கு உள்ளாக்கியுள்ளதுடன் மக்கள் பணியினை நிறைவேற்றும் விடயத்திற்கும் அச்சுறுத்தல் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மின் கம்பத்தில் மோதி பலி

கொழும்பு மட்டக்களப்பு நெடுஞ்சாலையில் ஏறாவூர் மைலம்பாவெளியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் காயமடைந்ததாக ஏறாவூர் காவல்துறையினர் தெரிவித்தனர்.

கொழும்பிலிருந்து மட்டக்களப்பை நோக்கிச் சென்று கொண்டிருந்த வேன் மைலம்பாவெளியில் வீதியின் மருங்கில் நடப்பட்டிருந்த அதி உயர் 33 ஆயிரம் வோல்டேஜ் மின்சார கம்பிகளைத் தாங்கிச் செல்லும் கம்பத்துடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

தூக்கக் கலக்கத்தில் கட்டுப்பாட்டை மீறி வீதித் தடத்திலிருந்து தவறி வீதியின் மறு பக்கத்தில் இருந்த மின் கம்பத்தில் மோதி வான் தரித்து நின்றுள்ளது.



அதிகாலை 4.20 அளவில் இடம்பெற்ற இந்த விபத்தினால் ஏறாவூர் நகரம் உட்பட இன்னும் சில பிரதேசங்களில் சில மணி நேரங்கள் மின்சாரம் தடைப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இலங்கைச் செய்திகள்

# வாஸ் தூக்கு மேடைக்கு!

## குற்றமற்றவர் என்கிறார் கொல்லப்பட்டவரின் தந்தை



**கொ**லைவழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்ட முன்னாள் பிரதிக்காவல் மா அதிபர் வாஸ் குணவர்தன மரணதண்டனையைப் பெற்றுள்ளார்.

கொழும்பு பம்பலப்பிட்டியை சேர்ந்த வர்த்தகர் மொஹமட் ஷியாமை கடத்தி கொலை செய்த சம்பவம் தொடர்பிலேயே குற்றவாளிகளாக இனங்காணப்பட்டுள்ள முன்னாள் பிரதிக் காவற்துறை மா அதிபர் வாஸ் குணவர்தன, அவரது புதல்வர் ரவிந்து குணவர்தன உட்பட ஆறு பேருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

மேல் நீதிமன்றத்தின் மூன்று பேர் கொண்ட விசேட நீதிபதிகள் இந்த தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளனர்.

இலங்கையின் காவற்துறை வரலாற்றில் பிரதிக் காவற்துறை மா அதிபருக்கு மரண தண்டனை தீர்ப்பு வழ்ஙகப்பட்டமை இதுவே முதல் முறையாகும்.

குசல சரோஜினி வீரவர்தன, அமேந்திர செனவிரத்ன ஆகிய மேல் நீதிமன்ற நீதிபதிகளின் இணக்கத்துடன் நீதிபதிகள் குழுவின் தலைவரான நீதிபதி லலித் ஜயசூரிய 802 பக்கங்களை கொண்ட வழக்கின் தீர்ப்பை அறிவித்தார்.

எனினும் கொல்லப்பட்டவரின் தந்தை பிரத்தியேகச் செய்தியூடகமொன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போது வாஸ் குற்றமற்றவர் என்றும் அவ்வாறு தானே நேரில் வந்து சாட்சியமளிக்கத் தயார் என்றும் கூறியிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# கோத்தா எஸ்கேப்

## நால்வர் பொறுப்பு கூற வேண்டும்



**ர**க்னாலங்கா பாதுகாப்பு நிறுவனத்தில் இடம்பெற்றதாக கூறப்படும் ஊழல் மோசடிகளுக்கு பொறுப்பு கூறவேண்டிய-வர்களை பாரிய ஊழல் மோசடிகளுக்கு எதிரான ஜனாதிபதி ஆணைக்குழு இன்று பெயரிட்டுள்ளது.

இதன்படி, முன்னாள் கடற்படை தளபதிகளான அத்மிரால் ஜெயந்த பெரேரா மற்றும் அத்மிரால் ஜயனாத் கொலம்பகே, அவன்காட் நிறுவனத்தின் நிஷங்க சேனாதிபதி, மற்றும் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் சுஜாதா ஜயவர்தன ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இதேவேளை, "ரக்னா லங்கா" பாதுகாப்பு நிறுவனத்தில் இடம் பெற்றதாக கூறப்படும் முறைகேடுகள் தொடர்பில் வாக்கு மூலம் வழங்குவதற்காக முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோட்டாபய ராசபக்ஸ முன்னாள் கடற்படை தளபதிகளான அத்மிரால் ஜெயந்த பெரேரா மற்றும் அத்மிரால் ஜயனாத் கொலம்பகே ஆகியோர் பாரிய ஊழல் மோசடிகளுக்கு எதிரான ஆணைக்குழுவில் முன்னிலை -யாகிமை குறிப்பிடத்தக்கது.

# சனாதிபதிக்குக் கமலேஸ் பாராட்டு



**பொ**துநலவாய அமைப்பின் தலைவராக சனாதிபதி மைதிரிபால சிறிசேன செயற்பட்ட காலப்பகுதியில் பல நல்ல திட்டங்கள் முன்னெடுக்கப் பட்டுள்ளதாக அந்த அமைப்பின் செயலாளர் கமலேஸ் சர்மா தெரிவித்துள்ளார்.

மோல்டாவில் இன்று ஆரம்பமாகவுள்ள பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்பதற்காக அந்நாட்டிற்கு விஜயம் செய்துள்ள கமலேஷ் சர்மா ஸ்ரீலங்கா ஊடகவியலாளர்களை சந்தித்து கலந்துரையாடிய போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# "மக்களின் வெறுப்புணர்வே மாணவனின் மரணம்"



**வ**டக்கில் மாணவர் ஒருவர் தொடருந்திற்கு முன்னால் பாய்ந்து தனக்குத்தானே தண்டனை கொடுத்துக் கொண்ட சம்பவம் வடக்கு கிழக்கு மக்கள் மத்தியில் உள்ள திக்கற்ற வெறுப்புணர்வை எடுத்துக் காட்டுகிறது.

இதனை தொடர விடாது தடுப்பது அரசாங்கத்தின் தலயாய கடன் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் ராஜவரோதயம் சம்பந்தன் நாடாளுமன்றத்தின் ஊடாக கோரியுள்ளார்.

பாதீடு தொடர்பான இன்றைய விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்தார்.

இந்த இளம் மாணவன் தனது உயிரை மாய்து கொண்ட சம்பவத்தினை அரசாங்கமும் நாடும் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும்.

அவர் மரணமாவதற்கு முன்னர் எழுதிய குறிப்பில் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்துவதன் மூலம் வடக்கு கிழக்கு மக்களின் நிலைப்பாட்டினையும் வெளிப்படுத்தியுள்ளார்.

இப்படியான சம்பவங்கள் தொடர்வதை நாம் அனுமதிக்க கூடாது.

ஸ்திரதன்மைக்கு பங்கம் ஏற்படுத்துவதை நாம் விரும்பவில்லை.

ஆகவே இது குறித்து மேலும் கால தாமதம் செய்யாது உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து ராஜவரோதயம் சம்பந்தன் தமது உரையில் வலியுறுத்தியுள்ளார்.

# புலமைப் பரிசில் –சாதாரண தரப்பரீட்சைகளில் மாற்றம்

**இ**லங்கையில் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் மற்றும் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சை என்பவற்றில் மாற்றங்கள் கொண்டு வரப்படவுள்ளதாக கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் எதிர்வரும் ஜனவரியில் புதிய கல்விமுறை அறிமுகப்படுத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையும் சாதாரண தரப்பரீட்சையும் மாணவர்களுக்கு அதிக சுமையை ஏற்படுத்துவதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

எனவே பெற்றோருக்கும் மாணவர்களுக்கு மன-உளைச்சலை ஏற்படுத்தாத வண்ணம் இந்த இரண்டு பரீட்சைகளையும் திட்டமிட உத்தேசிக்கப்பட்டுள்ளன.


எனினும் கல்வியாளர்களுடன் கலந்துரையாட வேண்டியிருப்பதால் தற்போதைக்கு எதுவும்



உறுதிப்படுத்தப்படவில்லை என்று காரியவசம் குறிப்பிட்டுள்ளார்

# தாயகப் பிரதேசமெங்கும் நினைவுகூரல்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலைமுரசு MALAIMURASU உலகச் செய்திகள்

சவுதி

## ஐம்பது பேருக்கு ஒரே நாளில் மரணதண்டனை

சவுதி அரேபியாவில் ஒரே நாளில் 50க்கும் அதிகமானவர்களுக்கு மரண தண்டனை நிறைவேற்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

அரசாங்க விரோத ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டவர்களுக்கு பயங்கரவாத குற்றச்சாட்டின் அடிப்படையில் இவ்வாறு மரண தண்டனை விதிக்கப்பட உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அல்-ரியாத் இணையத்தளத்தில் இது தொடர்பில் செய்தி வெளியிடப்பட்டிருந்த போதிலும் அது தற்போது நீக்கப்பட்டுள்ளதாக சவுதி செய்திதாளான ஒகாஸ் குறிப்பிட்டுள்ளது.

எவ்வாறாயினும், சர்வதேச மன்னிப்புச் சபை இது தொடர்பில் தாம் அதிக கவனம் செலுத்தியுள்ளதாக தெரிவித்துள்ளது.

## ஜப்பானியத் தமிழறிஞர் நொபோரு கரஷிமா காலமானார்



நொபோருவுடன் சிகாகோ பல்கலைத் தமிழ்ப் பேராசிரியர் கலாநிதி அண்ணாமலை

நொபோரு கரஷிமா ஒரு வரலாற்று அறிஞர். தமிழக வரலாற்றை வித்தியாசமான கோணத்தில் பார்த்து எழுதிய அறிஞர் என சிகாகோ பல்கலைக்கழக வருகைதரு விரிவுரையாளர் பேராசிரியர் அண்ணாமலை பிபிசி உலகச் சேவைக்குச் செவ்வியுள்ளார்.

“சமூகம் எப்படி இயங்கியது, எப்படி மாறியது என்பது தெரியாமல் அரசியல் வரலாற்றை - ஆட்சி வரலாற்றை- புரிந்துகொள்ள முடியாது என்னும் கொள்கையில் ஆழமான நம்பிக்கை கொண்டவர்.

தமிழகத்தின் மன்னர் ஆட்சிகளைப் பேரரசுகளின் ஆட்சிகளாகப் பார்த்து வரலாறு எழுதிய பழைய தலைமுறை வரலாற்று ஆய்வாளர்களிடமிருந்து வேறுபட்டுத் தமிழக வரலாற்றைப் பார்த்தவர். இன்றைய தமிழ்த் தேசியத்துக்கு உரம் போடும் செய்திச் சுரங்கமாக அவர் தமிழக வரலாற்றைப் பார்க்கவில்லை.

அன்றைய தமிழ்ச் சமூகத்தின் வாழ்முறையை அறிந்துகொள்ளும் செய்திச் சுரங்கமாகவே அவர் கல்வெட்டுகளைப் பார்த்தார்.

அரசர்களின் போர் வெற்றிகளைப் பறைசாற்றும் சாதனமாக மட்டும் அவற்றை அவர் பார்க்கவில்லை.


கல்வெட்டுகளிலிருந்து அரச வெற்றிகள் பற்றி நாம் கேட்கும் உரத்த குரலை மட்டுமல்லாமல், அவற்றிலிருந்து வரும் முனகல்களையும் கேட்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். இந்த முனகல்களில்தான் சாதாரண மக்களின் குரலைக் கேட்கலாம்.” என நொபொரு கூறியிருப்பதாக அவர் தெரிவித்தார்.

## எடை குறைந்த உலோகம் கண்டுபிடிக்கப்பட்டது

உலகிலேயே மிகவும் எடை குறைந்த உலோகம் உருவாக்கப்பட்டுள்ளது.

“மைக்ரோலாட்டிஸ்” (Microlattice) என அழைக்கப்படும் இந்த உலோகம், முன்பு கண்டுபிடிக்கப்பட்ட “ஸ்டைரோபோம்” (Styrofoam) என்ற உலோகத்தைவிட 100 மடங்கு எடை குறைந்ததாகும்.

இந்த உலோகம், 99.99 சதவீதம் காற்று நிரம்பிய, 100 நானோமீட்டர் தடிமன் உடைய சிறிய உலோகக் குழாய்களை இணைத்து உருவாக்கப்பட்டுள்ளது.



இந்தியா

## 3 மனைவி - 8 குழந்தைகள் இரண்டு குழந்தைகள் மாயம்

### ஈழ அகதித் தகப்பன் மீது சந்தேகம்

மண்டபம் அகதி முகாம் அருகே குழந்தைகளை கொலை செய்திருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் குடும்பஸ்தர் ஒருவரை காவல்துறை விசாரணைக்கு உட்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்காவின் மன்னார் மாவட்டத்தை சேர்ந்த ராபர்ட் என்பவர் தமிழகம் அகதிமுகாமில் வசித்து வந்துள்ளார்.

இவர் மூன்று திருமணங்களை செய்துள்ளதாகவும் இவருக்கு 8 குழந்தைகள் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இவர் கடந்த 6 மாதங்களுக்கு முன் பெண் குழந்தைகளை அடித்து துன்புறுத்தியதாகவும் இவரால் மற்றக் குழந்தைகளுக்கு ஆபத்து ஏற்படும் என மண்டபம் அகதிகள் முகாமில் தங்கியிருந்தவர்கள் காவல்துறையிடம் முறைப்பாடு பதிவுசெய்துள்ளனர்.

இந்த நிலையில் கடந்த 5 தினங்களுக்கு முன் இவரின் குழந்தைகள் மரியகிரினா மற்றும் கீர்த்தி ஆகியோர் காணாமல் போயுள்ளனர்.

பாகிஸ்தான்

## கடைசி நிமிடத்தில் தப்பினார் மரணதண்டனைக் கைதி




மரண தண்டனைக் கைதி ஒருவர் தூக்கிலிடப்பட இருந்த கடைசி நிமிடத்தில் அதனை நிறுத்துமாறு பாகிஸ்தான் அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

2009 ஆம் ஆண்டு கொலை வழக்கு ஒன்றில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள அப்துல் பாசித்தை, பக்கவாதமும், காசநோயும் தாக்கியுள்ள நிலையில், அவரை தூக்கில் போட மனித உரிமை அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்து வந்தன.

இந்நிலையில், கடைசி நிமிடத்தில், அவரை தூக்கில் போடுவதை 2 மாதங்களுக்கு நிறுத்தி வைக்குமாறு அதிபர் மம்னூன் உசேன் உத்தரவிட்டார்.

பாகிஸ்தான் அதிபர் மாளிகை விடுத்துள்ள செய்திக்குறிப்பில், எந்த நிலையிலும், மனித உரிமைகளில் சமரசம் செய்து கொள்ள முடியாது என குறிப்பிடப்பட்டுள்ளது.

## வெள்ளை மாளிகைக்குள் பாய்ந்தவர் கைது



அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தம் குடும்பத்தோடு மத வழிபாட்டில் ஈடுபட்டிருந்த வேலையில் , வெள்ளை மாளிகையின் பாதுகாப்பு வேலியை தாண்டிய நபர் ஒருவரை அமெரிக்க பாதுகாப்பு படையினர் நேற்று கைது செய்துள்ளனர்.

ஜோசப் கெபுடோவாகிய இந்நபர் அமெரிக்க தேசிய கொடியை தமது உடம்பில் கட்டிக்கொண்டு வெள்ளை மாளிகையின் பாதுகாப்பு வேலியை தாண்டியுள்ள நிலையில் புலனாய்வு அதிகாரிகளால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

## ஐரோப்பிய நாடுகள் அகதிகளைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்

### பிரான்ஸ் பிரதமர் அறிவிப்பு



ஐரோப்பிய நாடுகளில் குடியேற இனி அகதிகளுக்கு இடமில்லை என பிரான்ஸ் நாட்டு பிரதமரான மேனுவல் வால்ஸ் அறிவித்துள்ளார்.


அகதிகளுக்கு புகலிடம் கொடுப்பது தொடர்பாக ஏற்கனவே ஐரோப்பிய நாடுகள் பல பிரச்சனைகளை சந்தித்து வருகிறது.

அகதிகளுக்கு புகலிடம் அளிப்பதன் மூலம் இரண்டாம் உலகப்போருக்கு பின்னர் அதிக அளவிலான பிரச்சனைகளை ஐரோப்பிய நாடுகள் சந்தித்து வருகின்றன.

இனிமேலும் இதனை அனுமதிக்க முடியாது. ஐரோப்பிய நாடுகளின் எல்லைகளை கட்டுப்படுத்தினால் மட்டுமே அவற்றின் தலைவிதியை தீர்மானிக்கும்.

ஜேர்மனி சான்சலரான ஏஞ்சிலா மெர்க்கல் பிரான்ஸ் அதிபரை சந்திப்பதற்கு சில மணி நேரங்களுக்கு முன்னர் பிரான்ஸ் பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## நைஜீரியாவில் 250 மில்லியன் டொலர் பெற்றோல் களவு



நைஜிரிய தேசிய பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தில், பெற்றோல் எரிபொருள் விநியோக குழாயில் இருந்து இரகசியமாக எரிபொருள் திருடப்பட்மையால், சுமார் 250 மில்லியன் இழப்பு ஏற்பட்டுள்ளதாக அந்த நாடு தெரிவித்துள்ளது.

வணிக தலை நகரான லோகோஸ்வில் இருந்து 250 கிலோ மீற்றர் தூரம் கொண்ட இந்த குழாயில் கடந்த வருடம் முழுவதும் இவ்வாறு எரிப்பொருள் திருடப்பட்டதாக தெரியவந்துள்ளது.

நாள் ஒன்றுக்கு இதன் வழியாக 35 மில்லியன் லீட்டர் எரிபொருள் விநியோகிக்கப்-பட்ட போதிலும் அவை குழாயின் முடிவுரும் பகுதியில் சரியான அளவில் விநியோகிக்கப்படவில்லை, எனவே இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட போது இந்த மோசடி கண்டுப்பிடிக்கப்பட்டுள்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU



# தாயகச் செய்திகள்

# அரசியல் கைதிகளின் விடுதலைக்காக தன் உயிரை மாய்த்த மாணவனுக்கு அஞ்சலி

### கலங்கிய முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்



இலங்கை சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு கோரி பாடசாலை மாணவன் தன்னை மாய்த்துக் கொண்ட சம்பவம் ஒரு துன்பியல் சம்பவம், அது உளரீதியாக பாதித்திருக்கின்றது என முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் கூறியுள்ளார்.

யாழ்.கோண்டாவில் புகைவண்டி தரிப்பிடத்திற்கு அருகில் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரி தனது பாடசாலை கொப்பியில் கடிதம் எழுதி வைத்துவிட்டு, தன்னை மாய்த்துக் கொண்ட இ.செந்தூரனின் உயிரிழப்பு தொடர்பாக முதலமைச்சர் கருத்து வெளியிட்டார.

குறித்த மாணவனின் சம்பவம் எம்மை உளரீதியாக பாதித்திருக்கின்றது. அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் உளசுத்தியுடன் நாம் நடவடிக்கை எடுத்துவரும் நிலையில் மாணவனின் உயிரிழப்பு பேரிழப்பாகும். ஆனால் எங்களுடைய உயிரிழப்புக்கள் கடந்த கால ஆட்சியாளர்களினால் கணக்கிலெடுக்கப்-படவில்லை. எங்கள் உணர்வுகளை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை. இந்நிலையில் இந்த அரசாங்கமாவது அதனை புரிந்து கொண்டு அரசியல் கைதிகளுக்கு விடிவு கிடைக்க வழி செய்ய வேண்டும்.


இந்நிலையில் உயிரிழந்த மாணவனின் கோரிக்கை நிறைவேறவும், அவனுடைய ஆத்மா சாந்தியடையவும் இறைவனை பிரார்த்திக்கிறேன் என்றார்.

## பெயர் மாற்றம் செய்ய வேண்டாம் என்றே தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது

**சி.வி.கே**

யாழ்ப்பாணத்தின் தீவுப் பகுதியில் அமைந்துள்ள நயினாதீவின் பெயர் தொடர்ந்தும் நயினாதீவு என்று இருப்பதையே நாங்கள் வலியுறுத்தி, தீர்மானம் நிறைவேற்றியிருந்தோமே தவிர பெயர் மாற்றம் செய்ய வேண்டும் என்று அல்ல என வடமாகாண சபை அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார். வடமாகாண சபையின் கடந்த அமர்வின் போது, நயினாதீவு என்பதன் பெயரானது, நாகதீபம் என்று மாற்றப்பட்டுள்ளதாகவும் அது, நயினாதீவு என்று மாற்றப்படவேண்டும் என அவைத்தலைவர் ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருந்தனர்.

இந்த தீர்மானம் தொடர்பில், தெற்கில் பல எதிர்ப்புக்கள் கிளம்பியது. நாகதீப என்ற பெயரை மாற்றினால், கொழும்பிலிலுள்ள தமிழ்ப் பெயர்களை மாற்றுவோம் என இராவணபாலய அமைப்பு ஆர்ப்பாட்டம் செய்தது. அதன்பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன், வடமாகாண சபையின் தீர்மானம் முட்டாள் தனமானது என்றும் நாகதீப என்று இருந்தால் பரவாயில்லை என்றும் கூறியிருந்தார். இந்த விடயம் குறித்து அவைத்தலைவரிடம் வினவியபோது, "நயினாதீவு என்ற பெயரே தற்போதும் பயன்பாட்டில் உள்ளது. அதுவே பதிவுப் பெயர். ஆனால், நயினாதீவின் 8ஆம் மற்றும் 12ஆம் வட்டாரங்களை, நாகதீப மேற்கு தெற்கு என அழைத்தனர். இந்த மாற்றத்தால் நயினாதீவையும் நாகதீப என்று அழைக்கக்கூடும் என்பதால், அந்த தீர்மானத்தை நிறைவேற்றினோம். என்று அவர் கூறினார்.



## விடுதலைப் புலிகளின் நகைகள் கிடைக்கவில்லை

**மணற்காடு** விடுதலைப் புலிகளின் காலத்தில் புதைக்கப்பட்டதாகக் கூறப்படும் நகைகளை தோண்டியெடுத்த முயற்சி இதுவரையில் எவ்வித பயனும் இல்லாமல் போயுள்ளது.

வடமராட்சி, மணற்காட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகளின் காலத்தில் புதைக்கப்பட்டதாகக் கூறப்படும் தங்க நகைகள் மற்றும் பணத்தை மீட்டெடுக்கும் வகையில், மருதங்கேணி பிரதேச கே.கனகேஸ்வரன் தலைமையில் பூகோள மற்றும் சுரங்க யாழ். மாவட்ட கனியவள அத்தியட்சகர், மத்திய சுற்றுச்சூழல் பாதுகாப்பு அத்தியட்சகர், தொல்பொருள் திணைக்கள அத்தியட்சகர், மணற்காடு கிராம அலுவலர் ஆகியோர் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வு நடவடிக்கையில் எவையும் சிக்கவில்லை. சுமார் 7 அடி ஆழத்துக்கு மண் அகழப்பட்ட போதும், கட்டட இடிபாடுகள் மாத்திரமே கிடைத்தன.

## கசிப்பு விற்பனை செய்த இரு பெண்கள் கைது

**கொடிகாமம்**

கொடிகாமம், நாகநாதன் வீதியிலுள்ள வீடொன்றில் கசிப்பு விற்பனை செய்து வந்த இரண்டு பெண்களை கடந்த புதன்கிழமை (25.11.2015) கைது செய்துள்ளதாக கொடிகாமம் காவல் நிலைய பொறுப்பதிகாரி டி.எம்.சிந்தக்க என்.பண்டார தெரிவித்தார். காவல்துறையினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், சம்பவ இடத்துக்குச் சென்ற காவல்துறை 54 மற்றும் 22 வயதுடைய இரண்டு பெண்-களையும் கைது செய்ததுடன், அவர்களிடமிருந்து 3775 மில்லிலீற்றர் கசிப்பையும் மீட்டுள்ளனர். இது தொடர்புடைய மேலதிக விசாரணைகளை காவல்துறையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

## 9700 ஏக்கர்கள் இராணுவத்தின் பிடியில்

யாழ்.மாவட்டத்தில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான சுமார் 9700 ஏக்கர் வரையிலான நிலம் தொடர்ந்தும் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் இருந்து வருகிறது.

இந்நிலையில், குறித்த நிலத்திற்குச் சொந்தமான 9819 குடும்பங்களை சேர்ந்த மக்கள் 7 பிரதேச செயலர் பிரிவுகளில் அமைக்கப்பட்டுள்ள 31 நலன்புரி முகாம்களிலும், உறவினர் மற்றும் நண்பர்கள் வீடுகளிலும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

பொதுமக்களுக்குச் சொந்தமான சுமார் 172 வீடுகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதுடன், 16 பாடசாலைகளும், 19 ஆலயங்களும், விமான நிலையம், மீன்பிடி துறைமுகம், வைத்தியசாலை, வங்கிகள், பேருந்து நிலையம் உள்ளடங்களலாக 12 பொது இடங்களும் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டின் கீழ் தொடர்ந்தும் வைக்கப்பட்டிருக்கின்றன.

## விசேட கல்வி வலயம்

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்கள் பிரதமரின் ஆலோசனைக்கமைய விசேட கல்வி அபிவிருத்தி வலயமாக மாற்றப்பட்டு கல்வி அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என கல்வி இராஜாங்க அமைச்சர் வி. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

இந்தியாவுக்கு அகதியாக சென்ற சுமார் 3000 பட்டதாரிகள் தொழிலின்றி இருப்பதாக அறியப்பட்டுள்ளது. அவர்களுக்கு பட்டதாரி ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டு ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எதிர்காலத்தில் எடுக்கப்படவுள்ளது எனவும் தெரிவத்தார்..

## மோட்டார் ஷெல் மீட்பு

**சாவகச்சேரி**

யாழ். சாவகச்சேரி, மீசாலைப் பகுதியில் அமைந்துள்ள வளாகமொன்றில் கடந்த புதன்கிழமை மாலை மோட்டார் ஷெல் ஒன்று மீட்கப்பட்டதாக சாவகச்சேரி காவல்துறையினர் தெரிவித்தனர்.

குப்பைகளை தாக்கும் பொருட்டு கிடங்கு வெட்டியபோது மோட்டார் ஷெல் அடையாளம் காணப்பட்டது.

இது தொடர்பில் காவல் துறையினருக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இராணுவத்தினருடன் சென்ற அவர்கள் அந்த ஷெல்லை மீட்டனர்.

## மறு வயற் பயிர் விதைகள் வழங்கி வைப்பு

யாழ்ப்பாண மாவட்டத்தில் வளலாய், வசாவிளான், தெல்லிப்பளை பிரதேசங்களில் மீள்குடியேறிய விவசாயிகளுக்கு, வடமாகாண விவசாய அமைச்சால் மறுவயற்பயிர் விதைகள் திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப்பயிற்சி நிலையத்தில், கடந்த திங்கட்கிழமை விநியோகிக்கப்பட்டுள்ளது. மீள்குடியேறிய விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடனும் மறுவயற்பயிர்ச் செய்கையை ஊக்குவிக்கும் நோக்குடனும் நிலக்கடலை, பயறு, உழுந்து ஆகிய மறுவயற்பயிர் விதைகளை விநியோகிக்கும் இந்நிகழ்ச்சி, பிரதி விவசாயப் பணிப்பாளர் கி.ஸ்ரீபாதசுந்தரம் தலைமையில் நடைபெற்றதுடன், வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மறுவயற்பயிர் விதைகளை பயனாளிகளுக்கு வழங்கினார்.

## நாங்கள் கொலை செய்யவில்லை

### மன்றாடியுள்ளார் சந்தேக நபர்



நாங்கள் குற்றம் செய்யவில்லை. எங்களை விடுதலை செய்யுங்கள் என புங்குடுதீவு மாணவி கொலை வழக்கின் சந்தேகநபர்கள் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் கடந்த திங்கட்கிழமை (23.11.2015) மன்றாட்டமாகக் கேட்டக்கொண்டனர். கொலை செய்தீர்கள் என்பதற்கு அப்பால், கொலையுடன் தொடர்புபட்டுள்ளீர்களா என்ற ரீதியிலும் விசாரணைகள் இடம்பெறும் என நீதவான் செல்வநாயகம் லெனிக்குமார் இதன்போது கூறினார். இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சந்தேக நபர்களின் மரபணுப் பரிசோதனை அறிக்கை இன்றும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. சம்பவம் நடைபெற்ற தினத்தில் கொழும்பில் நின்றதாகக் கூறிய சந்தேகநபர், அதனை தன்னால் உறுதிப்படுத்த முடியும் எனக்கூறினார். எனவே இதனைக் கூறியுள்ளதாகவும் அது தொடர்பில் விசாரணைகள் இடம்பெறும் எனவும் நீதவான் பதிலளித்தார். இதனையடுத்து சந்தேகநபர்களை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 1ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டார்.

புங்குடுதீவு மாணவி கடந்த மே மாதம் 13ஆம் திகதி வன்புணர்வுக்குட்-படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் 9 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு, இந்த வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







எண் இல்லாதவரே
கண் இல்லாதவர்
எழுத்தில்லாதவரே
கழுத்தில்லாதவர்– ஊனக்
கண்ணிலாவிட்டால் என்ன? –கல்விக்
கண்ணிருந்தால் போதும்
காணலாம் இப்புவி !
வெள்ளைப் பிரம்பு ஒன்று போதும்
வெற்றிப் படிகள் ஏற– தன்
நம்பிக்கை கொண்டால் போதும்
தரணி உன் காலின் கீழே !

ஊனம் என்ற ஒன்று– உந்தன்
உடலில் இல்லை நம்பு !
உண்மை ஊனம் உந்தன்
உளத்தில் தானே உண்டு !
ஊர்தான் உண்டு பிச்சை எடுக்க– அங்கு
குளமும் உண்டு தண்ணீர் குடிக்க– வேறு
ஆர்தான் உண்டு எனக்கு? என்று
அகத்தால் உடைந்தால் வாழ்வு போச்சு !
ஊழிதான் பெயர்ந்தாலும்– உந்தன்
ஊக்கமது கைவிடாதே !

மாற்றுத் திறமை கொண்டோர்
மண்ணிதிலே கோடி உண்டு !
பாட்டுஇ விளையாட்டு– நாட்டு
அரசியல்இ நடிப்புஇ எழுத்து என்று
போற்றும் திறமையது
எல்லோர்க்கும் ஒவ்வொன்று !
ஏற்றது உனக்கு எது?
என்பதை நீ கண்டு கொண்டால்
போற்றும் உலகு உனை– அதில்
போய் மறையும் உனது குறை !

அல்பேட் ஐன்ஸ்ரீன்
அலெக்சாண்டர் கிரகம் பெல்
வீதொபன் இசையில்
வின்ஸ்ரன் சச்சில் அரசியலில்
ஜோஜ் வொசிங்டன்– பின்னர்
றூஸ்வெல்ட்டும் அவ்வாறே
நடிப்பில் றொபின் வில்லியம்
நம்மில் பிரீதி சிறினீவாசன்
நாட்டியத்தில் சுதா சந்திரன்
காட்டிய திறமை பாரு– நீ
கட்டிலை விட்டு நகரு !

ஜெய்பூர் காலிருக்க
ஜெயிப்பதிலே என்ன தடை?
முச்சக்கர வண்டி கண்டும்
முடங்கிக் கிடப்பதென்ன?
சக்கர நாற்காலி ஏன்?
சரிந்து நீ படுத்திருந்தால்
சாக்குப் போக்கு தவிர்
சாதித்துக் காட்டு பார்ப்போம் !
தூக்கு சம்மட்டி
தூளாகும் மலைகளெல்லாம் !

ந.அருட்செல்வன்,
ஈச்சந்தீவு

## காரணம் இல்லாமல்

காரியம் இல்லை

நெருப்பில்லாமல் புகையில்லை
நிலமில்லாமல் நீரில்லை:
நீரில்லாமல் வழமில்லை
நிதியில்லாமல் வாழ்வில்லை!

கண்ணில்லாமல் பார்வையில்லை
கருவில்லாமல் முட்டையில்லை:
பெண்ணில்லாமல் பிள்ளையில்லை
பொன்னகை விரும்பாத பெண்ணில்லை!

காதல் எண்ணம் கலைவதில்லை
கடலை என்றும் ஓய்வதில்லை:
கல்விக்கு எல்லை என்பதேயில்லை
கல்வியின் ஆழத்தை கண்டவரில்லை!

வாழ்வது என்பது உண்மையில்லை
மரணம் வருவதை தடுப்பாரில்லை:
வருவதும் போவதும் விதிப்படி நடக்கும்
வசந்தம் வாடையை இயற்கை நடத்தும்!

விதியை மதியால் வெல்வது அரிது
வெற்றியும் தோல்வியும் நடைமுறை நிகழ்வு:
ஆதியும் அந்தமும் அறியாத படைப்பு
அதுவே ஆண்டவரின் திருவருட் சிறப்பு!

கலாபூசணம் சிவஸ்ரீ அ.அரசரெத்தினம
சேனையூர்

## ஒளியென்று காணும்?

உணர்வுகளால் உருப்பெற்ற
பாக்கள் - அவை உலராது
மணம்வீசும் பூக்கள்!

கனவுகளும் கற்பனையும்
சாகும் - இந்த
கனம்மிக்க படைப்புகளோ வாழும்!

இரவு பகல் தோன்றுவது
இயற்கை - புது இயந்திரங்கள்
தோன்றுவது செயற்கை!

வரவென்றால் இறப்பல்ல
ஜனனம் - இவ் வாழ்வினிலே
செலவென்றால் மரணம்!

இன்பமதும் துன்பமதும்
வாழ்கை - அதை ஏற்றிடவே
உருவெடுத்த யாக்கை!

துன்பத்தில் துவளாது
உள்ளம் - இந்த தொல்லுவகை
எப்போதும் வெல்லும்!

காதலெனில் இருமனங்கள்
சேர்கை - தமிழ்க் காதையெனில்
கவிஞர்தரும் வார்த்தை!

சாதனைகள் வரலாற்றுச்
சிற்பம் - இதை சரித்திரங்கள்
என்றுவகம் செப்பும்!

அ.கௌரிதாசன்

## வாழ்வுரிமைக் கேட்டு




## இராஜராஜ சதுர்வேதி மங்கலம் (கந்தளாய்)




இரண்டாவது பிராமிச்ச சாசனங்கள் மூலம் கிடைக்கப்பெறும் தகவல்கள்.

பண்டைய இலங்கையில் பிராமணர்களின் நடத்தையைப் புரிந்து கொள்ள மகாவம்சம், பிராமிச்சாசனங்கள் என்பன வழங்கும் தகவல்களைச் சற்று விரிவாகப் பார்க்கலாம்.



### மகாவம்சம் தரும் தகவல்கள்

சிங்கள, பௌத்த கோட்பாடுகளுக்கு முன்னிலை கொடுத்து இலங்கையின் வரலாற்றினை காலவரிசைப்படி தொகுத்துத்தரும் நூல் மகாவம்சம். அதனது பல்வேறு பகுதிகளில் பிராமணர் தொடர்புடைய தகவல்கள் கிடைக்கின்றது. இலங்கையில் பௌத்தம் பரவுவதற்கு முன்பாக (கி.மு. 543 - 505) விஜயனின் வருகையின் போது அவனுடன் வந்த உபதிஸ்ஸ எனும் அமைச்சர் ஒரு பிராமணர் என்றும் அவன் அனுராதபுரத்திற்கு வடக்கே உபதிஸ்ஸகம எனும் கிராமத்தினை உருவாக்கினான் எனவும் மகாவம்சம் சொல்கின்றது. விஜயன் வாரிசில்லாமல் இறந்தபின்னர் இந்தியாவிலிருந்து வந்த விஜயனது உடன்பிறந்தவரின் மகனான பண்டுவாசுதேவன் (கி.மு.504 - 474) இலங்கையின் இரண்டாவது அரசனாக பதவி ஏற்றுக்கொண்டான். விஜயனது இறப்பிற்கும், பண்டுவாசுதேவனின் வருகைக்கும் இடைப்பட்ட காலத்தில் பிராமணனான உபதிஸ்ஸன் (கி.மு. 505 - 504) இலங்கையில் அதிகாரம் செலுத்தியிருந்தான். இதனைத் தொடர்ந்து பண்டுகாபய (கி.மு. 437 - 367) மன்னன் ஒரு அரசனுக்குத் தேவையான போர்ப்பயிற்சிகளையும், அரச நடவடிக்கைகளையும் பண்டுல(ன்) எனும் பிராமணரிடமிருந்து கற்றுக்கொண்டான். பண்டுலவின் மகன் சந்திர(ன்) ஒரு பிராமணனுக்குரிய கடமைகளைச் செய்துவந்ததோடு பண்டுகாபய மன்னனிடம் இராணுவத் தளபதியாகவும் சேவகம் செய்தான்.

அனுராதபுரத்தினைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிசெய்த தேவநம்பியதீசன் (கி.மு. 307 - 267) காலத்திலேயே பௌத்தமதம் இலங்கையில் முறைப்படி அறிமுகப்படுத்தப்பட்டது. இம்மன்னன் அவனது சமகால வடஇந்திய ஆட்சியாளனான பேரரசன் அசோகச் சக்கரவர்த்திக்கு பரிசுப்பொருட்களை அனுப்பி வைத்தபோது தேவநம்பியதீசனின் மருமகன் அறித்தா என்பவருடன் அரசரவைப் புரோகிதனான பிராமணனும் சென்றான் என அறியப்படுகின்றது.

பின்னாட்களில் பௌத்த மதத்தில் அறிமுகத்தின் அடையாளமாக தேவநம்பியதீசனால் போதிமரக்கிளை நடும் வைபவம் இடம்பெற்றபோது அந்நிகழ்வில் திவக்க என்ற பிராமணன் கலந்துகொண்டான். தேவநம்பியதீசன் காலத்தில் இப்பிராமணன் முக்கியத்துவம் பெற்ற ஒருவனாக இருந்தான் என மகாவம்சம் குறிப்பிடுகின்றது.

வைத்திய கலாநிதி த.ஜீவராஜ்

தொடரும்.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்டம் காண்கிறதா அரசாங்கம்!!!

கே.சஞ்சயன்
www.tamilmirror.com



அமைச்சர்களுக்குள் அதிகரித்து வரும் உள்முரண்பாடுகளும், அமைச்சர்கள் ஒருவரை ஒருவர் விமர்சித்தல்களும் அதிகரித்துள்ளதும், தற்போதைய அரசாங்கத்தின் எதிர்காலம் குறித்த கேள்விகளை எழுப்பியிருக்கின்றன. கடந்த ஜனவரி மாதம் நடந்த ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர், மைத்திரிபால சிறிசேன, ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றதையடுத்து, நல்லாட்சி அரசாங்கம் பொறுப்பேற்றது.

ஆனால், இப்போது நடப்பது நல்லாட்சியா என்று அரசாங்கத்துக்குள் இருக்கும் அமைச்சர்களே கேள்வியெழுப்பும் அளவுக்கு, உள்முரண்பாடுகள் தீவிரமடைந்துள்ளன. நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர், ஐ.தே.கவும், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து அமைத்த கூட்டு அரசாங்கம், சர்வதேச அழுத்தங்களைச் சமாளிப்பதில் வெற்றி கண்டிருக்கிறது. நெகிழ்வுத் தன்மையற்ற கொள்கையைக் கடைப்பிடித்த - சர்வதேச சமூகத்துடன் முரண்பாடுகளை வளர்த்துக் கொண்ட, மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தினால் ஏற்பட்ட பல்வேறு நெருக்கடிகளை, தற்போதைய அரசாங்கம் வெற்றிகரமாகச் சமாளித்துக் கொண்டிருக்கிறது.

ஆனால், இரு பிரதான கட்சிகளும் இணைந்து அமைக்கும் கூட்டு அரசாங்கம், அரசியல் பிரச்சினைகளின் தீர்வுக்குத் துணையாக அமையும் என்ற கருத்தை வலுவிழக்கச் செய்யும் வகையில், அமைச்சர்களுக்கிடையிலான முரண்பாடுகள் வெளிப்படத் தொடங்கியிருக்கின்றன. குறிப்பாக, அவன்ட் கார்ட் நிறுவனம் தொடர்பான நடவடிக்கைகள் விவகாரத்தில், அரசாங்கத்துக்குள் தீவிரமான கருத்து மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.

அவன்ட் கார்ட் நிறுவனத்துக்குச் சார்பாக நாடாளுமன்றத்தில் அறிக்கை வெளியிட்ட, சட்டம், ஒழுங்கு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரான திலக் மாரப்பன, அரசியல் அழுத்தங்களினால் பதவி விலக நேரிட்டது. இத்துடன் இந்த விவகாரம், முடிவுக்கு வரவில்லை. அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, அவன்ட் கார்ட் நிறுவனம் சார்பாகவே கருத்துக்களை வெளியிடுகிறார். அமைச்சர் ஹரின் பெர்னான்டோவின் கருத்தும், அதற்குச் சாதகமாகவே இருப்பதைக் காண முடிகிறது. அதேவேளை, அமைச்சர்கள் ராஜித சேனாரத்னவும் சம்பிக்க ரணவக்கவும், அவன்ட் கார்ட் நிறுவனத்துக்கு எதிராக மட்டுமன்றி, அதற்கு ஆதரவு தருவதாக ஐ.தே.க அமைச்சர்களையும் விமர்சித்து வருகின்றனர்.

மைத்திரிபால சிறிசேன - ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்துக்கு, இந்த விவகாரம் பலமுனைத் தலைவலிகளை ஏற்படுத்தியிருக்கிறது. அவன்ட் கார்ட் நிறுவனம் தொடர்பான விசாரணைகள், நடவடிக்கைகளை நியாயமான முறையில் முன்னெடுப்பது முதலாவது பிரச்சினை. அதற்குச் சாதகமாகவும், எதிராகவும் அமைச்சர்கள் மோதிக் கொள்வது இன்னொரு பிரச்சினை. இந்த மோதலின் விளைவாக, அரசாங்கத்தில் உள்ளவர்களே தமக்குள்

> அமைச்சர்களுக்கிடையில்
> தலை தூக்கியிருக்கும்
> மோதல்களை ஆரம்பத்திலேயே
> கட்டுப்படுத்த
> ஜனாதிபதியும், பிரதமரும்
> தவறுவார்களேயானால்,
> அது அரசாங்கத்தை நிச்சயம் ஆட்டம்
> காண வைக்கும்...
> அது உடனடியாக ஆட்சிக்
> கவிழ்ப்பு வரைக்கும் செல்லலாம்.

சேற்றை அள்ளி வாரிக்கொள்வது, மற்றொரு பிரச்சினை. இதைவிட, தமக்குச் சார்பானவர்கள், ஆதரவாளர்களின் நிலைப்பாடுகளுக்கு ஒத்துழைக்க வேண்டிய இக்கட்டான நிலை, இன்னொரு பிரச்சினை. அதைவிட, அவன்ட் கார்ட் மீதான நடவடிக்கைகள், விசாரணைகள் விடயத்தில், அந்த நிறுவனத்தின் கடுமையான குற்றச்-சாட்டுகளையும் அரசாங்கம் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது.

இதனை, படையினருக்கு எதிரான ஒரு நடவடிக்கையாக திருப்பி விடும் முயற்சிகளும் நடந்து கொண்டிருக்கின்றன. இந்தக் கட்டத்தில், அமைச்சர்களுக்கிடையில் தொடங்கியிருக்கும் மோதல்கள், பரஸ்பர குற்றச்சாட்டுகள் விடயத்தில், மைத்திரிபால சிறிசேன மற்றும் ரணில் விக்கிரமசிங்க போன்றோரால், இறுக்கமான போக்கைக் கடைப்பிடிக்க முடியவில்லை என்பதே உண்மை. இறுக்கமான ஒரு தலைமைத்துவத்தின் கீழ், இவ்வாறான குற்றச்சாட்டுகள், முரண்பாடுகள் நீடிக்க முடியாது. மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில், இவ்வாறான ஒரு நிகழ்வை காண முடிந்திருக்காது. அவ்வாறு குரல் எழுப்பியிருந்தால் அவர்கள் உடனடியாகவே பதவியில் இருந்து தூக்கப்பட்டிருப்பார்கள். துரத்தப்பட்டிருப்பார்கள். தாம், மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் எவ்வாறு அடக்கி வைக்கப்பட்டிருந்தோம் என்பதை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ராஜித சேனாரத்ன போன்றவர்கள் பகிரங்கமாகவே வெளிப்படுத்தியிருந்தனர். ஆனால், இப்போதைய அரசாங்கத்தில் அத்தகைய இறுக்கமான போக்கு இல்லை. இது ஜனநாயகத்தன்மையைப் பிரதிபலிப்பதாக இருந்தாலும், தலைமைத்துவக் கட்டுக்கோப்பை கேள்விக்குள்ளாக்கியிருக்கிறது. அதைவிட, அமைச்சர்களுக்கிடையில் கூட்டுப் பொறுப்பின்மை இருப்பதையும் உறுதிப்படுத்தியிருக்கிறது.

கூட்டுப் பொறுப்பில்லாத ஓர் அரசாங்கத்தினால், நீண்டகாலம் தாக்குப் பிடிக்க முடியாது என்பதே உண்மை. தற்போதைய அரசாங்கத்துக்குள் கூட்டுப் பொறுப்பின்மை தலைதூக்கியுள்ளமைக்கு முக்கிய காரணம், இரு பிரதான கட்சிகளும் இணைந்து ஆட்சியை அமைத்துள்ளமை தான். ஒரே அரசாங்கத்துக்குள் இருந்தாலும், பச்சைக்கும், நீலத்துக்கும் இடையிலான வேறுபாடுகள் இன்னமும் களையப்படவில்லை. எல்லா அமைச்சர்களுமே, தமது கட்சியின் நிறத்துக்குள் நின்று செயற்படவே முனைகின்றனர். பொதுநிலைப்பட்டு இயங்கத் தயாராக இல்லாததால், அரசியலில் முதிர்ச்சி பெற்ற அமைச்சர்களால் கூட, கூட்டுப் பொறுப்புடன் நடக்க முடியாதுள்ளது.

அரசாங்கத்துக்கு ஏற்படும் முரண்பாடுகள், ஊடகச் சந்திப்புகளில் எப்போது பகிரங்கமாகப் பேசப்படத் தொடங்கியதோ, அப்போதே இந்த அரசாங்கத்தின் ஆணி வேர் ஆட்டம் காணத் தொடங்கி விட்டது. முன்னைய அரசாங்கத்தில், ஊழல்கள், மோசடிகள் நடந்த போது, கைகட்டிக் கொண்டு நின்று விட்டு, கடைசி நேரத்தில் எதிரணியுடன் இணைந்து கொண்டவர்கள், இப்போதைய அரசாங்கத்தைக் காட்டமாகவும் பகிரங்கமாகவும் விமர்சிக்கத் தொடங்கியுள்ளமை விந்தையானது. அதுபோலவே, ஐ.தே.க அமைச்சர்கள் பலரும், சர்ச்சைக்குரிய விவகாரங்களில், அமைதியைக் கடைப்பிடிக்கத் தவறியுள்ளதும், குழப்பங்கள் தீவிரமடையக் காரணமாகியுள்ளது. ராஜித சேனாரத்னவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் அடக்க முடியவில்லை. காரணம், அவர் தான் முதன்முதலில், மஹிந்தவை விட்டு மைத்திரிபால சிறிசேனவுடன் வெளியே வந்தவர்.

ஜனாதிபதி பதவியில் மைத்திரிபால சிறிசேன அமர்வதற்கு முக்கிய காரணமானவர் அவர். எனவே, அவருக்கு நன்றிக்கடன் செலுத்த வேண்டிய நிலை ஜனாதிபதிக்கு இருக்கிறது. அதேவேளை, விஜயதாஸ ராஜபக்ஷ போன்றவர்களையும் ரணில் விக்கிரமசிங்கவினால் அடக்க முடியாதிருக்கிறது. இங்கு வேடிக்கையான விடயம் ஒன்று உள்ளது. அவன்ட் கார்ட் விவகாரத்தில் மோதிக் கொள்ளும் ராஜித சேனாரத்னவும், விஜயதாஸ ராஜபக்ஷவும், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்குள் இருந்து தான் வெளியே வந்தவர்கள். அரசாங்கத்துக்குள்ளேயே ஒருவர் மீது ஒருவர் சேறுபூசத் தொடங்கியுள்ளமை, கூட்டு எதிரணி என்ற பெயரில் செயற்படும் மஹிந்த ராஜபக்ஷ தரப்புக்கு வாய்ப்பாக மாறியுள்ளது. அவர்களுக்குத் தான், இந்த முரண்பாடுகள் அதிக ஆதாயத்தைப் பெற்றுத் தரக் கூடியன.

தற்போதைய அரசாங்கம் ஆட்டம் கண்டால், ஐ.தே.கவினருடன் இணைந்து ஆட்சியமைக்கலாம் என்று மஹிந்த தரப்பு கனவு காண்பதாகவே தெரிகிறது. அவன்ட் கார்ட் விவகாரம், அமைச்சரவைக்குள் குழப்பங்களை ஏற்படுத்தியுள்ள அதேவேளை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்குத் திட்டங்கள் தீட்டப்படுவதாகவும், ஊடகங்களில் செய்திகள் வெளியாகின்றன. மங்கள சமரவீரவைப் பிரதமராக்கும் திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படுவதாகவும், முன்னாள் ஜனாதிபதி சந்திரகா குமாரதுங்கவே இந்தத் திட்டத்துடன் காய்களை நகர்த்துவதாகவும் கூட சில ஊடகங்கள், செய்திகளை வெளியிட்டுள்ளன. ஆனால், நடைமுறையில் இது, சாத்தியமான ஒன்றாக இருக்காது என்பதே உண்மை. தேசிய அரசாங்கம் தொடர்பாக இரு பிரதான கட்சிகளும் செய்து கொண்டுள்ள உடன்பாட்டின் முக்கியமான அம்சம், கட்சி தாவுவோரை ஏற்றுக்கொள்ளக் கூடாது என்பதே-யாகும். பல்வேறு கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், ரணில் விக்கிரமசிங்கவும் மைத்திரிபால சிறிசேனவும் தலைமை தாங்கும் இருகட்சிகளும், இந்த இணக்கப்பாட்டை மீறமாட்டாது.

இந்த இரண்டு தலைவர்களுக்குமே, சர்வதேச ஆதரவு உள்ளது. அரசியல் செல்வாக்கும் உள்ளது. கட்சித் தாவலை ஊக்குவிக்குவித்தால் அது, பாரதூரமான விளைவை ஏற்படுத்தும் என்பதை அவர்கள் அறிவார்கள். எனவே, அரசாங்கத்தில் இருக்கும், முரண்பாடுகள், கட்சித் தாவல் பற்றிய இணக்கப்பாட்டுக்கு சவாலாக மாறும் என்று எதிர்பார்க்க முடியாது. அதேவேளை, ஐ.தே.கவின் உதவியுடன், சுதந்திரக் கட்சியினர் ஆட்சியமை-ப்பதற்கு, மைத்திரிபால சிறிசேன இடமளிக்கமாட்டார். சந்திரிகா குமாரதுங்கவும் அத்தகையதொரு குறுக்கு வழியில் தனது ஆதரவாளர்களை வழி நடத்த மாட்டார். இது, அவர்களின் இமேஜை உடைத்து விடும் என்பதை அவர்கள் அறிவார்கள். எனவே, இப்போதைய அரசாங்கத்துக்கு உள்ளிருந்து ஆபத்து ஏற்படும் என்று கருத முடியாது.

ஆனால், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினர் கணிசமாக வெளியேறி, மஹிந்த ராஜபக்ஷ அணியுடன் இணைந்து கொள்ளலாம். ஆனாலும் அது, ஆட்சியைக் கவிழ்க்கும் அளவுக்குச் செல்லும் என்று எதிர்பார்க்க முடியாது.

அதேவேளை, அமைச்சர்களுக்குள் தலைதூக்கியிருக்கும் மோதல்களின் விளைவாக, பரஸ்பரம் வீசும் குற்றச்சாட்டுகள், அரசாங்கத்தின் நற்பெயருக்குக் களங்கத்தை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை. இதுபற்றி அமைச்சர் ஒருவரை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கடுமையாகக் கண்டித்தாக செய்திகள் வெளியாகின. ஆனால், அது விஜயதாஸ ராஜபக்ஷ அல்ல என்றும், அவர் அந்தச் சம்பவம் நடந்ததாகக் கூறப்பட்ட காலத்தில், தாய்லாந்து சென்றிருந்தார் என்றும் நீதி அமைச்சினால் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது.

இந்த அறிக்கை, இந்த விடயத்தில் விஜயதாஸ ராஜபக்ஷ கொண்டிருக்கிற அச்சத்தை வெளிப்படுத்தியிருக்கிறது. எவ்வாறாயினும், அமைச்சர்களுக்கிடையில் தலைதூக்கும் மோதல்களை, ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்த ஜனாதிபதியும் பிரதமரும் தவறுவார்களேயானால் அது, அரசாங்கத்தை ஆட்டம் காண வைக்கும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வாழ்வியல் 81

# பழிவாங்கலும் வன்முறையும்

வி. என். சந்திரகாந்தி





சமூகத்தில் நடந்தேறும் அதிகமான குற்றச்செயல்களுக்கு அடிப்படையாக அமைவது பழிவாங்கும் மனப்பாங்குதான். களவு, பாலியல் அத்துமீறல்கள் நில எல்லை தாண்டல்கள். மனிதனிடம் இயற்கையிலேயே வேரூன்றியுள்ள மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை நிமித்தமானவையே. ஆம் மூவகை ஆசை-களையும் சட்ட திட்டங்களுக்கு அமைவாக அடைந்துகொள்வதில் எந்த தவறும் இல்லை. ஆனால் பெண்ணாசை காரணமாக பாடசாலை செல்லும் மாணவியை கடத்திச்-சென்று வன்புணர்வில் ஈடுபடுதல், பிறர் வீட்டை உடைத்து அவர்கள் கஸ்டப்பட்டு உழைத்து சம்பாதித்த பணம் பொருளை கொள்ளையிடுதல். எல்லையை நகர்த்தி அடுத்தவன் காணிக்கு உரிமைகோரல் போன்ற குற்றங்கள் பிறரது பழிவாங்கும் உணர்வை தூண்டுதலுக்கு போதுமானவை-யேயாகும்.

கல்வி குறைபாடு உடையவர்களிடையே பழிவாங்கும் உணர்வு மிகுந்து காணப்படுகின்றது. இனி மனிதனின் பரிணாம வளர்ச்சியை நோக்குமிடத்து ஆன்மாக்கள் பல காலம் மிருகங்களாக வாழ்ந்த அனுபவத்தை பெற்றுக்கொண்டே பின்னர் மனித பிறப்பை எடுத்ததாக கருத இடமுண்டு. மிருகங்களின் அடிப்படை வாழ்க்கையே வன்முறை சார்ந்ததுதான். இரைக்காக பிற மிருகங்களை வேட்டை-யாடி கொன்று உண்ணுதல், போட்டியான மிருகங்களை கொன்றொழித்தல் தனது துணையை அபகரிக்க நினைக்கும் தனது இன எதிரியை பழிவாங்கல், தான் தேடிய இரையை அபகரிக்க எத்தனிக்கும் தனது இன மிருகங்கள் மீது வன்முறையை பிரயோகித்தல் போன்ற அவற்றின் பண்புகள் மனிதபிறவியை எடுத்த பின்னரும் சிறிதளதாகிலும் ஒட்டிக்கொள்வதில் வியப்பில்லையல்லவா? அந்த உண்மையை புரிந்துகொள்ளும் மனிதர்கள் தமது புத்திசாலிதனத்தாலும் கல்வியறிவாலும் வன்முறை, பழிவாங்கல் ஆகிய இரு இழிசெயல்களிலிருந்து தம்மை விலக்கிக்-கொள்கின்றார்கள்.

அடுத்து சமுதாயத்தின் விதிமுறைகள் நியதிகள் என்பனவற்றுக்கு அப்பால் அரசாங்கம் சட்டம், நீதி ஆகியவற்றை அமுல்படுத்தி கண்காணித்து வருகின்றது. மக்களில் பலருக்கு கல்வி கற்கும் சந்தர்ப்பம் அமையாமல் போகலாம். ஆனால் அவர்கள் சமூக கட்டுப்பாடு-களையும் சட்டதிட்டங்களையும் தெரிந்து கொண்டு வாழ்ந்தால் வன்முறை, பழிவாங்கல் போன்ற படுபாதக செயல்களை தவிர்த்து நடக்கலாம்.

சட்டத்தை கையிலெடுக்கும் உரிமை எவருக்கும் கிடையாது. எல்லை மீறிய கோபம் காரணமாக சிலர் சட்ட வரம்புகளை மீறி எதிரியென கருதுபவர்களை தண்டிக்க விழையும் போது வன்முறையும் பழிவாங்கும் உணர்வும் மேலோங்குகின்றது. சமூகங்களி-டையே பிரச்சனைகள் உள்ளதுதான். அவற்றை கலந்துரையாடல்கள் மூலம் தீர்க்க முயற்சிக்க வேண்டும். அப்போதுதான் விடயங்கள் தெளிவு பெறும். யார் தவறுக்கு காரணமானவர்கள் என்பதை அறிய முடியும். தனது தவறை உணரும் மனிதன் அதனை திருத்த முன்வரக்கூடும். பிரச்சனையை சுமூகமாக தீர்த்துக்கொள்ளவும் முடியும்.

கலந்துரையாடல் மூலம் தீர்த்துக் கொள்ள முடியாத பிரச்சனைகளுக்கு அடுத்த கட்ட தீர்வாக சட்டமும் நீதிமன்றமும் உள்ளன. காவல்துறையும் சட்டத்தரணிகளும் மக்களது பிரச்சனைகளை தீர்ப்பதற்கு அனுசரணை வழங்குவர்.

எந்த பிரச்சனையையும் கால ஓட்டத்தில் மறந்து மன்னிக்கப்பட இடமிருக்கின்றது. தனி நபர் பழிவாங்கல் உணர்வு அனேகமாக உற்றார் உறவினர்கள் நண்பர்கள், அயலவர்கள் ஆகியோருக்கு எதிராகவே உண்டாகின்றது.

காதலை முன்னிட்ட பாதிப்புக்களும் துரோகங்களும் பழி வாங்கலுக்கான பிரதான காரணியாக உள்ளது பெண்கள் மீதான அதீத மோகம் இளைஞர்களுக்கு வெறியுணர்வை-யூட்டுகின்றது. அதற்கு தடையாக பெண்ணின் பெற்றோரோ உறவினரோ செயல்பட்டால் அல்லது அந்த பெண்ணே குறிப்பிட்ட இளைஞனை விரும்பாமல் மற்றொரு ஆடவனை விரும்பினால் அங்கு பழிவாங்கும் உணர்வு மேலோங்குகின்றது.

நண்பர்களுக்கிடையேயான முரண்பாடுகளும் முற்றி பழிவாங்கும் அளவிற்கு வளர்ந்து விடுவதுண்டு. தவறான நடவடிக்கைகளில் ஈடுபடும் நண்பர் குழாமுக்குள் நல்ல நண்பர்களும் இருந்து அவர்கள் அடாவடித்-தனங்களுக்கு ஒத்துழைக்காமல் விட்டால், சம்மந்தப்பட்ட பெற்றோரின் கவனத்திற்கு கொண்டுவந்தால், பழிவாங்கும் உணர்வு உண்டாகின்றது.

பாடசாலை மாணவர்களே போதை பொருள் பழக்கத்திற்கு உள்ளானால் நாட்டின் எதிர்காலம் என்னவாகும்? கைபேசி, மடிக்கணனிகள் ஆகியவற்றின் பயன்பாடு அதிகரித்துள்ளது. சமூக வலைத்தளங்கள் தவறான நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்-படுகின்றன.

சிலரது குற்றச்செயல்கள் காரணமாக காவல்துறையால் வழக்குதாக்கல் செய்யப்-படும் வேளை அயலவர்கள் எவராவது சாட்சி சொல்ல முன்வந்தால். வழக்கு இறுகிவிடும் என்ற பயம். அவர்களை அச்சுறுத்தி சாட்சி சொல்வதிலிருந்து தடுக்க எடுத்த முயற்சி வெற்றியளிக்கவில்லை எனின், அங்கு பழிவாங்கும் உணர்வு ஏற்படுவது சாதாரணமே!

இவை சில உதாரணங்களேயாயினும் நாட்டில் அண்மையில் நடந்தேறிக்-கொண்டிருக்கும் சம்பவங்களின் அடிப்படையிலேயே தரப்பட்டுள்ளன. பாடசாலை செல்லும் சிறுமியே தனது காதலனுடனும் அவளது நண்பனுடனும் இணைந்து திட்டமிட்டு பெற்றோரை கொலை செய்யவில்லையா? தாம் திருட்டில் ஈடுபட்டதற்கு சாட்சியாக நீதிமன்றம் வந்த ஒரு பெண்ணின் மகளை கடத்திச் சென்று கூட்டு வன்புணர்வில் ஈடுபடவில்லையா? விடுதிச்சொந்த காரரும் கராட்டி வீரரும் ஐம்பத்தினான்கு வயது நிரம்பியவருமான ஒருவரை அவருடன் நட்பு பூண்டிருந்த இருபதுக்கு மேற்பட்டோர் தடிகளால் அடித்தும் வாளால் வெட்டியும் கொலை செய்யவில்லையா?

குற்ற செயல்களுக்கு எதிராக நடப்பவர்கள் மீது பழிவாங்குவது என்பது ஒரு நியதியாகவே போய்விட்டது போல உள்ளது. பழிவாங்கும் உணர்விற்கு வன்முறையே வடிகாலாக இருக்கின்றது.

சட்டமும் நீதியும் பழிவாங்கல்களுக்கு எதிராக செயற்படுவதுபோல மதங்களும் அவ்வாறான செயற்பாடுகளை கண்டிக்-கின்றன. மதங்கள் அஹிம்சையை போதிப்பதுடன் மன்னிக்கும் சுபாவத்தை வளர்க்க வேண்டுமென அறிவுறுத்து-கின்றன. அதனால் தான் பண்பாடடைந்த சமூகங்கள் பழிவாங்கலை தவிர்த்து சட்டத்தையும் நீதியையும் போதிக்-கின்றன.

தனி நபர் பழிவாங்கலுக்கு அப்பால் சர்வதேச மட்டத்தில் அதனை ஆராய்ந்தால் இன மத மொழி வேறுபாடுகள் மனிதனை வன்முறையின் உச்சத்திற்கு கொண்டு சென்றுள்ளன. துரதிர்ஷ்டவசமாக இனங்கள் படைப்பி-லேயே வேறுபட்டுள்ளன. வெள்ளையர்கள், கறுப்பர்கள், என்ற நிறப்பிரிவுகள், மங்கோலியர், செவ்விந்தியர், நீக்ரோக்கள் போன்ற தோற்ற வேறுபாடு கொண்டவர்கள் என்று.... இனங்களுக்கிடையே ஒற்றுமை இல்லை.

மொழியை எடுத்தால் உலகில் ஆயிரக்கணக்கான மொழிகள் பேசப்படு-கின்றன. ஒரு மொழி பேசுபவருடன் மற்றொரு மொழி பேசுபவர் அனுசரித்து போவதில் பிரச்சனைகள் ஏற்படுகின்றன. ஆங்கிலம் பொது மொழியாக இருந்தாலும் அதனை பேசும் வல்லமை அனைவருக்கும் இல்லை அதனால் பல்வேறு மொழி பேசுபவர்கள் மத்தியில் புரிந்துணர்வு அருகி காணப்படுகின்றது. ஆட்சி மொழி மற்ற மொழிகளை நசுக்க பார்க்கின்றது. அது வன்முறைக்கு இட்டுச்செல்கின்றது.

இறைவனின் பெயரால் மதங்களும் ஏராளமாக உள்ளன. மதங்கள் ஒவ்வொன்றும் தமது மதத்தை தவிர ஏனையவற்றை ஏற்றுக்கொள்வது கிடையாது.

இனி மக்கள் நாடுகளால் வரையறுக்கப்-பட்டுள்ளார்கள். அனேகமாக மக்கள் எங்கு பிறந்தார்களோ அந்த நாட்டின் மீது அன்பு பூண்டு அங்கேயே வசிக்கின்றார்கள். தாய் நாட்டின் மீது பிரியமுள்ளவர்களாக இருக்கின்றார்கள். இந்நாட்களில் பல காரணங்களை முன்னிட்டு மக்கள் தாய் நாட்டை விட்டு பிரிந்து வேறு நாடுகளிலும் வாழ்கின்றார்கள். நாடுகளுக்கும் நாடுகளுக்குமிடையே எல்லை சண்டை ஆக்கிரமிப்பு பொருளாதார போட்டி என்ற பல காரணங்களை முன்னிட்டு மோதல்நிலை உள்ளது.

இன மத மொழி வேறுபாடு நாடுகளுக்கும் நாடுகளுக்குமிடையே ஆயுத போட்டியை வளர்த்துள்ளது. பேசித்தீர்க்கும் அளவுக்கு மேலால் பிரச்சனைகள் வளர்ந்து கொண்டிரு-க்கின்றன. பல காரணங்களை முன்னிட்டு தீவிரவாத இயக்கங்கள் தோன்றியுள்ளன. அவற்றின் கையில் பணம் மற்றும் ஆயுத பலம் அதிகரித்துள்ளது. பழிவாங்கும் உணர்வும் வன்முறையும் மனித குலத்தை அழிவுப்பாதை நோக்கியே அழைத்து செல்கின்றது.

வேற்றுகிரகங்களில் உயிர்வாசிகள் இருக்கின்-றார்களா என்று விஞ்ஞானிகள் பணத்தையும் நேரத்தையும் கொட்டி முயற்சிக்கின்றார்கள். எமது தாய் பூமியிலேயே ஒற்றுமையை காக்க முடியாத மனிதஇனம் வேற்றுக்கிரக வாசிகளுடன் எத்தகைய உறவை பேணப்போகின்றது?

---

# “என்னம்மா இப்படி பண்ணிட்டியேம்மா!!!”




திருகோணமலையில் விகாரை வீதிப் பகுதியில் இடம்பெற்ற ஓர் நிகழ்வு...

அவ்வீட்டில் இருபத்தியொரு வயது மதிக்கத்தக்க இளைஞன் ஒருவன் தனது இரு தங்கை, தந்தை மற்றும் பாட்டியுடன் வசித்து வந்தான். அவர்கள் வீட்டிற்கு பின்பக்கம் ஓர் வீடு உள்ளது. அவ்வீட்டில் இரு ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு பெண் தற்கொலை செய்துள்ளாள்.

அந்த இளைஞன் சுய தொழில் செய்பவன். எனவே இரவு வேளையில் நீண்ட நேரம் விழித்திருந்து வேலை செய்வான். அவ்வாறு வேலை செய்து கொண்டிருக்கும் வேளையில் அலுப்பாக இருந்தால், வெளியில் சென்று உலாவுவது அவன் வழக்கம்.

அவ்வாறு ஒரு நாள் நள்ளிரவு பன்னிரெண்டை அவர்கள் வீட்டு மணிக்கூட்டிலுள்ள குருவி கூறிச் சென்றது. இவனுக்கோ வேலை தலைக்கு மேல் இருந்தது. ஆனாலும் கண்ணை திறக்க முடியாத அளவுக்கு நித்திரை சுழற்றியது. எனவே வழமை போல எழுந்து வெளியில் சென்று சற்று நேரம் உலாவினான்.

உலாவிக் கொண்டிருந்தவனுக்கு ஏதோ ஒரு அனுங்கல் சத்தம் கேட்டது. திடுக்குற்றான். காதை கூர்மையாக்கி கேட்கலானான்.

மீண்டும் அதே ஒலி அவன் காதில் கேட்டது. அச்சத்தம் வந்த திசை நோக்கி சென்றான். அது அவர்கள் வீட்டின் பின்புறத்தில் இருந்தே கேட்டது.

ஓர் குற்றியில் ஏறிப் பார்த்தான். நீண்ட காலமாக மூடப்பட்டு இருந்த அவ்வீட்டில் விளக்கு எரிந்து கொண்டிரு-ந்தது. அவ்விளக்கு வெளிச்சத்தில் ஒரு பெண் மிகவும் அவதிப்பட்டுக் கொண்டிரு-ந்தது தெரிந்தது. இவனுக்கோ என்ன செய்வதென்று தெரியவில்லை. அவள் யாரென்றும் தெரியவில்லை.

இவன் பார்ப்பதை அறிந்த அப்பெண் இவனை நோக்கி மெல்ல நகர்ந்து வந்து இரு கரம் நீட்டி உதவி கேட்டாள்.

பெண் என்றால் பேயும் இறங்கும், இவன் எம்மாத்திரம்???

எதைப்பற்றியும் கவலைப்படாத அவன், யோசிப்பதற்குக் கூட அவகாசம் எடுத்துக் கொள்ளவில்லை.

அப்பா! என அழைத்தவாறு மதிலில் எம்பி[illegible] வளவிற்குள். (அவனது புத்தி ஏதோ எச்சரிக்கையாக கூப்பிட்டுள்ளது.)

அவ் இளைஞன் பாய்ந்த இடமோ இரு கட்டுகளின் நடுவில். கட்டுக்களின் இடையில் கால் மாட்டிக் கொண்டது. குதித்த காரணம் மறந்து தன் காலை மீட்பதில் ஈடுபட்டுக் கொண்டிருந்த அவனை சுற்றியது ஒரு காற்று..... குளிர்ந்தது அவனுக்கு. மெல்ல வேகம் கூடியது. தன்னை மீறி அக்காற்றையே பார்த்துக் கொண்டிருந்தவனுக்கு தன்னை சுற்றும் அந்த அகோர உருவின் முகமும் கூரிய பற்களும் இரத்தம் வடியும் வாயும், குண்டும் குழியுமாக இருந்த முகமும் தெரிந்தது.

நடந்தவற்றை ஊகித்துக் கொண்ட அவன் கத்த முற்பட்டான். பயத்தினால் காற்று மட்டுமே வெளி வந்தது. நல்லவேளை தந்தை வெளியில் வந்து இவனது பெயரை கூறி அழைத்தவாறே பின்னால் வந்தவர் அவனைக் காணாமல் தவித்துப் போனார்.

மறுபக்கம் அவனுக்கு தலையை [illegible] செய்வதறியாது திகைத்தான்.

சுற்றல் குறைந்தது. அழகிய பெண்ணின் உருவம் அவன் கண்ணில்பட்டது.

ஒரு தடவை கண்ணை இறுக மூடித் திறந்தான். அருகில் நின்றிருந்த அவ்வழகி தன் தங்கை என உணர்ந்தான். தான் காப்பாற்றுப் பட்டுவிட்டேன் என நினைத்து சந்தோசப்படுவதா அல்லது இப்படியான ஒரு பெண்ணின் பின்னால் சென்று மாட்டிக் கொண்டேனே என எண்ணி தன்னை நோவதா என தலையை குனிந்து கொண்டான்.

அனைவரும் சுற்றி வளைத்து இரவு நடந்ததை கூறி சிரித்தவாறு நின்றிருந்தனர். உண்மையில் நடந்ததை அவனால் இன்னமும் ஊகிக் முடியவில்லை. யாரிடமும் கேட்கவும் முடியவில்லை வெட்கித் தலை குனிந்தான்.

( தன்யா )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு

## திரை விமர்சனம்

## "வேதாளம்"

சிவாவின் இயக்கத்தில்





### அஜித் மற்றும் ஸ்ருதி நடிக்கும்

இத்தாலியில் வில்லன் ராகுல் தேவ்வுடன் ஆரம்பமாகிறது வேதாளம். ஒரு சர்வதேச குற்றவாளியான ராகுல் தேவ்வை ஒரு ராணுவ அதிகாரி தன் கூட்டத்துடன் பிடிக்க முயற்சி செய்து தோல்வியில் உயிரை விடுகிறார், ஆனால் உயிரை விடும் போது "உன்னை எதிர்க்க என்னை போல் ஒரு நல்லவன் வருவான் டா என்ற வீர வசனத்துடன் உயிரை விட அடுத்த நொடியே கொல்கத்தா பயணமாகிறது படம். தன் தங்கை லக்ஷ்மி மேனன் படிப்புக்காக அஜித் கொல்கத்தா வர, அங்கு சூரியின் உதவியோட டாக்ஸி டிரைவர் வேலை செய்கிறார். ரொம்ப சாதுவாக தங்கை மீது அதிகம் பாசம் கொண்ட அண்ணனாக இருக்கிறார், இடையில் ஸ்ருதிஹாசன் வக்கீலாகவும் படத்தின் காமெடிக்காகவும் அடிக்கடி வந்து செல்கிறார். இதனிடையே கொல்கத்தா காவல்துறை தீவிரமாக தேடும் ராகுல் தேவ்வின் தம்பியை டாக்ஸி டிரைவரான அஜித் காவல்துறையிடம் பிடித்து கொடுக்கிறார் . இதனால் கடுப்பான ராகுல் தேவ்வின் தம்பி அஜித்தை கடத்தி தன் இடத்தில் போட்டு தள்ளுமாறு திட்டம் தீட்ட அப்போது எதிர்பார்க்காத வகையில் விஸ்வரூபம் எடுக்கிறார் அஜித். நீ என்னை கடத்தி வரவில்லை நானே தான் வந்தேன் என்ற வசனத்துடன் ராகுல் தேவ்வின் தம்பியை அஜித் போட்டு தள்ள அங்கிருந்து ஜெட் வேகத்தில் பறக்கிறது திரைக்கதை. சாதுவான அஜித் திடீரென்று விஸ்வரூபம் எடுப்பது ஏன்? தங்கையிடம் மட்டும் பயந்த சுபாவமுள்ளவாறு இருப்பது ஏன்? யார் இவர்? எதற்காக வில்லன்களை துரத்துகிறார் போன்ற பல முடிச்சுகளுடன் நகர்கிறது வேதாளம்.

ஒரு சைக்கோத்தனமான கதாபாத்திரத்தில் நம்மை அஜித் மிரட்டுவது உறுதி. உண்மையில் தங்கையாக நடித்து விட்டோமே என்பதற்கு வருத்தப்படுவதற்கு வேலை இல்லாமல் தன் கதாபாத்திரத்தில் யதார்த்த நடிப்பை வெளிப்படுத்தியுள்ளார் லக்ஷ்மி மேனன். சுருதிஹாசன் படத்தில் ஒரு முக்கியமான காட்சி திருப்பத்திற்கு காரணமாக அமைகிறார்.

அஜித் தன் நடிப்பால் இந்த படத்தை ஒரு படி நிமிர செய்கிறார். இப்படம் பழைய கதையாக இருந்தாலும் கொஞ்சமும் விறுவிறுப்பு குறையாமல் கொண்டு சென்ற சிவாவின் திரைக்கதை வரவேற்கத்தக்கத. குறிப்பாக நீ கெட்டவன் நா நான் கேடுகெட்டவன் போன்ற வசனத்துக்கு கைதட்டல் அள்ளுகிறது. தெலுங்கு வாடை அதிகமாக உள்ளது போல் தெரிகிறது. படத்தில் வரும் வில்லன் ஆட்களின் தேர்வு மனதில் ஒட்டவில்லை.

**மொத்தத்தில் வேதாளம் – மசாலா கலந்த அதிரடி பாசமலர்**



### சூர்யாவை மிஞ்சிய அதர்வா

தயாரிப்பில் டிசம்பர் 4ம் தேதி திரைக்கு வரும் படம் பசங்க-2.இப்படத்தில் சூர்யாவும் 45 நிமிடங்கள் நடித்துள்ளார். இதே நாளில் அதர்வா நடித்த ஈட்டி படமும் வரவுள்ளது.இதில் சூர்யா படத்திற்கு 200 திரையரங்குகள் கிடைக்க, அதர்வா படத்திற்கு 300 திரையரங்குகள் கிடைத்துள்ளதாம். அதர்வா நடிப்பில் வெளிவந்த சமீபத்திய படங்கள் அனைத்தும் தோல்வியடைய, எப்படி இது சாத்தியம் என கோலிவுட்டே ஆச்சரியத்தில் உள்ளதாம்.



### மஞ்சிமாவை அவதிக்குள்ளாக்கும் சிம்பு

சிம்பு நடிப்பில் விரைவில் வெளிவரவிருக்கும் படம் அச்சம் என்பது மடமையடா. இப்படத்தில் இவருக்கு ஜோடியாக மஞ்சிமா நடித்துள்ளார். சமீபத்தில் மஞ்சிமா அளித்த பேட்டியில் "சிம்பு படப்பிடிப்பில் செம்ம ரகளை செய்வார், நான் படப்பிடிப்பு என்பதை மறந்து சிரித்துக்கொண்டே இருப்பேன். அவர் செய்யும் சேட்டையால் சிரித்து, என் காட்சியில் சொதப்புவேன், ஆனால், சிம்பு ஸ்கோர் செய்து விடுவார்" என கூறியுள்ளார்.

### மோதும் விஜய்யும் அஜித்தும்

வேதாளம் படத்தில் இடம்பெற்ற 'தெறிக்க விடலாமா' என்ற வசனத்தை விஜய் ரசிகர்கள் கிண்டல் செய்தனர். தற்போது விஜய் படத்திற்கே தெறி என்று தலைப்பு வைத்துள்ளது, அஜித் ரசிகர்களுக்கு ஏதுவாக அமைய 'இது தல சொன்னதுப்பா' என்று கிண்டல் செய்ய அதற்கு விஜய் ரசிகர்கள் கத்தி போஸ்டரை காட்டி, அதிலேயே தெறி என்ற வார்த்தை இருந்ததாகவும், அனிருத் ஒரு பேட்டியில் விஜய் என்றால் தெறி என்று கூறியதாகவும் எடுத்துக்காட்டினர். உடனே தல ரசிகர்கள் மங்காத்தா ட்ரைலர் பார்த்தவுடன் தனுஷ், தல சும்மா தெறிக்கவிடப்போறாரு என குறிப்பிட்டு இருந்தார் என கூறி இப்படியே வாக்குவாதம் போய்க் கொண்டிருக்கிறது.

### மீண்டும் தனி ஒருவன் கூட்டு

வெகு நாட்களுக்கு பிறகு ஜெயம் ரவியின் தனி ஒருவன் படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் வில்லனாக அவதாரம் எடுத்துள்ள அரவிந்தசாமி, ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றார். பிரபுதேவா தயாரிப்பில், இயக்குனர் லக்'மன் இயக்கவுள்ள ஒரு புதிய படத்தில் ஜெயம் ரவி ஹீரோவாக நடிக்கிறார். அந்த படத்திலும் அரவிந்தசாமியை வில்லனாக நடிக்க கேட்டுள்ளனராம்.

### தயாராகிறார் முருகதாஸ்

இந்திய சினிமாவின் முன்னணி இயக்குனராகி விட்டார் முருகதாஸ். இவர் இயக்கத்தில் கடைசியாக வந்த 3 படங்களும் ரூ 100 கோடி கிளப்பில் இணைந்தது. இந்நிலையில் இவர் அடுத்து தெலுங்கு சூப்பர் ஸ்டார் மகேஷ் பாபுவுடன் இணையவுள்ளார்.

### "நயனுக்காகவே மாறினேன்" விக்னேஷ் சிவன்

நானும் ரவுடி தான் வெற்றிக்காக விக்னேஷ் சிவனுக்கு ஒரு விலை உயர்ந்த காரை பரிசளித்துள்ளர். மேலும் சமீபத்தில் ரோம் நாட்டுக்கு விக்னேஷ் சிவனுடன் சென்று தனது பிறந்தநாளை கொண்டாடியுள்ளராம்.

அதுமட்டுமில்லாமல் அங்கு இருக்கும் போப் ஆண்டவர் முன்னிலையில் விக்னேஷ் சிவன் கிறிஸ்தவ மதத்துக்கு மாறி விக்டர் என்று தனது பெயரை மாற்றியுள்ளதாக தகவல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுப் பையன்

INFOMATION TECHNOLOGY

MOBILE

## 90 வினாடிகளில் Innova

இந்தோனேசியாவில் டொயோட்டா நிறுவனம் Innova காரை சமீபத்தில் அறிமுகம் செய்தது. தொழிற்சாலை முழுமையாக இயங்க ஆரம்பித்தால் 90 வினாடிகளில் ஒரு Innova- ஐ தயாரிக்க முடியும்" என அந்நிறுவனத்தின் இயக்குனர் தெரிவித்துள்ளார்.


புதிதான வடிவமைக்கப்பட்டுள்ள Innova- ல், டீசல் என்ஜின் 2.4 லிட்டர், பெட்ரோல் 2.0 லிட்டர் அளவிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் 7 ஏர் பேக் பாதுகாப்பு வசதி, 5 கியர்களுடன் கூடிய ஆட்டோமேட்டிக் டிரான்ஸ்மிஷன் தொழில்நுட்பம் ஆகியவையும் இடம் பெற்றுள்ளது.




## அப்பிள் பென்சில் அறிமுகமானது

அப்பிள் நிறுவனம் அண்மையில் புதிய சாதனமான iPad Pro இனை அறிமுகம் செய்ததன் பின்னர் சில துணைச் சாதனங்களையும் அறிமுகம் செய்துள்ளது. இவற்றில் கீபோர்ட் மற்றும் அப்பிள் பென்சில் என்பனவும் அடங்கும்.

இவற்றில் அப்பிள் பென்சில் ஆனது iPad Pro இனை இலகுவாக கையாளுதல், படங்களை வரைதல் போன்றவற்றிற்காக அறிமுகம் செய்துள்ளது. இந்த பென்சில் ஆனது Bluetooth 4.1 மற்றும் அப்பிளின் Lightning Connector என்பனவற்றின் உதவியுடன் சார்ஜ் செய்யப்படுவதுடன், 12 மணிநேரம் வரை தொடர்ச்சியாக பயன்படுத்தக்கூடியதாக இருக்கின்றது.



## விரைவாக குணமடைவீர்களா

ரத்தத்தில் உள்ள வெள்ளை அணுக்களை சோதனை செய்வதன் மூலம் நோயாளிகள் குணமடையும் வேகத்தை அறிந்துகொள்ளலாம் என ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

அதாவது, அறுவை சிகிச்சைக்கு முன்னர் நோயாளிகளிடம் இருந்த ரத்த மாதிரிகள் பெறப்படுகிறது.

அந்த ரத்த மாதிரியில் உள்ள வெள்ளை அணுக்களின் விகிதங்கள் மூலமாக நோயாளிகள் பூரணமாக குணமடைய எடுத்துக்கொள்ளும் காலஅவகாசத்தை தெரிந்துகொள்ளலாம் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சிறிய அளவில் நடத்தப்பட்ட இந்த ஆய்வின்முடிவு அறுவை சிகிச்சைக்குப் பின்னர் மருத்துவர்கள் நோயாளிகளுக்கு எப்போது சிகிச்சையளிக்க ஆரம்பிக்கலாம் என்பதை கணக்கிட ஏதுவாக இருக்கும் என கலிபோர்னியாவின் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

## ட்ரொப் பொக்ஸ் தரும் புதிய சேவை

Dropbox

ஒன்லைன் சேமிப்பு வசதியினை வழங்கிவரும் Dropbox ஆனது iOS சாதனங்களுக்காக புதிய வசதி ஒன்றினை அறிமுகம் செய்துள்ளது.

அதாவது Adobe நிறுவனத்துடன் இணைந்து ஒன்லைன் ஊடாகவே நேரடியாக PDF கோப்புக்களை எடிட் செய்யும் வசதியினை அறிமுகம் செய்துள்ளது.

இதற்காக கடந்த அக்டோபர் மாதம் முதல் Adobe நிறுவனத்துடன் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. இவ் வசதியினை அப்பிளின் iTunes App Store தளத்திலிருந்து Dropbox அப்பிளிக்கேஷனை தரவிறக்கம் செய்து நிறுவுவதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

இதனைத் தொடர்ந்து அன்ரோயிட் சாதனங்களுக்காகவும் குறித்த அப்பிளிக்கேஷன் விரைவில் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## குறைந்த செலவில் கிராபைன்

கிராபைன் (Graphene) எனப்படும் மிகவும் உறுதியான பதார்த்தமான கார்பனின் புறதிருப்பம் ஆனது முதன் முறையாக 100 மடங்கு குறைந்த செலவில் உருவாக்கியுள்ளனர் ஸ்கொட்லாந்தின் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள்.

இந்த கிராபைன் ஆனது முன்னையதை விடவும் மிகவும் பாரம் குறைந்ததாகவும், உறுதியானதாகவும், வெப்பம், மின் கடத்தக்கூடியதாகவும் காணப்படுகின்றதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

OTHER

## நீங்கள் ஆணா? பெண்ணா?



பாதுகாப்பினை மேம்படுத்தும்பொருட்டு மொபைல் சாதனங்கள் உட்பட பல்வேறு சாதனங்களிலும் கைவிரல் அடையாள தொழில்நுட்பம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

ஒருவருடைய கைவிரல் அடையாளத்தினை கொண்டு அவர் ஆணா அல்லது பெண்ணா என கண்டறியக்கூடிய தொழில்நுட்பத்தினை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இத்தொழில்நுட்பமானது 99 சதவீதம் சரியாக செயற்படுவதாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

## Blue Tooth தரவுப் பரிமாற்றம்

தற்போது பாவனையில் உள்ள வயர்கள் மூலமான இணைய இணைப்பு மற்றும் வயர்கள் அற்ற இணைய இணைப்புக்களான புளூடூத், Wi-Fi என்பனவற்றை தாண்டி மின்குமிழ்கள் மூலம் இணைய இணைப்பு வழங்குவது தொடர்பான தகவல்கள் ஏற்கனவே வெளியாகியிருந்தன.

இவ்வாறான நிலையில் முதன் முறையாக இத் தொழில்நுட்பம் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளது.

சாதாரண இணைய வலையமைப்புக்களை விடவும் 100 மடங்கு வேகமாக தரவுகளைக் கடத்தக்கூடிய இத்தொழிநுட்பம் Visible Light Communication (VLC) என்று அழைக்கப்படுகின்றது.

இதன் வேகமானது ஆரம்பத்தில் செக்கனுக்கு 224 ஜிகா பிட்ஸ்களாக காணப்பட்ட போதிலும் தற்போது செக்கனுக்கு 1 ஜிகா பைட் எனும் வேகத்தினை எட்டச் செய்யப்பட்டுள்ளது.


இதன் மூலமே சமகாலத்திலுள்ள இணைய இணைப்புக்களை விடவும் 100 மடங்கு வேகமாகச் செயற்படக்கூடியதாக காணப்படுகின்றது.

## இனி அதி கூடிய பயன் பெறலாம்

கூகுளின் Android இயங்குதளமானது குறுகிய காலத்தில் மிகவும் பிரபல்யமடைந்துள்ளது.

அதிகளவான மொபைல் சாதனங்களில் பயன்படுத்தப்பட்டுவரும் இவ் இயங்குதளத்திற்கான பல்வேறு அப்பிளிக்கேஷன்கள் உருவாக்கப்பட்டு அறிமுகம் செய்யப்படுகின்றன.

இவற்றின் தொடர்ச்சியாக Opera Max எனும் அப்பிளிக்கேஷனை ஒபெரா நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது.



இந்த அப்பிளிக்கேஷன் ஆனது ஒன்லைன் மூலம் பாடல்களை கேட்டு மகிழும்போது விரயமாகும் டேட்டாவின் அளவை சீராகப் பேணி மீதப்படுத்தக்கூடியவாறு உருவாக்கப்பட்டுள்ளது.

அதாவது சாதாரணமாக 1 ஜிகாபைட் டேட்டாவில் 9 மணித்தியாலங்கள் வரை ஒன்லைனில் பாடல்களையோ அல்லது வானொலிகளையோ கேட்ட முடியும், ஆனால் இதனைப் பயன்படுத்துவதன் மூலம் ஒரு ஜிகா பைட் டேட்டாவில் பாடல் கேட்கும் நேரத்தை நீடிக்க முடியும்.

## Samsung Galaxy S7 Edge

ஸ்மார்ட் போன் சந்தையில் அசத்தி வரும் சம்சுங் நிறுவனத்தின் Samsung Galaxy S7 Edge குறித்த தகவல்கள் வெளியாகியுள்ளன.

இக் கைப்பேசியானது 5.7 அங்குல அளவு, 2600 x 1440 Pixel Resolution உடன் நான்கு பக்கமும் வளைந்த திரையினை உடையதாகவும், Qualcomm's Snapdragon 820 வகை இரண்டு Processor களை உள்ளடக்கியுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவித்தல்கள் எதிர்வரும் 2016 ஆம் ஆண்டு வெளியிடப்பலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.



## மரபணு நுளம்பு உருவாக்கம்

மலேரியா நோய் மக்களிடையே பரவாமல் தடுப்பதற்கான புதிய நடவடிக்கையொன்றை அமெரிக்க கலிபோர்னியா பல்கலைக்கழக மரபணு தொழிநுட்பம் சார்ந்த



விஞ்ஞானிகளால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அது, மலேரியா நோய்க்கு காரணமாகவுள்ள வைரஸ்ஸை கட்டுப்படுத்தக்கூடிய நுளம்பொன்றை மரபணு தொழிநுட்பம் மூலம் உருவாக்குவதாகும்.

"கிரிஸ்ப்" என பெயரிடப்பட்டிருக்கும் இந்த நுளம்பு உருவாக்கப்பட்டிருப்பது, இந்திய துணைக்கண்டத்தின் எனோபீலிஸ் ஸ்டென்ஸீ நுளம்பு இனத்தின் டி.என்.ஏ அணுவை மாற்றம் செய்ததன் மூலமாகும்.

இந்த நுளம்பை நுளம்புகளுடன் பரவ செய்வதன் மூலம் மலேரியா நோயை ஓரளவு கட்டுப்படுத்தலாம் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

உலக அளவில் வருடத்திற்கு ஐந்து இலட்சத்து 80 ஆயிரம் பேர் மலேரியா நோயால் இறப்பதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## வாரமொரு முறை சார்ஜ் செய்தால் போதும்

நாம் நமது ஸ்மார்ட் ஃபோன்கள், டேப்லெட் உள்ளிட்டவையில் அதிக செயலிகள் பயன்படுத்துவதால் உடனுக்குடன் அதன் சார்ஜ் காலியாகி விடுகிறது. ஒரு திரையை நமது ஸ்மார்ட் ஃபோன், டேப்லெட் உள்ளிட்டவைகளில் பொருத்துவதன் மூலம் பேட்டரிகளின் ஆயுள் நீட்டிக்கப்படும் என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# பயணங்களில் பயணங்கள்

-- நனைந்த நதி --

நெருக்கடி மிகுந்த அந்த இடத்திலும் நான் தனிமையில் நின்று கொண்டிருந்தேன். நான் விடும் பெரு மூச்சுகள் எவர் கவனத்தையும் பெறுவதோ திருப்புவதோ இல்லை என்பதை விட வருத்தப்படுவதைக் கண்டு கொள்ளாதவர்கள் சூழ இருப்பதுதான் பெரிய வருத்தமாய் இருக்கிறது.

உதிர்ந்து கிடந்த சருகுகள் காற்றுக்குக் கலைந்து ஓடுதலாய் மனிதர் கூட்டம் கலைந்து கொண்டிருந்தது. ஒவ்வொருவர் மனதினுள்ளும் முண்டியடிக்கும் எண்ண அலைகள் என்னை நெருக்கி நெளிந்து விடச் செய்யும்படியாய் இருந்தது.

ஒரு திசை பார்த்து ஓடிக் கொண்டிருந்தேன். இல்லை ஓட்டப்பட்டுக் கொண்டிருந்தேன். மனது? மனசோ பல்வேறு திசைகளிலும் அடித்துப் போய்க் கொண்டிருந்தது.

அவளும் அவளது குழந்தையும் அமர்ந்திருந்தார்கள். ஊருக்குப் போகும் சந்தோசம் அவள் குழந்தைக்குள் கொப்பளித்துக் கொண்டிருந்தது. அவளது கவனமும் சிந்தனையும் குழந்தை மேல் படிந்திருந்தது. பெட்டிகளை இருக்கைக்கடியில் அழுத்தித் தள்ளியாச்சு, கைப்பை பக்கத்திலேயே இருக்கட்டும் அப்பதான் சூதானமா இருக்கும். தண்ணி பாட்டில் எடுத்து கைக்கருகே வைக்க ஓடி வந்து தண்ணீரை வாங்கிக் குடித்து சட்டையை ஈரமாக்கிப் போனான்.

இருக்கைக் கடியில் தள்ளிய பையை மீண்டும் எடுத்து சட்டை ஒன்றை வெளியில் எடுத்து மாற்றி விட்டாள்.

டிக்கெட் பரிசோதகர் வந்தமர்கிறார் இருக்கையில். நான் நீட்டிய பயணச்சீட்டை வாங்காமலேயே முகம் நிமிர்ந்து எனை ஆழ ஊடுருவும் பார்வை, அவர் பார்க்கப் பெயரையும் குழந்தை பெயரையும் உச்சரிக்கிறேன்.

பட்டியலில் தேடிக் குறித்துக் கொண்டு பயணச் சீட்டிலும், கிறுக்கி முடித்துத் திரும்ப நீட்ட வாங்கி கைப்பைக்குள் பத்திரப் படுத்துகின்றேன். அவரை நோக்கி இரு இளம் பெண்கள் வருகின்றனர். தாயும் மகளும். அவர்கள் மொழி எனக்கு அந்நியமாய் இருந்த போதும் பல நேரங்களில் புரிதலுக்கு மொழி ஒரு தடையல்ல என்று உணர்த்திப் போகின்றன இது போன்ற தருணங்கள்.

அவர்கள் குரலில் ஒரு கெஞ்சல். படுக்கைக்கான இடம் உறுதியாகவில்லை மாற்று ஏற்பாடு செய்து தரச்சொல்லிக் கெஞ்சுகிறாள் மகள்.

அலட்சியப்பார்வை கண்களில் தொக்கமற்ற எல்லா சீட்டுகளையும் சரிபார்த்து விட்டு அந்த பெரியம்மாவை அங்கேயே அமரச் சொல்லி விட்டு "வா பார்த்து ஏற்பாடு செய்கிறேன்."

சொல்லி கறாராய் முன்னால் நடக்க எனக்கு ஏதோ உறுத்திற்று. அவள் செருப்பை மாட்டி அவர் பின்னால் போக முற்பட அவள் பின்னிருந்து கைகளை மெல்லத் தொட்டேன். திரும்பினாள். நான் தலையை இடம் வலமாக ஆட்டி கண்களைச் சுருக்கி யோசனையோடு வேண்டாமென்று தலையாட்ட ஏன்? என்பதாய் குழப்பமாய் அவள் பார்க்க உள்ளுணர்வு நான் சொல்வதை கேட்கச் சொல்லியிருக்க வேண்டும்.

எனையே பார்த்துக் கொண்டிருக்க, "அவர் மீண்டும் இந்தப் பக்கம் தான் வருவார்."

என் சைகைமொழி அவளுக்குப் புரிய அமர்ந்தாள். பரிசோதகர் பெட்டி கடைசி வரை போய்த் திரும்பி பார்த்தார். இதற்கிடையில் நானும் குழந்தையும் கொண்டு போயிருந்த சாப்பாட்டைச் சாப்பிட்டு கை கழுவப் போகும் போது பரிசோதகர் அமரும் இருக்கையில் நடுத்தர வயது பெண் அமர்ந்திருந்தாள்.

எங்களோடு இருந்தவர் ஒருவர் அடுத்த பெட்டிக்கு போகுமாறு மிரட்ட, அவள் பார்வையைத் தழைத்துக் கொண்டாள். முடியை அள்ளிக் கொண்டை இறுக போட்டிருந்தாள். முகத்தில் கிராமத்துக்களை தெளிவாகத் தெரிந்தது. பவுடர் அவளுக்கின்னும் அறிமுகமாயிருக்கவில்லை. கையில் ஒரு சின்ன துணிப்பைக் கட்டும், பெரிய போராட்டத்துக்கிடையில் அவள் மனம் இருந்ததை அவளது முக இறுக்கமும், நெஞ்சோடு அணைத்திருந்த மூட்டையும் காண்பித்தது.

திடீரென ஏறிய அவள் எதுவும் திருடிப் போய் விடுவாளோ? எல்லாருக்குள்ளும் கூடுதல் எச்சரிக்கை ஓடிக் கொண்டிருந்தது. இன்னும் கொஞ்சம் பெண்கள் தங்கள் கணவன் மேல் கண் வைத்திருந்தனர்.

குழந்தையை படுக்க வைத்தாள். அம்மாவும் மகளும் இன்னும், பதட்டத்தோடு பேசியபடி இருந்தனர். மீண்டும் பரிசோதகர் வந்த படி இருக்க, அவர் பார்வையில் திருட்டுத்தனம் அப்பட்டமாய் தெரிந்தது. அந்த ஒற்றையிருக்கையில் பரிசோதகர், பார்வை தவிர்க்க நினைத்ததாலோ என்னவோ தலை கவிழ்ந்தபடி உள்ளங்கையில் தன் தலையைப் பதித்திருந்தாள். நின்றபடி குனிந்து அவளை உற்று நோக்கியபடி இருந்தவர், தோளில் கையிட்டுத் தொட்டு எழுப்ப, பதறி எழுந்தவள் தனையே உதறுவாள் என்று நான் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை.

ஏதோ அவர் கேட்க, அவள் கலவரமாய் பதில் சொல்ல இரயில் சத்தத்தில், பெருமூச்சில் அவள் குரல் வெறும் வாயசைப்பாய் மாறிப் போயிருந்தது. அவளை இறக்கி விட்டு விடுவார். அல்லது வேறு இடத்திற்கு, முன் பதிவு செய்யாத இடத்திற்கு போகச் சொல்வார் என்று நாங்கள் கணித்திருந்தது பொய்யாகிப் போக அவர் அவளைத் தாண்டி எங்களை நோக்கி வந்து விட அவள் தயக்கம் இன்னும் தீராமலேயே இருக்கையின் நுனியில் அமர்ந்தாள்.

தாயும் மகளும் தாங்களே சிலரோடு பேசி தங்களுக்கான இடத்தைத் தீர்மானித்திருந்தனர். ஒவ்வொருவராய் தூங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினார்கள். பரிசோதகர் எல்லாரையும் தாண்டி மறைந்துபோனார்.

ஒவ்வொரு விளக்காய் அணைக்கத் துவங்கியிருந்தனர். மெல்லப் பெட்டி நிலவு போர்த்திய வெளிச்சத்திற்குள் தூங்கப் போனது. இரயில் இரைச்சலை விட ஓடும் மின் விசிறிகளின் இரைச்சல் அதிகமாயிருக்கப் பூட்டுகளோடு இணைக்கப்பட்ட பெட்டிகளும், பைகளும் புரண்டு படுக்கும் பெண்ணின் கொலுசுச்சத்தமாய் சிணுங்கிக் கொண்டிருந்தது.

இரண்டு மூன்று நிறுத்தங்கள் வந்து போன போதும், காப்பி, டீ விற்கும் பையன்களின் சத்தம் கேட்டபோதும் அதற்குப் பழகிப் போய் எல்லாரும் உறங்கியிருந்தார்கள். எனக்குள், "நாளை" பற்றிய சிந்தனைகள் ஓடிக் கொண்டிருந்தன. இரயிலும் வேகமாய் கதவுக்கருகில் இருந்த வெளிச்சம் கீற்றாக என்மேல் விழுந்து கண்கள் வரை எனை வெட்டிக் கொண்டிருந்தது. சன்னலுக்கு நேராக இருந்திருந்த நிலவு இப்போது வானத்து உச்சிக்கு வந்திருக்க, என் பார்வையில் படாது போயிருந்தது.

மீண்டும் பரிசோதகர் வருகிறார். கையில் அட்டை இல்லை. போட்டிருந்த கறுப்பு கோட் இல்லை. மெல்ல இருட்டை துழாவித் துழாவி வந்து கொண்டிருந்தார். எல்லாரும் தூங்கிவிட்டதாக நினைத்திருக்கக்கூடும்.

ஒற்றை சீட்டில் அமர்ந்திருந்த அந்த பெண் உட்கார்ந்த படியே இருக்க, அவள் தலை தடாலென விழுந்தது. தூங்கியிருக்க வேண்டும். எனைக் கடந்து சென்ற அந்த உருவம் அவள் அருகில் போய் நிற்க அவள் திடுக்கிட்டு எழ முயற்சிக்க தோளில் கை போட்டு அழுத்தி உட்கார வைக்கிறது. அந்த இருள் உருவம் வெளிச்சம் விழுந்த முக பக்கம் எனக்கு முதுகு காட்டியபடி இருக்க, இருள் முதுகே எனக்கு முகம் காட்டிய படி இருந்தது.

இதுவரை, இரைச்சலோடு ஓடிக் கொண்டிருந்த மின்சார விசிறிகளை விட என் இதய இரைச்சல் வேகமாய் அடிக்க அந்த சப்தத்தில் எல்லோரும் விழித்து விடப் போகிறார்கள் எனும் பயம் எனக்குள் அனிச்சைச்செயலாகிக் கொண்டிருக்க, சப்தம் தவிர்க்கவென்று மூச்சு விடுவதை நிறுத்திக் கொள்ள முயல்கிறேன்.

ஒரே இருக்கையில் அவளைத் தள்ளச் சொல்லி அந்த உருவமும் நெருக்கி அமர எதிர்பார்த்திடாத ஒரு கணத்தில் இதழோடு இதழாய் அவளை அழுத்தியிருந்தது.

என் கைகள் வேகமாய்த் தூங்கும் என் குழந்தையின் கண்களை மூடுகிறது அவன் தூங்கி வெகு நேரமாகிறது என்று தெரிந்திருந்தும். என் அசைவு சந்தேகம் தந்திருக்க வேண்டும். இருவரும் காணாமல் போகின்றனர். கழிவறை திறந்து மூடும் சப்தம்.

நிமிடங்கள் இடி இடியாய் எனக்குள் இறங்க என்ன செய்வது? செய்யலாமா? கூடாதா? நானெப்படி தலையிட அடுத்தவர் அந்தரங்கம் பார்க்க நேர்ந்தது கூசிப் போக, மூடிய விழிகளோடு காதுகள் விழித்திருக்கின்றன. ஒரு சோடிக் காலடி ஓசை எனைக் கடந்து செல்கின்றது. விழிகள் மெல்லத் திறக்க இரண்டு நிமிட இடைவெளியில் நடுத்தர வயதுப் பெண் தலையெல்லாம் ஈரம் சொட்டச் சொட்ட வந்தமர்கிறாள்.

இருக்கையில் பையை, இன்னமும் அழுத்தமாய் மடியில் வைத்தழுத்தியபடி. தலையிலிருந்து வழிந்த நீரா, இல்லை அவளது விழி நீரோ? யோசிக்க முடியாது திகைத்துப்போய் படுத்திருக்கின்றேன். நான் கையாலாகாது படுத்திருந்தது உறுத்த விழிகள் மூடிக் கொள்கின்றன.

கண் திறந்து நிஜம் பார்க்க பயம். எப்பொழுது தூங்கிப்போனேன் தெரியாது. விழிக்கும் போது அந்த இருக்கையில் ஆளில்லை.

காலை நேரச் சூரியன் விழிக்க, வீசிய இளந்தென்றல் இயந்திர வாசனையோடு முகத்தில் அடிக்கத் தயாரானேன் அடுத்த நிறுத்தத்தில் இறங்க,

பையனை எழுப்பிப் பெட்டி எடுத்து, அவள் இறங்க அவளைப் போல உறங்காது விழித்திருந்த அயர்ச்சியில் எனது பெருமூச்சும் சேர்ந்தெழும்புகிறது.

அவளோடு நானும் இடம் பெயருகின்றேன்.

பள்ளம் நோக்கி நதி பாயத் துவங்கியிருந்தது. பள்ளம் நிரம்பிய பின் அதனுள் தங்க முடியாது தாண்டி போய்த்தான் ஆக வேண்டியிருக்கும் என உணரப்பட்டிருந்ததா அவளால்?

காசு மட்டும் மனிதனுக்கு, மனிதன் மனத்திற்கு போதாமல் போயிருப்பது உறைக்க ஆரம்பித்திருந்தது, அவளின் தனிமை இந்த கொஞ்ச நேரத் துணையில் தீர்ந்து போகுமா? இல்லை அந்த கொஞ்ச நேரத்தை இழக்க தயாராயில்லாத நிலையில் இருக்கிறாளா?

தனிமையுணர்வை தொலைக்க ஓர் ஆணைச் சார்ந்திருக்க வேண்டிய நிர்பந்தம் அவளுக்குள் ஏற்பட்டிருப்பது தெளிவாயிருந்தது. இந்த நிர்பந்தத்தை கடந்துவிட அவள் முயலவில்லையா? இல்லை முடியலையா?

இயற்கையின் எல்லா நிர்பந்தங்களையும் கிழித்துக் கொண்டு பேரிரைச்சல் செய்தபடி எனக்கான பாதையில், தடம் மாறும்போது எனக்கான இலக்குகளை நோக்கியபடி ஓடத் துவங்கினேன்.

---

சாதாரமானவனின் மனது

# மீண்டும் ஆரம்பத்தில் இருந்தாஆ ஆ ஆ !!!

சஞ்சயன் செல்வமாணிக்கம்

இரண்டு நாட்களாக சொகுசுப் பேருந்தில் ஒரு நகரத்திற்குச் சென்று வர வேண்டியிருந்தது. மாலை ஏறினால் காலை பயணம் முடிவடையும். ஏறத்தாள 10 மணி நேரப் பயணம்.

சிவனே என்று 80களின் காதற்பாடல்களுடன் என்னை மறந்திருந்தேன். தலையில் மாட்டியிருந்த headphoneக்குள் ஒரு விதமான ஒலி வரத்தொடங்கியது. சற்று நேரத்தில் அந்த ஒலியின் இம்சை தாங்கமுடியாது போகவே headphone ஐ கழற்றினேன். அப்போது அந்த ஒலி எனக்கு பின்னாலிருந்த ஆசனத்தில் இருந்து வந்துகொண்டிருந்ததை அவதானித்தேன்.

திரும்பிப் பார்த்தேன். ஒருவர் தனது வாயைப் பிளந்துவிட்டபடியே கச்சேரி செய்துகொண்டிருந்தார். அவரின் தொண்டைக்குழியின் ஆரம்பத்தில் உள்நாக்கு பயங்கரமாய் அதிர்ந்துகொண்டிருந்தது. நான் சற்று எட்டிப்பார்த்திருந்தால் இரைப்பையும் தெரிந்திருக்கும்.

அன்றைய இரவினைப் பொன்றதொரு சித்திரவதையான இரவினை நான் அனுபவித்ததில்லை. சில நேரங்களில் உயிர்பிரிவது போலான அதி பயங்கர ஒலிகளையும் எழுப்பினார்.

அது ஒரு அதி பயங்கர இரவு. எனது headphone வெளியில் இருந்து வரும் ஒலிகளை தடைசெய்யும் தன்மையுடையது. அவருடைய உயிரின் ஒலி அதையும் கடந்து வந்து எனது காதைக் குடைந்து கொண்டிருந்தது.

ஒரு முறை சாரதியும் அவரை எழுப்பி நீங்கள் அனைவரினதும் நித்திரையை குழப்புகிறீர்கள் என்றார். 2 நிமிடங்கள் அமைதியானவர் அதன் பின் முன்பைவிட அதிபயங்கரமாக வாசித்தார்.

என் பொறுமை காற்றில் பட படத்துக்கொண்டிருந்தது. கையில் மண்ணெண்ணையும் நெருப்பெட்டியும் இருந்திருந்தால் அவரின் வாய்க்குள் ஊற்றி தட்டிவைத்திருபேன். அந்தளவுக்கு கடுப்பேத்தினார் அவர்.

காலையில் என்னைப் பார்த்து இரண்டு கேள்வி கேட்டார்,
நன்றாக உறங்கினீர்களா?
பயணம் சுகமாக இருந்ததா?

அதுதான் அன்றைய நாளின் அதிபயங்கரமான கொடுமை. சென்ற வேலையை முடித்தபின் மீண்டும் சொகுசுப் பேருந்தில் ஏறிக் குந்தியிருந்து, பாடலின் இனிமையில் உறங்கிப்போனேன்.

திடீர் என முழிப்பு வந்தது. நேற்றைய இரவின் ஒலி பின்னால் இருந்து வந்துகொண்டிருந்தது.

திரும்பிப்பார்த்தேன். திறந்திருந்த தொண்டைக் குழியின் ஊடாக குதம்வரை தெரிய நேற்றைய மனிதரை கொன்றுதின்ற மனிதர் ஒருவர் குறட்டைவிட்டுக்கொண்டிருந்தார்

வடிவேலுவின் "மீண்டும் ஆரம்பித்தில் இருந்தா?" என்ற டயலாக் காதில் அசரீரியாய் ஒலித்தது.



இன்றைய நாளும் நல்லதே ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சமையல் சமையல்

# தக்காளி அவல்

### தேவையான பொருட்கள்

அவல் - 1 கப், தக்காளி – 1, பச்சைப் பட்டாணி - 1/2 கப் (வேகவைத்தது), கேரட் - 1 சிறியது, பெரிய வெங்காயம் - 1, கறிவேப்பிலை – சிறிதளவு, கொத்தமல்லி – சிறிதளவு, மிளகாய் வத்தல் - 3, பெருங்காயம் - 1 சிட்டிகை, மஞ்சள் - 1/2 தே.க, உப்பு - தேவையான அளவு, எண்ணெய் - 4 மே.க, கடலைப்பருப்பு - 1 தே.க, உளுத்தப்பருப்பு - 1 தே.க, கடுகு - 1 தே.க, எலுமிச்சைச் சாறு - 1 மூடி



### செய்முறை

அவலுடன் மஞ்சள், எலுமிச்சைச் சாறு, உப்பு, சிறிது நீர் சேர்த்து நன்கு கிளறி 10 நிமிடம் ஊறவைக்கவும். பின்னர் பச்சைப் பட்டாணியை வேக வைத்துக் கொள்ளவும். பெரிய வெங்காயம்-, தக்காளி, கேரட், கறிவேப்பிலை, கொத்தமல்லி ஆகியவற்றை சிறிதாக நறுக்கி வைத்துக் கொள்ளவும்.

பின் அடுப்பில் தாச்சியை வைத்து எண்ணெயை ஊற்றவும். எண்ணெய் காய்ந்த பிறகு கடுகு, கடலை, உளுத்தம் பருப்பு, காய்ந்த மிளகாய் சேர்க்கவும். பிறகு பட்டாணி, நறுக்கி வைத்த அனைத்தையும் சேர்த்து பச்சை வாடை போகும்வரை வதக்கவும்.

அதனுடன் பருப்பு, ஊறவைத்த அவலை சேர்த்து நன்கு கிளறவும். பெருங்காயம் சேர்த்து இறக்கவும்.



# தினமும் துளசி - நன்மைகள் பல

துளசி இலைகள் மட்டுமின்றி, அதன் பூக்களிலும் எண்ணற்ற மருத்துவ குணங்கள் நிறைந்துள்ளது. எனவே தினந்தோறும் ஒரு சிறு துண்டு துளசி இலையை வாயில் போட்டு மென்றால் ஆரோக்கிய வாழ்க்கை நிச்சயம்.

காய்ச்சல் இருக்கும் போது, உடனே மாத்திரையை வாங்கிப் போடாமல், துளசி இலையை வாயில் போட்டு மென்று வாருங்கள்.

தொண்டைப் புண் இருக்கும் போது, துளசியை நீரில் போட்டு கொதிக்க வைத்து, அந்த நீரால் வாயை கொப்பளித்தால், தொண்டைப்புண் குணமாகும்.

தலை வலிக்கு துளசி மிகவும் சிறப்பான நிவாரணி. அதற்கு துளசியை அரைத்து, அதில் சந்தனப் பொடி சேர்த்து கலந்து, நெற்றியில் பற்று போட்டு வந்தால், நல்ல நிவாரணம் கிடைப்பதோடு, உடல் சூடும் குறையும்.

ஈறுகளில் ஏதேனும் பிரச்சனை இருந்தாலோ அல்லது வாய் துர்நாற்றம் அடித்தாலோ, அப்போது துளசியை உலர வைத்து, பொடி செய்து, அத்துடன் கடுகு எண்ணெய் ஊற்றி பேஸ்ட் செய்து, ஈறுகளில் தடவி தேய்த்து கழுவ வேண்டும்.

தினமும் காலையில் எழுந்ததும் வெறும் வயிற்றில் துளசி இலையை சாப்பிட்டு வந்தால், அவை இரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்தி, இதய நோய் வரும் அபாயத்தைக் குறைக்கும். கடுமையான சளி மற்றும் இருமலால் அவஸ்தைப்பட்டால், துளசி இலையை மென்று அதன் சாற்றினை விழுங்கி வாருங்கள். இதனால் அதில் உள்ள மருத்துவ குணத்தால், சளி, இருமல் பறந்தோடிவிடும். நீரிழிவு நோயாளிகள் துளசி இலையை சாப்பிட்டு வந்தால், அதனால் இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவு குறைந்து, இன்சுலின் சீராக சுரக்கப்பட்டு, நீரிழிவை கட்டுப்பாட்டுடன் வைக்கும்.

## டிசைன்ஸ்



## அழகு குறிப்பு



# எண்ணெய்ப் பசையை நீக்க



எண்ணெய் பசை சருமம் என்றால், அவர்கள் தங்களின் சருமத்தில் உள்ள எண்ணெயை அவ்வப்போது நீக்காவிட்டால், முகத்தில் பருக்கள், கரும்புள்ளிகள், வெள்ளைப்புள்ளிகள் போன்ற பிரச்சனைகளை சந்திக்க வேண்டியிருக்கும்.

சருமத்திற்கு எப்போதும் இயற்கைப் பொருட்களைப் பயன்படுத்தும் போது, சருமத்தின் ஆரோக்கியம் மேம்படும்.

எனவே உங்கள் சருமம் ஆரோக்கியமாக இருக்க வேண்டுமானால் இயற்கை முறைகளை பின்பற்றுங்கள்,

### வெள்ளை வினிகர்

வெள்ளை வினிகரை · நீரில் சரிசமமாக கலந்து, காட்டனில் நனைத்து, முகத்தைத் துடைத்து எடுத்தால், சருமத்தில் உள்ள அதிகப்படியான எண்ணெய் பசை நீங்கி, முகம் பொலிவோடு காணப்படும்.

### புதினா

சிறிது புதினா இலைகளை நீரில் போட்டு நன்கு கொதிக்க விட்டு, அந்நீரை குளிர வைத்து, பின் அதனை காட்டன் பயன்படுத்தி முகத்தைத் துடைத்து எடுக்கலாம். இதுவும் எண்ணெய் பசையைக் கட்டுப்படுத்தும்.

### கற்றாழை

கற்றாழை ஜெல்லை முகத்தில் தடவி சிறிது நேரம் ஊற வைத்து, பின் குளிர்ந்த நீரில் முகத்தைக் கழுவ, முகம் பளிச்சென்று இருக்கும்

### வெள்ளரிக்காய் மற்றும் தயிர்

வெள்ளரிக்காயை துருவி, அதில் தயிர் சேர்த்து கலந்து, முகத்தில் தடவி 10 நிமிடம் ஊற வைத்து, பின் குளிர்ந்த நீரில் கழுவ, முகத்தில் உள்ள எண்ணெய் பசை மட்டுமின்றி, அழுக்குகளும் முழுவதுமாக நீக்கப்படும்.

### குளிர் தண்ணீர்

ஐஸ் நீர் அல்லது ஐஸ் கட்டிகளைக் கொண்டு முகத்தை சிறிது நேரம்



மசாஜ் செய்து வர, முகத்தில் உள்ள அழுக்குகள் நீக்கப்படுவதோடு சருமத்துளைகள் இறுக்கப்பட்டு, எண்ணெய் பசை வெளிவருவதைத் தடுக்கலாம்.

### தக்காளி ஜுஸ் மற்றும் தேன்

தக்காளி சாறு மற்றும் தேனை சரிசமமாக எடுத்து கலந்து, முகத்தில் தடவி 15 நிமிடம் ஊற வைத்து கழுவ, முகம் எண்ணெய் பசையின்றி பளிச்சென்று இருக்கும்.

இவற்றை செய்வதுடன் அடிக்கடி வெள்ளை பட்டுப் போன்ற துணியினால் அடிக்கடி ஒற்றி துடைத்து விடுதல் நல்ல பலனைக் கொடுக்கும். பருக்கள் போடுவதையும் தடுக்கும்

## விநோதங்கள்

### ஆயுளை அதிகரிக்க ஓர் வழியாம்....

மூன்று வருடங்களாக தண்ணீர் அருந்தாமல், வேறு எந்த திரவப் பொருளும் கூட அருந்தாமல் அரோக்கியமாக வாழ்கிறார் பீட்டர் பிளாக் என்ற 26 வயது இளைஞர்.

மேலும், தண்ணீர் குடிக்காத உணவுமுறையில் ஒரு மனிதன் 150 வயது வரை ஆரோக்கியமாக வாழலாம் என்றும் அடித்து கூறுகிறார். இவர் 2012 ம் ஆண்டு மே 5 ம் திகதி மாலை 5 மணிக்கு கடைசியாக தண்ணீர் குடித்ததாக கூறுகிறார்.

## இப்படியும் நடக்கலாம்

# வினோதமான உத்தரவை வெளியிட்ட சனாதிபதி



வட கொரிய சர்வாதிகாரியான கிம் யோங்-அன் சில தினங்களுக்கு முன்னர் வெளியிட்ட உத்தரவில், “வட கொரியாவில் உள்ள ஒவ்வொரு ஆண் குடிமகனும் தன்னை போல் தலைமுடி வெட்டிக்கொள்வதுடன், 2 செ.மீ நீளத்திற்கு மேல் முடியை வளர்க்க கூடாது” என கண்டிப்புடன் ஆணையிட்டுள்ளார். மேலும், ஒவ்வொரு பெண் குடிமகளும் தன்னுடைய மனைவியான ரி சோல்-யூ போன்று தலைமுடியை வெட்டிக் கொள்ள வேண்டும் எனவும் உத்தரவிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் இந்த உத்தரவை சரியாக பின்பற்று-கின்றனரா என கண்காணிக்க சில உயர் அதிகாரிகளையும் அவர் நியமித்துள்ளார்.

அரசு வெளியிட்டுள்ள இந்த உத்தரவை யாராவது மீறினால், அவர்களின் தலைமுடியை அரசு அதிகாரிகளே வெட்டி விடுவார்கள் என மேலும் அந்த உத்தரவில் தெரிவிக்கப்-பட்டுள்ளது.

# ஆடம்பர வாழ்க்கைக்காக செய்த கொலை

ஸ்கொட்லாந்தில் உள்ள 54 வயதான தாயாரின் மகன்களில் ஒருவரான ரோஸ் டாக்கர்ட்(31) என்பவருக்கும் தாயாருக்கும் இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்துள்ளது. ஆடம்பரமான செலவுகளை செய்து வருவதாக தாயார் அவரை கண்டித்து வந்துள்ளார். இந்நிலையில், தனது தாயாரை கொலை செய்த அவன், சடலத்தை கேரவன் என்ற வாகனத்தில் மறைத்து வைத்துள்ளார். பின்னர், காவல்துறைக்கு தகவல் அளித்த ரோஸ் 'தனக்கும் தாயாருக்கு ஏற்பட்ட வாக்குவாதத்தில் அவர் கோபித்துக்கொண்டு வீட்டை விட்டு வெளியே சென்றுவிட்டதாக' புகார் அளித்துள்ளார். காவல்துறை தாயாரை பல இடங்களில் தேட தொடங்கியுள்ளனர்.

தாயாரின் கிரிடிட் கார்டுகளை எடுத்துக்கொண்டு அவர் இஷ்டம்போல் செல்வளித்து வந்துள்ளார்.

தாயார் காணாமல்போன நிலையில் அவரது மகன் வருத்தப்படாமல் ஆடம்பரமாக சுற்றி திரிகிறாரே என ரோஸின் மீது சந்தேகம் வலுத்துள்ளது.

பின்னர், வீட்டினை அதிரடியாக சோதனை செய்தபோது, வாகனத்தில் அழுகிய நிலையில் தாயாரின் உடல் இருந்ததை கண்டுபிடித்ததும் ரோஸ் கைது செய்யப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







**இப்டியும் ஒரு வழிமுறை**

ஒருவர் பாதுகாப்பை விரும்பினால் அவரது வாளின் கூரை நிலத்தில் தட்டி உடைத்துவிட்டு தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும். அல்லாஹ்வே! நான் எத்தி வைத்துவிட்டேன் அல்லாஹ்வே! நான் எத்தி வைத்துவிட்டேன், அல்லாஹ்வே! நான் எத்தி வைத்துவிட்டேன் என்று கூறினார்கள். அப்போது ஒரு மனிதர் அல்லாஹ்வின் தூதரே! நான் விரும்பாமல் வற்புறுத்தப்பட்டவனாக ஒரு அணியில் சேர்ந்து போராட நான் பணிக்கப்பட்டிருக்க யாரோ ஒரு மனிதன் என்னை அவனது ஈட்டியினால் அல்லது அம்பினால் என்னைத் தாக்கிவிட்டால் எனது நிலை என்ன? எனக் கேட்டார்கள் அதற்கு அவனது பாவத்தையும் உனது பாவத்தையும் சுமந்து கொண்டு நரகில் நுழைவான் எனப் பதில் அளித்தார்கள். (முஸ்லிம்)



**முடிவுரை:**

மு:மினாகப் பிறக்கின்ற ஒவ்வொருவரும் சோதிக்கப்படுவது இறை நியதியாகும். நபிமார்கள், நல்லடியார்கள் அனைவரும் சோதிக்கப்பட்டனர். அதில் அவர்கள் பொறுமையாகவும் சமயோசிதமாகவும் இறுதி வரை நடந்து வெற்றி பெற்றனர்.

பலசாலியான இறை நம்பிக்கையாளன் பலவீனமான இறை நம்பிக்கையாளனை விட சிறந்தவன், அல்லாஹ்விடம் நேசத்திற்குரியன். (இருப்பினும்) அனைவரிலும் நன்மை உண்டு. உனக்கு பயன் தரும் வி'யத்தில் நீ ஆசைகொள். (அதற்காக) அல்லாஹ்விடம் உதவி தேடிக் கொள். மனவலிமையை இழக்காதே! ஏதாவது உனக்கு நேர்ந்து விட்டால் நான் இவ்வாறு இவ்வாறு செய்திருந்தால் என்ன என்று பேசிக் கொள்ளாதே!

மாறாக, அல்லாஹ்வின் (கத்ர்) முன்னேற்பாடு அவன் விரும்பியதை செய்பவன் என்று கூறிக் கொள். ஏனெனில் அப்படி, இப்படி செய்தால் என்பது சைத்தானின் செயற்பாட்டை திறந்துவிடும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் (முஸ்லிம்)

தொடரும் .. ..

**– எம்.ஜே.எம். ரிஷ்வான் –**

# ஜெபம்

**ஜெபம் என்பது என்ன?**

கடவுளோடு உரையாடுவது ஜெபம். ஒரு நல்ல நண்பர் நமக்கு இருந்தால் நம் எல்லா வி'யங்களையும் மனம் விட்டு பகிர்ந்து கொள்வது நட்புக்கான இலக்கணம். கடவுளிடம் நாம் நம் வாழ்க்கையை பற்றி பேசுவதே ஜெபம். நாம் கடவுளிடம் நமது இதயத்தை திறந்து பேசுவதும், நம்மோடு பேசும் கடவுளின் வார்த்தைக்கு திறந்த மனத்துடன் செவிமடுப்பதுமே ஜெபம்.

எதைப்பற்றியும் கவலைப்பட வேண்டாம். ஆனால் நன்றியோடு கூடிய இறை வேண்டல், மன்றாட்டு ஆகிய அனைத்தின் வழியாகவும் கடவுளிடம் உங்கள் விண்ணப்பங்களைத் தெரிவியுங்கள். அப்பொழுது, அறிவெல்லாம் கடந்த இறை அமைதி கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள உங்கள் உள்ளத்தையும் மனத்தையும் பாதுகாக்கும். - பிலிப் 4:6-7

**எதற்காக ஜெபம் செய்ய வேண்டும்?**

கடவுளின் அருகில் நாம் நெருங்கிவர ஜெபம் நமக்குத் துணைசெய்கிறது. கடவுளிடம் நாம் பெற்ற நன்மைகளுக்கு நன்றிசொல்லும் போதும், அவர் புகழ் பாடும் போதும், நமது பாவங்களுக்காக மனம் வருந்தும் போதும், நமது பலகீனத்தில் அவரது உதவியை நாடும் போதும், அவர் சித்தத்தை நிறைவேற்றும்



போதும், கடவுள் நம்மோடு பேசுகிறார். கடவுள் நமது சிந்தனைகளையும் எண்ணங்களையும் மாற்றி நாம் என்ன செய்ய வேண்டும் என்று அவர் விரும்புகிறாரோ அதைச் செய்யத் தூண்டுகிறார். நாம் ஜெபம் செய்வதன் மூலம் கடவுளின் சித்தத்தை நிறைவேற்ற அதிக வாய்ப்பை நமக்குக் கொடுக்கின்றார். இதன் மூலம் நாம் கடவுளில் இணைந்து வாழும் பேற்றைப் பெறுகிறோம். முத்திப்பேறு பெற்ற அன்னைத் தெராசாவும் மற்ற புனிதர்களும் இப் பேற்றைப் பெற்றவர்களே.

கேளுங்கள் பெற்றுக் கொள்வீர்கள். அப்போது உங்கள் மகிழ்ச்சியும் நிறைவடையும். யோவான் 16:24

தொடரும் .. ..

www.bible.me

## பெண்கள் பார்க்கும் விதங்கள்

ஐந்து மணி நேரத்திற்கும் குறைவாக தூங்கினால் மன அழுத்தம், சிந்திக்கும் திறன் குறைதல், எதிலும் கவனம் செலுத்த முடியாது, ஞாபக சக்தியை இழத்தல், உடல் எடை அதிகரித்தல் போன்ற இன்னல்களுக்கு ஆளாகின்றனர்.

**எதற்காக தூங்குகிறோம்?**

நாம் அன்றாடம் எதிர்கொள்ளும் பிரச்சனைகள், அலுவலக பயணம், மன அழுத்தம், வேலைப்பளு, கோபம், சோர்வு போன்ற கழிவுகள், மூளையில் தேங்குகின்றன. அவற்றை சுத்தம் செய்யும் வேலையைத் தான், தூக்கம் செய்கிறது.

தினசரி செய்ய வேண்டிய செயல்களில் தூக்கமும் ஒன்று. மூளையிலிருந்து மற்ற உறுப்புகளுக்கு, தொடர்ந்து சமிக்ஞைகள் அனுப்பப்படுகின்றன. இச்செயலுக்கு, ஓய்வு தேவை. ஓய்வு இருந்தால் தான் மறுநாள் வேலைகளை செய்ய முடியும். இல்லாவிடில், செயல்திறன் குறைந்துவிடும். எனவே கட்டாயம், எட்டு மணி நேரம் தூங்க வேண்டும்.

ஒருவருக்கு போதுமான அளவு தூக்கம் இருந்தால், அவரது நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கிறது.

சர்க்கரை வியாதி, உயர் ரத்த அழுத்தம் மற்றும் இதய நோய்கள் வரும் வாய்ப்பு குறைகிறது. தூக்கம் நன்றாக இருந்தால், பல வேலைகளை சிறப்பாக செய்வதற்கான சூழலை உடலும், மனமும் உருவாக்கிக் கொள்கிறது.

ஆனால், தூக்கத்தை தவிர்ப்பவர்கள் நெஞ்சுவலி, தலைவலி, மன அழுத்தம் போன்ற பிரச்சனைகளுக்கு ஆளாகி மருத்துவர்களை சந்திக்க வேண்டிய நிலைமைக்கு ஆளாகிறார்கள். அளவுக்கு அதிகமாக தூங்கினாலும் ஆபத்து, தூக்கமில்லாமல் இருந்தாலும் ஆபத்து, ஆகவே அளவோடு தூங்கி நிறைவோடு









கணவனும் மனைவியும் இரவு படுக்கையில் மிகவும் சந்தோசமாக பல விடயங்களை கதைத்து களிப்பாக இருந்த வேளையில், மனைவியின் தொலைபேசி வெளிச்சமாகியது. உடன் கணவன் தொலைபேசியை எடுத்து பார்த்துவிட்டு *என்னடீ ப்யூட்டி ஃபுல் என்று வந்திருக்கு? என ஆத்திரமாய் கேட்க,* பதறிப்போன மனைவி எடுத்துப்பார்த்தால், அது பற்றரி ஃபுல் என விழுந்திருந்தது.

நீதிபதி: ஆர்டர்... ஆர்டர்... ஆர்டர்

***குற்றவாளி : ஒரு தோசை, இரண்டு வடை, ஒரு பால் கோப்பி***

நீதிபதி: ஷட் அப்

***குற்றவாளி : பால் கோப்பி இல்லையா! அப்படீன்னா செவன் அப் தாங்க!!!***

நீதிபதி: .... .... .... ....

## இவ்வார ராசிபலன்கள்



**மேஷம்** : வளர்ச்சிப் பாதைக்கான வழி திறக்கும். புதிய பணிகளை செயல்படுத்துவீர்கள். திட்டமிட்டதை விட குடும்பச் செலவு அதிகரிக்கும்.



**ரிஷபம்** : நிலுவைப் பணிகளை நிறைவேற்றுவதால், உரிய நன்மை கிடைக்கும். உடன் பிறந்தவர்கள் உதவி கேட்பர். வியாபாரத்தில் விற்பனை சுமாராக இருக்கும்.



**மிதுனம்** : கடந்த கால உழைப்பிற்கான பலன் முழு அளவில் வந்து சேரும். புதிய வீடு, வாகனம் வாங்க யோகம் உண்டு. சமூகப் பணியிலும் ஈடுபாடு வளரும்.



**கடகம்** : மதிநுட்பம் நிறைந்தவர்களின் அறிமுகம் உதவி கிடைக்கும். வளர்ச்சிப் பாதையில் நடை போடுவீர்கள். உடன்பிறந்தவர்கள் அன்பு கொள்வர்.



**சிம்மம்**: தன்னால் இயலாது என ஒதுக்கி வைத்த பணியை, சிலரது வற்புறுத்தலினால் நிறைவேற்ற முயற்சிக்க வேண்டாம். வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும்.



**கன்னி** : பணிகளை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். விலகிய உறவினர்கள், சொந்தம் கொள்ள வருவர். உடல் ஆரோக்கியம் சீராக இருக்கும்.



**துலாம்** : குடும்ப உறுப்பினர்கள் ஆதரவாக இருப்பர். உடல்நிலை ஆரோக்கியம் பெறும். வியாபாரம் செழிக்க மாற்றுத்திட்டம் உருவாகும்.



**விருச்சிகம்** : சமூக அந்தஸ்து கூடும். பூர்வ சொத்தில் ஓரளவு பணம் வரும். பகைவர்கள் விலகிப் போவார்கள். வியாபாரம் வளர்ச்சி பெற கவனம் கொள்வீர்கள்.



**தனுசு** : செயல்களில் முன்யோசனை வேண்டும். கடன் வாங்குவதை தவிர்ப்பது நல்லது. பொது இடங்களில் எவரிடமும் அதிகம் பேச வேண்டாம்.



**மகரம்** : உங்களின் பொறுப்பான செயல் உறவினர்களிடம் பாராட்டு பெறும். எதிரிகள் உங்களை விட்டு விலகுவர். வியாபாரம் செழித்து லாபம் அதிகரிக்கும்.



**கும்பம்** : ஆர்வமுடன் செயல்படுத்துகிற பணிகள் அத்தனையும் சிறப்பாக நிறைவேறும். உதவியவர்களுக்கு நன்றி சொல்வீர்கள். பணவரவு கூடும்.



**மீனம்** : மற்றவர்கள் புகழ்வதைக் கேட்டு ஏமாற வேண்டாம். யாரிடமும் தேவையற்றதை பேசி வம்பில் சிக்க வேண்டாம். வியாபாரத்தில் ஓரளவே லாபம் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி - 05

01 ரேகா என்பவள் ரூ 2 முத்திரைகளையும் ரூ 3 முத்திரைகளையும் சம எண்ணிக்கையில் வாங்கினாள். இம்முத்திரைகளின் மொத்தப் பெறுமானம் ரூபா 100 எனின், அவள் வாங்கிய முத்திரைகளின் மொத்த எண்ணிக்கை?

1. 40 2. 30 3. 50

02. 40 வினாக்கள் உள்ள வினாத்தாளில் ஒரு வினாவிற்கு சரியான விடையளித்தால் 2 புள்ளிகள் வீதம் வழங்கப்படும். பிழையான விடை ஒன்றிற்கு 1 புள்ளி குறைக்கப்படும். 40 வினாக்களிற்கும் விடையளித்த குமார் பெற்றுக் கொண்ட மொத்தப் புள்ளி 35 ஆகும். அவரின் சரியான விடைகள் எத்தனை?

1. 35 2. 20 3. 25

03. சிங்கள கருத்தினை தமிழில் தருக

01. கடல் மிகப்பெரியது ..................................

02. மூக்கு ..................................

03. இருபத்தைந்து ..................................

04. சமநிறையுள்ள 6 புத்தகப்பொதிகளை தபாலில் அனுப்ப ரூ.554.00 செலவானது. எனின் 1 பொதிக்குரிய செலவு யாது?

..................................

05. 3kg பூசணியின் விலை 750.00 எனின் 4kg 500g பூசணியின் விலை யாது?

..................................

06. பின்வரும் சொற்களில் உள்ள உயிர்க்குறிகளை இனங்கண்டு எழுதுக

1. பெட்டகம் :- ..................................

2. சூழல் :- ..................................

3. மைந்தனர் :- ..................................

07. துருப்பிடித்த தகரம் காலில் வெட்டுவதனால் ஏற்படக்கூடிய அபாயகரமான நோய் எது?

1. குக்கல் 2. ஏற்பு வலி 3. மாரடைப்பு

08. உயரமான கட்டடம், உயரமான இடங்களில் வசிப்போர் மின்னல் தாக்குவதை தடுக்க பொருத்த வேண்டிய உபகரணம் எது?

1. மின்னற்கடத்தி 2. மின்னல் வாங்கி 3. இடிவாங்கி

09. கீழ்வரும் பாடலை வாசித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

பாலைப் போல நிலவு வானில்
பவனி வரப் போகுது
கோலக்கடல் அலைக்கைதட்டி
குதூகலிக்கப் போகுது
நீலவானும் கண்சிமிட்டி நின்று பார்க்கப் போகுது
மாலை வேளை மலர்ந்து கங்குல்
மங்கை தோன்றப் போகிறாள்

1. கவிஞர் நிலவை எதற்கு உவமித்துக் கூறுகிறார்?

2. கோலக்கடல் அலக்கைதட்டிக் குதூகலிப்பது ஏன்?

3. மங்கை என்று கவிஞர் எதனைக் குறிப்பிடுகின்றார்?

4. வினைச்சொல் ஒன்றைக் குறிப்பிடுக.

5. பெயர்ச் சொல் ஒன்றை எழுதுக.

6. அடைமொழிச் சொல் ஒன்றை எழுதுக.

7. இப்பாடல் நாளொன்றின் எப்பொழுதில் நடைபெறும் நிகழ்ச்சியைப் பற்றிக் கூறுகிறது?

10. ஒரு நீளமான வாங்கில் சில மாணவர்கள் அமர்ந்துள்ளனர். இதில் குமார் முன்னாலிருந்து ஐந்தாவதாக அமர்ந்துள்ளான். பின்னாலிருந்து கணக்கிடும் போது மூன்றாவதாக அமர்ந்துள்ளான் எனில், வாங்கில் அமர்ந்துள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாது?

1. 7 2. 8 3. 6



**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**


## சிறுவர் முரசு





சிறுவர்களுக்கான குட்டிக் கதை

## அறிவுரை அனைவரிடத்திலும் பெறக் கூடாது



ஊருக்கு ஒதுக்குப் புறமாக ஒரு கொடிய விஷமுள்ள பாம்பு வாழ்ந்து வந்தது. ஊர் மக்கள் யாராவது அதன் புற்றின் பக்கம் போனால் சீறி வந்து கொத்தி விடும். பாம்புப் புற்று இருந்த பாதை அந்த ஊருக்கும் பக்கத்து சந்தைக்கும் குறுக்கு வழி. பாம்புக்கு பயந்தே ஊர் மக்கள் பல தொலைவு சுற்றி அந்த சந்தைக்குப் போய் வந்து கொண்டிருந்தார்கள். வேறு வழியில்லாததால் சலிப்புடனேயே வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்தனர்.

ஒரு நாள் அந்த ஊருக்கு ஒரு யோகி வந்தார். அவர் மிருகங்களிடம் பேசக் கூடிய வரம் பெற்றவர். ஊர் மக்கள் தங்கள் குறையை அவரிடம் முறையிட்டனர்.

அவர் பாம்பிடம் பேசி அதற்கு ஊர் மக்களை கடிக்கக் கூடாது என்று கட்டளை இட்டு விட்டு பக்கத்து ஊருக்குச் சென்று விட்டார். பாம்பும் அவர் கட்டளைக்குக் கட்டுப் பட்டு நடந்தது.

ஆனால் ஊர் மக்கள் சும்மாயில்லை. வழியே போகும் சிறுவனுக்குக் கூட பாம்பிடம் இருந்த பயம் போய் விட்டது. பாம்பைக் கண்டால் அதைக் கல்லால் அடிப்பது, துன்புறுத்துவது, விரட்டியடிப்பது என்று அதன் வாழ்க்கையை நிம்மதியில்லாமல் செய்து கொண்டிருந்தனர். உடம்பில் பல காயங்களுடன் குற்றுயிரும் குலையுயிருமாகி விட்டது பாம்பு.

யோகி ஒரு நாள் பாம்புப் புற்று இருந்த வழியாக ஊருக்குள் திரும்ப வரும் போது பாம்பின் பரிதாபமான நிலையைக் கண்டு அதனை விசாரித்தார். பாம்பும் நடந்த கதையையெல்லாம் கூறி அழுதது.


யோகி பாம்பைப் பார்த்து "அட முட்டாள் பாம்பே! உன்னை மக்களைக் கடிக்கவேண்டாம் என்றுதானே கூறிச் சென்றேன். பக்கத்தில் வருபவனைப் பார்த்து சீறாதே என்று ஒரு போதும் சொல்லவில்லையே" என்று கேட்டார். இதற்குப் பின் பாம்பும் பிழைத்துக் கொண்டது.

**அறிவுரைகளை ஆராய்ந்து செயல்படுவது அவசியமானதாகும்.....**

**சிந்திக்க .. ..**

**துன்பங்களை அனுபவித்த காலங்களை மறந்து விடுங்கள். ஆனால் அவை கற்றுத் தந்த பாடங்களை மறவாதீர்கள்.**


**மலைமுரசு**



தரப்பட்டுள்ள இப்படத்திற்கு நிறந்தீட்டி கீழ்வரும் மலைமுரசு அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும்.

வயதெல்லை : 10 வயதான மாணவர்கள் மாத்திரம்

*அனுப்ப வேண்டிய முகவரி : மலைமுரசு. இல - 159ஏ, கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.*



பொ. மஹிஸ்கர், தரம் - 04
புனித வளனார் பாடசாலை

## பூனைக்குட்டி

*க. மைதிலன்*

நான் எனது செல்லப்பிராணியாக பூனைக்குட்டி வளர்க்கின்றேன். அவன் மிகவும் அன்பானவன். நான் சாப்பாடு கொடுத்தால் மாத்திரமே உண்ணும். அவன் என் கூட எனது கட்டிலில் தான் படுப்பான். இதனால் என் அக்கா என்கூட படுப்பதை தவிர்ப்பாள். அவனுக்கு இனிப்புப் பண்டம் என்றால் மிகவும் விருப்பம். அவனை நான் செல்லமாக ஜேன் என அழைப்பேன். வாரம் ஒருமுறை அவனை குளிக்கவார்ப்பேன்.





வ. கடாட்சனி
தரம் - 09

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் முரசு

# அமெரிக்காவில் இருந்து தமிழர்களுக்கு....




யுத்தம் முடிந்த பிற்பாடு கைப்பற்றிய தேசங்களை பிரித்து ஆள்வது சாதாரணமானதுதானே! கொரியாவையும் அப்படி பிரித்துத்தானே இன்றும் அதனை குட்டிச் சுவராக்கி வைத்து இருக்கிறார்கள். அது போலவே நாதியற்றுப் போன ஜெர்மன் பெருநிலப்பரப்பை அன்றைய ஆதிக்க அரசுகளான அமேரிக்கா, இரசிய, பிரித்தானியா, பிரான்ஸ் ஆகியன பிரித்து எடுத்து தமக்கு சார்பான ஒரு பொம்மை ஆட்சியை அமைத்துக் கொண்டன.

அவற்றை நிர்வகிக்க, மற்றைய அர்சுகள் தலையிடாமல் இருக்க கல்லாலான, இரும்பாலான பெரும் மதில் சுவர்களை தமது வசதிக்கு ஏற்றாற்போல அமைத்துக் கொண்டன. ஆங்காங்கே எல்லைப் பிரச்சனைகளும் இடம்பெற்ற வண்ணமே இருந்திருக்கிறது. Berlin wall வரலாற்றில் தனக்கென அத்தியாயத்தை பிடித்துக் கொண்டது. முதலாவதாக ஜெர்மன் தேசத்தை கிழக்கு ஜெர்மன், மேற்கு ஜெர்மன் என்று பிரித்துக் கொண்டார்கள். கிழக்கு ஜெர்மனி நிலப்பரப்பை இரசியா பிரித்து கம்யுனிச அரசை நிறுவிக் கொண்டது. மேற்கு ஜெர்மன் நிலப்பரப்பின் மேல் பகுதியை பிரான்ஸ் உம், நடுப்பகுதியை பிரித்தானியாவும், கீழ்பகுதியான கொஞ்சம் விசாலமான தேசத்தை அமெரிக்காவும் பிரித்து தமக்கு சார்பான முதலாளித்துவ அரசை அமைத்துக் கொண்டன.

கிழக்கு ஜெர்மன் அரசுதான் முதன் முதலில் இரசியாவின் அனுமதி பெற்று, தனிக்குடித்தனம் போக சுவர் எழுப்ப வேண்டும் என்று முடிவெடுத்து அதற்கான வேலைகளில் இறங்கியது. 1961 இல் இருந்து 1989 கம்யுனிசம் வீழும் வரையும் அந்த சுவர்கள் தாங்கிய கண்ணீர்க் காவியங்கள் ஏராளம். அவற்றில் தெளிக்கப்பட்ட இரத்த கறைகள் ஏராளம், ஏராளம்.

மனித மனங்களின் ஏக்கங்களை, சுயங்களை அடிமை கொண்டு தான் இந்த நான்கு தேசங்களும் ஒரு தேசத்தை பிரித்து மேய்ந்தன. (பிரான்ஸ் உட்பட). எத்தனை உறவுகள் நிர்க்கதியாக்கப் பட்டார்கள். எல்லைகள் கடக்க முயன்று எல்லை ஓரங்களில் சுடப்பட்டு அழுகிப் போனவர்கள் எத்தனை பேர்? எல்லை கடக்க முயன்று கைது செய்யப்பட்டு தலை துண்டிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்? சுரங்கங்கள் தோண்டி எல்லை கடக்க முயன்று, சுரங்கங்களை விட்டு வெளியில் வராதவர்கள் எத்தனை பேர்? இன்னும் பலர் எங்கே என்றே தெரியாமல் எத்தனை பேர்? எல்லாமே மனித உறவுகளின் மேல் எழுந்த உச்சபட்ச பிணைப்புகளே தவிர வேறில்லை. Gunter Litfin இவர்தான் முதன்முதல் பேர்ளின் சுவர் கடக்க முற்பட்ட ஒரு தையல் தொழிலாளி. எல்லை கடக்க முற்பட்ட பொழுது கைது செய்யப்பட்டு தலையில் சுடப்பட்டு கொலை செய்யப்பட்டவர். இவரிலிருந்தே அனைத்தும் தொடக்கமாகியது...

இந்த சுவர்களால் பிரிக்கப்பட்ட காலங்களில் ஆட்கடத்தல் தரகர்கள் பெரும் பணக்காரர்கள் ஆனார்கள். சுவாரசியம் என்ன வென்றால் அங்கே குடிகொண்டிருந்த அரசுகளே தரகு வேலை பார்த்ததுதான். உறவுகளை சந்திக்க, சேர மட்டும் எல்லை கடக்கவில்லை. இளைஞர்கள் அதிகம் கிழக்கில் இருந்து மேற்கிற்கும் மேற்கில் இருந்து கிழக்கிற்கும் எல்லை தாண்டினார்கள். கிழக்கில் கல்வி இலவசம், வாழ்க்கைச்செலவு அதிகம். ஆனால் மேற்கில் கல்விக்கு பணம், வாழ்க்கை செலவு குறைவு மற்றும் முதலாளித்துவ உல்லாசம். கடைசியில் கிழக்கு ஜெர்மனியின் மக்கள் தொகை பெருமளவில் குறைந்து போனதாக தரவுகள் சுட்டிக் காட்டின. மூன்று மில்லியன் மக்கள் கிழக்கு ஜேர்மனை விட்டு ஓடியே போய் விட்டார்களாம்.

பேர்ளின் சுவர் என்றால் என்ன என்று யாரும் உங்களிடம் கேட்டால், நீங்கள் சொல்ல வேண்டியது இப்படித்தான். 155km. Electric contact or signal fencing: 127.5km. Observation towers: 302. Dog runs: 259. Bunkers: 20, guarded by more than 11,000 soldiers. என்னதான் இப்படி இருந்தாலும் ஜெர்மனியர்களின் ஒத்திசைவே அவர்களை இறுதியில் தனித்தேசமாகவே மீண்டும் உயிர்த்தெழ வைத்தது என்றால் மிகையாகாது. இறுதியில் கம்மியுனிசம் வீழ்ந்த பொழுது பேர்ளின் சுவரும் தகர்ந்து போனது. ஜெர்மன் தேசம் புத்துயிர் பெற்று எழுந்து கொண்டது. சுவர் தகர்ந்த ஒருநாளில் "Only today is the war really over".

# நிகழ்வுகள்

## முள்ளிப்பொத்தானையில் உள்ள பாலர் பாடசாலைக்கான கலை நிகழ்வும், பிரியாவிடையும்

முள்ளிப்பொத்தானை நிருபர்

முள்ளிப்பொத்தானை அல் சதானியா மற்றும் ஈச்சநகர் பாலர் பாடசாலைகளுக்கான கலை நிகழ்வும் பிரியா விடை வைபவமும் 25-12-2015 அன்று மாலை மூன்று மணிக்கு முள்ளிப்பொத்தனை புகாரி வித்தியாலய கேட்போர் கூடத்தில் தம்பலகாமம் பிரதேச முன்பள்ளி இணைப்பாளர் ஆசிரியர் திரு.தமிம் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்விற்கு கிழக்கு மாகண சபை உறுப்பினர் ஆர்.எம்.அன்வர் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்திருந்தார். நிகழ்வின் போது சிறப்பு அதிதியினால் பாலர் பாடசாலை மாணவர்களுக்கு பரிசுப்பொதி வழங்கி வைக்கப்பட்டது.







## சிறப்பு கவியரங்கு

### நீங்களும் எழுதலாம் நிகழ்வு - 21.11.2015

சேனையூர் நிருபர்

நீங்களும் எழுதலாம் வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் சிறப்பு கவியரங்கும், பாராட்டு நிகழ்வும் கடந்த 21.11.2015 சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு திருகோணமலை யேசுவிட் கலாசாலை மண்டபத்தில் நீங்களும் எழுதலாம் ஆசிரியர் எஸ்.ஆர். தனபாலசிங்கம் தலைமையில் இடம்பெற்றபோது அவர் தலைமையுரை ஆற்றுவதையும், கவிஞர்களான செ. ஞானராசா மு. யாழவன், உமாராஜன் பிரதீபா, ந.நவசஞ்சிதா ஆகியோர் கவியரங்கில் கவிபாடுவதையும், மூத்த எழுத்தாளர் சூசை எட்வட் தம்பதியுடன் கௌரவிக்கப்படுவதை படங்களில் காணலாம்.







## வருடாந்த கலை நிகழ்ச்சி

### கலைமகள் பாலர் பாடசாலை

சேனையூர் நிருபர்

திருகோணமலை கலைமகள் மொன்டசுரி பாடசாலை சிறார்களின் வருடாந்த கலைவிழா 22.11.2015 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு பாடசாலையின் அதிபர் திருமதி.சாரதாதேவி ஆனந்தராஜா தலைமையில் இடம்பெற்றது. மங்களவிளக்கேற்றுதலுடன் ஆரம்பமாகிய கலைவிழாமிகவும் சிறப்பாக இடம்பெற்றது.

இந் நிகழ்வின் அதிதிகளான திருகோணமலை வலய பாலர் பாடசாலை கல்வி பணியகத்தின் செயலாற்றுப் பணிப்பாளர் சி.வரதசீலன், திருகோணமலை வலயக் கல்வி அலுவலகத்தின் உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி.சுகந்தினி உட்பட அதிதிகள் பலர் கலந்து கொண்டனர். சிறார்களின் பல்வேறு வகையான கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீண்டும் ஏமாற்ற...

செய்வதற்கான தேசிய இயக்கத்தின் ஏற்பாட்டாளருமான அருட்தந்தை சக்திவேல் தெரிவித்தார்.

அரசாங்கம் தமிழ் அரசியல் கைதிகளை புனர்வாழ்வுக்கு அனுப்புவதாக உறுதியளித்த போதும் புனர்வாழ்வுக்கு வழங்குவது தொடர்பில் சட்டச்சிக்கல் காணப்படுகிறது. அத்துடன், ஒன்றுக்கு மேற்பட்ட வழக்கு உடையவர்களை புனர்வாழ்வுக்கு அனுப்ப முடியாத நிலையும் காணப்படுகிறது.

நபர்களை புனர்வாழ்வுக்கு அனுப்புவதா அல்லது வழக்குகளின் எண்ணிக்கைக்கு அமைய புனர்வாழ்வு வழங்குவதா என்பதை நீதிமன்றமே தீர்மானிக்க வேண்டுமென அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறான நிபந்தனைகள் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கவேண்டும் என்ற உண்மையான நோக்கம் அரசாங்கத்துக்கு இருக்கின்றதா என்ற சந்தேகத்தைத் தோற்றுவிப்பதாகவும் அருட்தந்தை தெரிவித்தார்.

தமிழ் அரசியல் கைதிகளில் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்தவர்கள் உள்ளனர். அவ்வாறானவர்கள் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டு புனர்வாழ்வுக்குச் செல்வதானால் அவர்களுக்கான நஷ்டஈடுகளைப் பெறுவது போன்ற விடயங்களில் சிக்கல்களை ஏற்படுத்தலாம் என்றும் கூறினார். எனவே நீதிமன்றமே இது விடயத்தில் தீர்மானிக்க முடியும் என்றும் அருட்தந்தை சுட்டிக்காட்டினார்.

## முஸ்லிம்களும்...

உரிமைகள் தொடர்பான போராட்டத்திற்கு பலமும் கிட்டியிருக்கும்.

எனினும் நமக்கிடையில் கடந்த காலத்தில் நிகழ்ந்த கசப்பான சம்பவங்களின் காரணமாக ஏற்பட்டுள்ள இடைவெளி அதனைத் தடுத்து நிற்கின்றது.

காத்தான்குடிப் படுகொலைகள், வடக்கின் பலவந்த வெளியேற்றம், கிண்ணியாவின் குரங்குபாஞ்சான் பள்ளிவாசல் ஆக்கிரமிப்பு என கடந்த காலத்தின் கசப்பான அனுபவங்களை மறந்து எமது இனத்தின் எதிர்கால நலனுக்காய் ஒற்றுமைப்பட வேண்டிய தருணத்தில் அதற்கான முயற்சிகளில் நேர்மையான முன்னெடுப்புகள் காணப்படாமை துரதிருஷ்டவசமானதாகும்.

ஆனால் விடுதலைப் புலிகளின் இயக்கத்தில் இணைந்திருந்த மேஜர் அன்பு என்ற பெயரில் அறியப்பட்ட எம் முஸ்லிம் சகோதரி மற்றும் ஏராளமான முஸ்லிம் சகோதரர்கள் எல்லாம் தமிழ் இன விடுதலைக்கான போராட்டத்தில் தங்கள் இன்னுயிரை இழந்துள்ளார்கள்.

ஏனைய விடுதலை இயக்கங்களிலும் முஸ்லிம் இளைஞர்களின் பங்களிப்பு குறைத்து மதிப்பிட முடியாதது.

ஆயினும் தமிழ் பேசும் மக்களிற்கான போராட்டத்தை ஒரு சில தமிழ் அரசியல்வாதிகள் தமிழ் மக்களுக்கு மட்டுமான போராட்டமாக வரையறை -த்துக் கொண்ட காரணத்தினால் இந்தப் பங்களிப்புகள் குறித்தோ, உயிரிழந்த எமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்துவதற்கோ முஸ்லிம் சமூகம் பின்னிற்கின்றது.

மறுபுறத்தில் இந்தளவு பங்களிப்புகளை வழங்கியுள்ள நிலையிலும் தமிழ் தலைவர்களின் ஏற்பாடுகளில் நடைபெறும் முக்கிய நிகழ்வுகளில் முஸ்லிம் சமூகம் தள்ளிவைக்கப்படுவது வேதனையானது.

எனவே எமது மக்களின் ஒற்றுமை விடயத்தில் இனியும் தாமதிக்கக் கூடாது. தமிழ் பேசும் மக்களின் இனவிடுதலைப் போராட்டத்தின் முக்கிய நாளொன்றை நினைவு கூரும் இந்த வேளையில் தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமைக்கான முயற்சிகளும் இன்று தொடக்கம் இதயசுத்தியுடன் முன்னெடுக்க அனைவரும் சபதம் ஏற்க வேண்டும்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை உள்ளிட்ட விடயங்களில் தமிழ் மக்களோடு தோளோடு தோள் நின்று அரசுக்கு அழுத்தம் கொடுக்க முஸ்லிம்களும் முன்வரவேண்டும். எமது பிரச்சினைகளின் போது தமிழ் தரப்பின் நேசக்கரமும் நீட்டப்பட வேண்டும்.

இதன் மூலமாக மட்டுமே எமக்கிடையிலான வேற்றுமைகள் புறந்தள்ளப்பட்டு ஒற்றுமைக்கான வழி செப்பனிடப்படும்.

தமிழ் மக்களின் இழப்புகள் தொடர்பாக சகோதர இனம் என்ற வகையில் எங்கள் ஆழ்ந்த வேதனைகளையும் இந்தத் தருணத்தில் நேசமுடன் பகிர்ந்து கொள்கின்றோம் என்றும் கலாநிதி றியாஸ் தனது அறிக்கையில் தொடர்ந்தும் தெரிவித்துள்ளார்.

## திருமலை வதை...

கடத்தப்பட்டவர்களை இந்த சித்திர வதை முகாமிற்கு மாற்றியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலையில் செயற்பட்டு வந்த குறித்த முகாம் தொடர்பில், இலங்கைக்கு வருகைதந்திருந்த காணாமல் போனோர் தொடர்பான ஐக்கிய நாடுகளின் செயற்குழு தகவல் வெளியிட்டிருந்தது.

இந்த முகாமில் பலர் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டதாகவும், அவர்கள் தங்களின் ரத்தத்தினால் முகாமின் சுவரில் எழுதி வைத்திருப்பதாகவும் குறித்த செயற்குழு தெரிவித்திருந்தது.

இது தொடர்பான விசாரணைகளின் நிமித்தம் மூன்று பாதுகாப்பு தரப்பினர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத் தக்கது.

அம்மையார் சூக்காவின் தலைமையில் இயங்கும் இத் தன்னார்வத் தொண்டு நிறுவனம் அதிகாரிகளின் பட்டியலை வெளியிடும் சந்தர்ப்பத்தில் பல உண்மைகள் வெளிவரும் வாய்ப்பிருப்பதாகத் தெரிகின்றது.

## எமது விடுதலை....

அனுதாபங்களையும் அஞ்சலிகளையும் செலுத்துவதோடு,

கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக குடும்பங்கள் மற்றும் உறவுகளையும் பிரிந்து சிறைகளில் வேதனையில் வாடும் எங்களுக்கு இந்த மாணவனது திடீர் உயிர்த்தியாகம் எங்களை மிகுந்த சோகத்தினையும் வேதனையையும் ஆழ்த்தியுள்ளது.

இவரது இழப்பு தொடர்பான எமது உணர்வுகளை எழுத்தில் சொல்லி மட்டுப்படுத்த முடியாது.

எனவே நாங்கள் மிகவும் ஆழ்ந்த வேதனையுடன் எமது அஞ்சலிகளை அந்த மாணவனது குடும்பத்திற்கும் அவருக்கும் செலுத்துவதோடு, இனிமேலும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக யாரும் உயிர்த்தியாகம் செய்வதை ஒரு காலமும் தமிழ் அரசியல் கைதிகளாகிய நாம் விரும்பவில்லை என்பதனை மனவருத்தத்துடன் தெரிவித்துக்கொள்வதுடன்,

மாறாக சாத்வீக வழியிலான அறவழிப் போராட்டங்களை முன்னெடுப்பதே சாலச்சிறந்தது என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இப்படியான சம்பவங்களை இனிமேல் தவிர்த்துக்கொள்ளுமாறு எங்களை நேசிக்கும் மக்களாகிய உங்களை அரசியல் கைதிகளாகிய நாம் தாழ்மையுடன் வேண்டிக்கொள்கின்-

## கங்குவேலித் ....

முன்னர் சென்ற பிரதேச செயலாளர் தலைமையிலான குழுவினர் பிரச்சனைகளைத் தீர்க்க உயர் மட்ட முடிவு வரும் வரை காணிஉரித்தாளிகளையும், அத்துமீறியவர்களையும் காணிக்குள் பிரவேசிக்கவேண்டாம் என அறிவித்திருந்தனர்.

அதற்கிணங்க காணி உரிமையாளர்கள் செல்லாமல் இருக்கையில் அத்துமீறிய விவசாயிகள் தொடர்ந்தும் வயல்களில் உழவு வேலைகளில் ஈடுபட்டுவந்தமை பற்றி மாகாண ஆளுநர், அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர் மற்றும் மூதூர் காவல்துறையின் கவனத்திற்குப் பாதிக்கப்பட்ட தமிழ் விவாயிகள் கொண்டுவந்தனர்.

இந்நிலையில் முறைப்பாட்டாளர் -களையும் அத்துமீறியவர்களையும் கடந்த புதன்கிழமை (25) மூதூர் காவல்துறை விசாரணைக்கு வருமாறு அழைத்திருந்தனர்.

ஆயினும் முறைப்பாட்டாளர்கள் சென்றபோதும் அத்துமீறலில் ஈடுபட்டோர் வருகை தரவில்லை.

இதனையடுத்து மூதூர் காவல்துறை கடந்த வியாழக்கிழமை (26) விசாரணைக்கு வருமாறு பணித்ததற் -கிணங்க முறைப்பாட்டாளர்கள் மட்டுமே காவல்துறைக்கு வருகை தந்ததாகவும் அத்துமீறியவர்கள் காவல்துறையில் அழைப்பைக் கிஞ்சித்தேனும் கணக்கெடுக்கவில்லை என்றும் தமிழ்

## அரசியல் கைதிகளின்...

காலகட்டத்தில் இன்னுமொரு இளைஞன் முனையக்கூடாது என்பதை வலியுறுத்துமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஒட்டுமொத்தத் தமிழ் மக்களும் இணைந்தே போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய காலச்சூழலில் நாம் உள்ளோம். அவ்வாறு அனைவரும் இணைந்து பெரும் போராட்டமாகத் தமிழர்களின் மறுக்கப்படும் உரிமைகளுக்காகப் போராடினால் மட்டுமே அதனை அடைய முடியும்.

தனித்தனியாக முன்னெடுக்கப்படும் போராட்டமொன்றின் ஈகங்களைச் சிதறடிப்பதற்காக அவ் ஈகங்களை பல்வேறு வகையான வியாக்கியானங் களுக்கு உட்படுத்தி எதிரிகளும் வஞ்சகர்களும் அப்போராட்டத்தைக் கேலிக்குரியதாக்கிவிடுவதை நாங்கள் காண்கின்றோம்.

ஆகவே மக்கள் மயப்படுத்தப்பட்ட போராட்டங்களை முன்னெடுக்க இக்கணத்தில் செந்தூரனின் ஈகத்தின் மீது உறுதிமொழி எடுத்துக்கொள்வோம் என அவர்

## பாடசாலை வளப்....

கல்விவலயம் சார்பாக உதவி வளைய கல்வி பணிப்பாளர் ம்ற்றும் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் லாகிர் முன்னாள் பிரதி அமைச்சர் எம்.எஸ்.தௌபீக் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஆசிக் பாடசாலையின் அதிபர்கள் பிரதேச பாடசாலையின் அபிவிருத்திக் குழுக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்

குறித்த நிகழ்வின் பொது பல குறைபாடுகள் சுட்டிகாட்டப்பட்டன

மாகாண பணிப்பாளர் தெரிவிக்கையில் அடுத்த ஜனவரி முதல் முறையான இடமாற்றம் குறித்து அவதானமாக இருப்பதுடன் குறித்த பாடசாலைகளுக்கு ஆசிரியர் வெற்றிடங்கள் நிரப்பப்படும் எனவும் அத்துடன் மாகாண சபையின் கீழ் சுமார் 300 க்கு மேற்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கபடுள்ளதாகவும் அதிலும் குறித்த மாவட்டத்தில் உள்ளவர்களை சொந்த மாவட்டத்திலே நியமிப்பதாகவும் தீர்மானிக்கபட்டதாக தெரிவித்தர்

மேலும் முதல் அமைச்சர் பேசுகையில் இதுகுறித்து தான் எதிர்வரும் ஜனவரி முதல் முறையான பொறிமுறையின் கீழ் கல்வி நடவடிக்கைளை கொண்டு செல்லபடுவதுடன் குச்சவெளி கோட்ட பாடசலகளுக்கான வெற்றிடங்கள் விசேடமாக கவனத்தில் கொள்ளப்படும்

## ஒலுவில்....

ஆக்கியோருக்கு எழுதப்பட்டுள்ள கடிதத்திலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தற்போதுவரை மூன்று ஆண்டுகளாக மாணவர்கள் பொறியியல் துறைக்கு உள்வாங்கப்பட்டுள்ள போதும் குறித்த பல்கலைக்கழகத்தின் பொறியியல் துறையானது கடும் ஆளணி மற்றும் வளத் தட்டுப்பாடுகளை எதிர்கொண்டுள்ளதாக மாணவரமைப்பு தெரிவித்துள்ளது.

பொறியியல்துறை உருவாக்கப்பட்ட போது மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு உள்வாங்கப்பட்டு ஏழு மாதங்களிற்குப் பிறகே, விரிவுரையாளர்களும், முதல்வர்களும் இத்துறைக்கு நியமிக்கப்பட்டனர் என்பதை வெளிப்படுத்தியுள்ள மாணவர் அமைப்பினர் காலாண்டுப் பாட நெறிகளைப் பூர்த்தி செய்வதற்காகச் சில ஆய்வுகூடச் செயற்பாடுகளை விட்டுவிடும் செயற்பாடுகளும் நடைபெறுவதாகத் தெரிவித்துள்ளனர்.

மின்னியல், தொழில்நுட்ப எந்திரவியல் திணைக்களத்தின் மூன்றாம் ஆண்டுக்கு உரிய நான்கு பாடங்களையும் வருகை தருவிரிவுரையாளர்களே கற்பிக்கும் அளவிற்கு ஆளணி வளப்பற்றாக்குறை உண்டு. அவர்களும் சனி, ஞாயிறு தினங்களிலேயே மொத்தமாகக் கற்பிக்க முயற்சிக்கின்றனர் என்றும் மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

2015 சனவரியில் புதிய சனாதிபதி, புதிய பிரதமர், புதிய பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுத் தலைவர், புதிய துணைவேந்தர் ஆனால் எமது நிலையில் எவ்வித முன்னேற்றமும் கடந்த பதினொரு மாதங்களாக ஏற்படவில்லை என்றும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

எனவே உடனடியாக தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் பொறியியல்துறை மாணவர்களை வேறு பல்கலைக்கழகங்களுக்கு மாற்றுமாறு கேட்டுக்கொள்வதுடன் ஒலுவில் பல்கலைக்கழகத்தில் பொறியியல்துறையை நடாத்துவதால் எப்போதுமே பலனேற்படப் போவதில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம் என அவர்கள் அனுப்பிய கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

## பிள்ளையானுக்கு....

வழங்கப்பட்டுள்ளது.


கடந்த செவ்வாய்க்கிழமை மாதாந்த சபை அமர்வின் போது சபை உறுப்பினர்களில் ஒருவரான புஸ்பக்குமார் "இச்சபையின் கௌரவ உறுப்பினர் சிவனேசத்துரை சந்திரகாந்தன் பேரவைச் செயலாளருக்கு 31.10.2015ம் திகதியிடப்பட்டு எழுதியுள்ள கடிதத்தில் அவரை விடுவிக்கும் வரைக்கும் விடுமுறை வழங்குமாறு இச்சபையைக் கோருவதாக வேண்டுகொள் விடுத்துள்ளார்'' எனவே அப்பிரேரணையை நான் முன்மொழிகின்றேன் எனத் தெரிவித் -திருந்தார். அதனை எதிர்க்கட்சி உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெவ்வை வழிமொழிந்ததை அடுத்து சபை உறுப்பினர்களினால் ஏகமனதாக சந்திரகாந்தனுக்கு விடுமறை அளிக்கும் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதனையடுத்து மூன்று மாதங்களுக்கு விடுப்பை வழங்க மாகாணசபை அனுமதி வழங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

ஒரு செவ்வக வடிவக் காணியை விமலாவிற்கும் கமலாவிற்கும் பிரிப்பதற்கு உத்தேசித்துள்ள விதம் உருவில் காணப்படுகின்றது. தொடக்கக் காணியின் நீளப் பக்கங்களின் நடுப்புள்ளிகளில் உள்ள P,Q ஆகியவற்றின் மூலம் ஒவ்வொரு காணித்துண்டினதும் நுழைவுப்பாதை காட்டப்பட்டுள்ளது.




(1) விமலாவிற்கும் கமலாவிற்கும் கிடைக்கும் காணித்துண்டுகளின் கேத்திரக் கணித வடிவங்களை இணங்கண்டு அவற்றின் முறையே தருக.

(2) விமலாவிற்கும் கிடைக்கும் காணித்துண்டின் பரப்பளவு யாது?

(3) விமலாவிற்கும் கமலாவிற்கும் கிடைக்கும் காணித்துண்டுகளின் பரப்பளவு களுக்கிடையே உள்ள விகிதத்தைக் காண்க.

(4) அவர்களுக்கு கிடைக்கும் காணித்துண்டின் பரப்பளவுகளும் அவற்றின் நுழைவுப் பாதைகளும் மாறாமல் இருக்குமாறும் காணித் துண்டுகள் செவ்வகங்களாக இருக்குமாறும் தொடக்கக் காணி பிரிக்கப்படத்தக்க விதத்தை மேற்குறித்த வரிப்படத்தில் அளவீடுகளுடன் காட்டுக.

(5) செவ்வக வடிவங்கள் கிடைக்குமாறு காணியைப் பிரித்த பின்னர் விமலாவி -ற்குக் கிடைக்கும் காணித துண்டினுள்ளே ஒதுக்கத்தக்க மிகப் பெரிய வட்ட நிலப் பகுதியின் ஆரையைக் கணிக்க.

## பாடம் : வரலாறு

01. வரலாற்றைக் கற்பதன் மூலம் பெறும் அறிவைப் பயன்படுத்த வேண்டிய விதத்தை மிகச் சரியாகக் காட்டும் கூற்று பின்வருவனவற்றில் எது?

(1) இறந்தகாலத்தினூடாக நிகழ்காலத்தை விளங்கிக் கொண்டு எதிர்காலத்தை கட்டியெழுப்புவதற்கு.

(2) இறந்தகாலத்தில் செய்த தவறுகள் மீண்டும் நிகழாதவாறு பார்த்துக் கொள்வதற்கு.

(3) இறந்தகாலத்தில் பெற்ற வெற்றியை மேலும் பேணுவதற்கு.

(4) இறந்தகாலப் புகழ் பற்றிய பெருமையை ஏற்படுத்துவதற்கு.

02. துட்டகைமுனு அரசகுமாரர் நாட்டைப்பகைவர்களிடமிருந்து விடுவிக்கும் பணியை வெற்றிகரமாகத் தேவையான பின்னணியை அமைப்பதில் திட்டத்துடனும் தொலைநோக்குடனும் செயற்பட்டு மிகுந்த சேவையை ஆற்றியவர்.

(1) சகோதரராகிய சத்தாதீச அரசகுமாரர்.

(2) பதினாறு மகா இராட்சதர்கள் உட்பட்ட படைத் தலைவர்கள்.

(3) அறிவுரையை வழங்குவதன் மூலம் பிக்குகள்.

(4) தந்தையாராகிய காவன்தீச அரசன்.

03. ஆயிரங்கனக்கான ஆண்டுகளாக இலங்கையின் தொடர்ச்சியான வரலாற்றைக் கற்பதற்கான ஒரு மூலமாக மகாவம்சத்தின் முக்கியத்துவத்தை மிகச் சரியாகக் காட்டும் கூற்று யாது?

(1) எழுத்துருவ மூலமாக மகாவம்சத்தில் வரும் எல்லாத் தகவல்களையும் சரியாகக் கருதலாம்.

(2) பண்டைய அரசர்கள் தொடர்பாகக் குறிக்கப்பட்ட தகவல்களை மாத்திரம் சரியாகக் காட்டும் மூல நூலாக மகாவம்சம் முக்கியத்துவம் வாய்ந்தது.

(3) மகாவம்சத்தில் வரும் தகவல் ஏனைய மூலகங்களினால் உறுதிப்படு த்தப்படுகின்றமையினால் எழுத்துருவ மூல நூலாக முக்கியத்துவம் வாய்ந்தது.

(4) மஹானாம என்ற தேரரின் பெயரில் எழுதப்பட்டிருப்பதால் சமய வரலாறு தொடர்பான தகவல்களை மாத்திரம் சரியாகக் காட்டும் மூலமாக முக்கியத்துவம் வாய்ந்தது.

**வரலாறு - பாப்பு**

ஆசிரியர் . திரு.த.ராஜ்குமார்
Oxford கல்வி நிலையம், இலிங்கநகர், திருகோணமலை.

## பாடம் : பௌதீகவியல்

01. ஆக்கிமிடீசின் கோட்பாட்டின் கூற்று

(1) பாய்மம் ஒன்றின் அடர்த்தியிலும் பார்க்க குறைந்த அடர்த்தி யைக் கொண்ட பொருள்கள் அப்பாய்மத்தில் அமிழுகின்றன என்பதாகும்.

(2) பாய்மம் ஒன்றின் அடர்த்தியிலும் பார்க்க கூடிய அடர்த்தி யைக் கொண்ட பொருள்கள் அப்பாய்மத்தில் அமிழுகின்றன என்பதாகும்.

(3) ஓய்வில் உள்ள பாய்மம் ஒன்றில் அமிழ்த்தப்பட்டிருக்கும் பொருள் ஒன்றின் மீதுள்ள பாய்ம உதைப்பானது இடம் பெயர்ந்த பாய்மத்தின் நிறைக்குச் சமனான மேலுதைப்பு என்பதாகும்.

(4) பொருள் ஒன்று அசைவற்ற பாய்மம் ஒன்றில் மிதக்கும் போது இடம் பெயர்க்கப்படும் பாய்மத்தின் நிறை பொருளின் நிறைக்குச் சமம் என்பதாகும்.

02. கழியொலி என்பது

(1) ஒலியின் வேகத்திலும் பார்க்க மிகக்கூடிய வேகங்களில் செல்லும் ஒலி அலை வகை.

(2) மனிதக் கேள் தகைமையின் மேல் எல்லையிலும் பார்க்கக் கூடிய மீடிறன்களைக் கொண்ட ஒலி அலை வகை.

(3) மின் காந்தத் திருசியத்தில் கூடிய கதியில் செல்லும் அலை வகை

(4) மிக அதிகமான செறிவை உடைய ஒலி அலை வகை.

03. கண்ணுக்குள்ளே புகும் ஒளியின் அளவைக் கண்ணில் இருக்கும் பின்வரும் எப்பகுதி ஆளுகின்றது.

(1) கண்மணி (2) வில்லை

(3) பிசிர்த்தசை (4) கதிராளி

04. குழிவாடியில் உண்டாகும் விம்பங்கள் பற்றிய பொய்யான கூற்று யாது?

(1) குழிவாடியில் எப்போதும் உருச்சிறுத்த விம்பங்களைப் பார்க்கலாம்

(2) குழிவாடியில் சிலவேளைகளில் மெய் விம்பங்களைப் பார்க்கலாம்

(3) குழிவாடியில் சிலவேளைகளில் உருப்பெருத்த விம்பங்கள் கிடைக் கும்

(4) குழிவாடியில் சிலவேளைகளில் மெய் விம்பங்களும் சிலவேளைக -ளில் மாய விம்பங்களும் கிடைக்கும்

05. பின்வரும் எவற்றில் ஒலி கூடிய கதியுடன் செல்லும்

(1) வெற்றிடம் (2) வளி

(3) நீர் (4) இரும்பு

**விஞ்ஞானம் (பௌதிகவியல்) பல்தேர்வு**

ஆசிரியர் . பொன்னுத்துரை தவசீதன் BSC
மாணவர் ஒளி கல்வி அபிவிருத்தி மையம், திருகோணமலை.

## பாடம் : தமிழ்மொழியும் இலக்கியமும்

தமிழ் இலக்கணம்

### இலக்கணத் தொடர்கள்

**தொடர்புபட்ட இரு சொற்களாக அமைபவை**

| | |
|---|---|
| 13.குப்பைக் கூளம் | 23.பாயும் படுக்கையும் |
| 14.குலங் கோத்திரம் | 24.பின்னிப் பிணைந்து |
| 15.கொஞ்சிக் குலாவி | 25.புல் பூண்டு |
| 16.கோட்டைக் கொத்தளம் | 26.பேரும் புகழும் |
| 17.சண்டை சச்சரவு | 27.போற்றிப் புகழ்ந்து |
| 18.சுழிவு நெழிவு | 28.மந்திர தந்திரம் |
| 19.சீராட்டிப் பாராட்டி | 29.முட்டி மோதி |
| 20.தட்டுத் தடக்கி | 30.மூட்டை முடிச்சு |
| 21.பட்டம் பதவி | 31.வழிதுறை |
| 22.பழக்க வழக்கம் | 32.வற்றி வரண்ட |

**மாறுபட்ட பொருள் குறிக்கும் வகையில் அமைந்த இணை மொழிகள்**

| | |
|---|---|
| 1.அங்கும் இங்கும் | 8.மேலும் கீழும் |
| 2.அல்லும் பகலும் | 9.குன்றுங் குழியும் |
| 3.அடிமுடி | 10.குறுக்கும் நெடுக்கும் |
| 4.ஏறு மாறாய் | 11.கொடுக்கல் வாங்கல் |
| 5.ஏறக்குறைய | 12.நல்லது பொல்லாதது |
| 6.ஓட்டமும் நடையும் | 13.மலையும் மடுவும் |
| 7.கீரியும் பாம்பும் | 14.வாழ்வும் தாழ்வும் |



**தமிழ் இலக்கியத் தொகுப்பு**

ஆசிரியர் : A. ரவீந்திரன் B.A.(Hons)Tamil Special
Dip.In.Education
மாணவர் ஒளி கல்வி வளாகம்,

## Grammar

**Underline the most suitable word in the brackets.**

While I was abroad I picked up a mystery (1)............ ( infect/ infection/ infectious) My doctor sent me to see a (2).......... (special/ specially/ specialist ) because he didn't recognize my symptoms. After a thorough (3)........... ( examine/ examination/ examiner) he asked a nurse to give me an (4) .......... ( inject/ injector/ injection). Although the arm quite (5)............ (pain/ painful/ painfully) for several days, my (6).......... (recover/ recoverble/ recovery) was quick.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் விளையாட்டு செய்திகள்




## இலங்கையில் வரலாற்றுச் சாதனை

### படைத்த சென் மேரிஷ்

இலங்கை கால்ப்பந்தாட்ட சம்மேளனத்தால் பிரிவு – 2 அணிகளுக்கிடையில் நடத்தப்பட்ட தேசிய ரீதியிலான கால்ப்-பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியில் கொழும்பு லெவன் ஸ்டார்ஸ் அணியை வீழ்த்தி நாவாந்துறை சென்.மேரிஷ் அணி சம்பியனாகியது.

இந்த இறுதிப்போட்டி அரியாலை கால்ப்பந்தாட்ட மைதானத்தில் கடந்த புதன்கிழமை மாலை நடைபெற்றது. மொத்தமாக 74 அணிகள் பங்குபற்றிய இந்தச் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியில் கொழும்பு லெவன் ஸ்ரார்ஸ் அணியும் நாவாற்துறை சென்.மேரிஷ் அணியும் மோதின.

ஆட்டம் 1:1 என்று சமநிலையில் இருந்தமையால், சமநிலை தவிர்ப்பு உதை நாடப்பட்டது. சமநிலை தவிர்ப்பு உதையில் சென்.மேரிஷ் அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. இதன்மூலம் பிரிவு – 2 தேசிய சம்பியனாக சென்.மேரிஷ் அணி மாறியது.



## சவால் கிண்ண கிரிக்கட் சுற்றுப் போட்டி

### புளு இலவன் அணி அபார வெற்றி

அட்டாளைச்சேனை பிரதேச சுப்பர் சொனிக் காலை வட்ட அணியினருக்கும், புளு இலவன் காலைவட்ட அணியினருக்கும் இடையிலான சவால் கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் புளு இலவன் காலைவட்ட அணியினர் வெற்றிபெற்றனர்.

அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சி கலாசாலை விளையாட்டு மைதானத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இப்போட்டி 15 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட போட்டியாக அமைந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சுப்பர் சொனிக் அணியினர் 15 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுகளை இழந்து 130 ஓட்டங்களை பெற்றனர்.

இந்த வெற்றி இலக்கை வைத்து புளு இலவன் காலைவட்ட அணியினர் துடுப்பெடுத்தாடி 9.3 ஓவரில் வெற்றியை தனதாக்கிக்கொண்டனர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக எம்.பஸ்மீர் ஆசிரியர் தெரிவு செய்யப்பட்டார். அவர் சுமார் 45 பந்துகளை எதிர்கொண்டு 100 ஓட்டங்களை புளு இலவன் காலைவட்ட அணியினருக்கு பெற்றுக்கொடுத்து தனது அணியின் வெற்றிக்கு பாரிய பங்களிப்பைச் செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



## "பெரிய நாடுகள் விரட்டக் கூடாது"




சர்வதேச கிரிக்கெட் சபையின் தற்போதைய நிர்வாகக் கட்டமைப்புக் குறித்து, அதன் புதிய தவிசாளரும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவருமான ஷஷாங் மனோகர், கடுமையான விமர்சனங்களை வெளிப்படுத்தி-யுள்ளார்.

இந்தியா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா ஆகிய மூன்றும், அதிக நிதியியல் நன்மைகளையும் அதிகாரங்களையும் கொண்டதாக மாற்றப்பட்டது. மூன்று பெரிய நாடுகளும் சர்வதேச கிரிக்கெட் சபையை வெருட்டும் தற்போதைய நிலையை ஆதரிக்கவில்லையெனத் தெரிவித்தார். இது தனது தனிப்பட்ட கருத்தெனவும் அவர் தெரிவித்தார். உலக கிரிக்கெட் அரங்கில், இந்தியாவின் ஆதிக்கத்தைத் திணித்த ஸ்ரீனிவாசனின் பதவியிழப்பு, ஷஷாங் மனோகரின் இவ்வாறான கருத்துகள், பாரிய மாற்றங்களைக் கொண்டுவருமா என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

## முதலாவது பகல் - இரவு ஆட்டம்

138 வருட டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றின் நேற்றைய நாள் மிக முக்கியமானதாகும். நேற்றுத்தான் இளஞ்சிகப்பு பந்தில் விளையாடும் பகல் - இரவு டெஸ்ட் போட்டி அடிலெய்டில் தொடங்கியது. இதில், அவுஸ்திரேலியா- நியூசிலாந்து அணிகள் விளையாடின.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது. அதன்படி குப்டில், லாதம் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள்.

அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான பகல் இரவு டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து தனது முதல் இன்னிங்ஸில் 202 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது.



## அஸ்வினின் சுழலுக்கு அடிபணிந்தது ஆபிரிக்கா




இந்தியா மற்றும் தென்னாபிரிக்காவின் தேசிய அணிகள் கலந்து கொள்ளும் நான்கு டெஸ்ட் தொடர்களைக் கொண்ட துடுப்பாட்டப்போட்டியில் இந்திய அணி இரண்டு ஆட்டங்களைத் வெற்றிகொண்டு தொடரைத் தன்வசமாக்கியுள்ளது.

ஒரு போட்டி மழையால் கைவிடப்பட்ட நிலையில் நடைபெற்ற இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் சுழற்பந்து வீச்சாளர்களின் துணை கொண்டு இந்திய அணி வெற்றிக்கனியைச் சுவைத்தது.

இறுதியாக நேற்று நாக்பூரில் நடைபெற்ற மூன்றாவது டெஸ்ட போட்டியில் ரவிச்சந்திரன் அஸ்வின் சுழலில் கலக்கத் தொடங்கியதை அடுத்து தொடர்ச்சியாக இலக்குகளை இழந்த தென்னாபிரிக்க அணி தோல்வியடைந்துள்ளது.

இப்போட்டியில் இரண்டு இன்னிங்ஸிலும் அஸ்வின் மொத்தமாக 12 இலக்குகளை வீழ்த்தியிருந்தார்.

இந்தியப் பந்து வீச்சினில் ஆதிக்கம் செலுத்திய அஸ்வினுடன் சளைக்காமல் சோடி சேர்ந்தனர் ரவீந்திர ஜடோஜா மற்றும் மிஸ்ரா ஆகியோர்.

நாக்பூர் மைதானம் சுழற்பந்து வீச்சாளர்களுக்கே உச்ச பயனைத் தரத்தக்க வகையில் அமைக்கப்-பட்டுள்ளது என்று குற்றச்-சாட்டுக்கள் எழும்பிய நிலையில் இந்திய அணி தொடர் வெற்றியைத் தனதாக்கியுள்ளது.

## சானியா பதிலடி



ஆங்கில ஊடகம் ஒன்றிற்கு பேட்டியளித்த சானியா மிர்சா, இந்த உலகில் ஆணாதிக்கம் நிறைந்து காணப்படுவதாகவும், பெண் ஒருவர் சாதிப்பது என்பது கடினமான விடயமாக இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். இதற்கிடையில் சானியாவின் குடும்ப வாழ்க்கை தொடர்பாக நிருபர்கள் கேள்வி கேட்ட போது, கோபமடைந்த சானியா மிர்சா, [illegible] எனது படுக்கையறையில் நடப்பது பற்றி கேட்கும் அதிகாரத்தை நான் கொடுத்துவிடவில்லை" என்று பதிலடி கொடுத்துள்ளார்.

## அப்பாவுக்குத் தப்பாமல் சச்சின் ஜூனியர் செஞ்சரி



மும்பையில் நடைபெற்ற 16 வயதுக் குட்பட்டவர்களுக்கான பேயாட் கிண்ண துடுப்பாட்டத்தில் டெண்டுல்கரின் மகன் அர்ஜூன் சதம் விளாசியுள்ளார்.

இச்சதம் தொடர்பாகக் கருத்து தெரிவித்த அணியின் முதன்மை பயிற்சியாளர் விகாஸ், அர்ஜூன் எந்தவித அழுத்தமும் இன்றி நேர்த்தியாக விளையாடியதாக குறிப்பிட்டுள்ளார். துவக்க ஆட்டக்காரர்கள் போதிய ஓட்டங்கள் எடுக்க தவறவே அணியை தூக்கி நிறுத்தும் பணியை சாமர்த்தியமாக செய்துள்ளதாக தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 27வது இளைஞர் சேவைகள் மன்ற விளையாட்டுப் போட்டி
# பல வெற்றிகளைக் குவித்தது கிழக்கு



இளைஞர் சேவைகள் மன்றம் நடாத்திய தேசிய விளையாட்டு விழாவில் கிழக்கு மாகாணம் பல வெற்றிகளைப் பெற்றுள்ளது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும் இலங்கை இளைஞர் கழக சம்மேளனமும் இணைந்து நடத்திய 27வது தேசிய இளைஞர் சேவைகள் மன்ற விளையாட்டு விழா தியகம மகிந்த ராஜபக்ச விளையாட்டு மைதானத்தில் கடந்த 13 ம் திகதி ஆரம்பமாகி 16ம் திகதி நிறைவிற்கு வந்தது.

இப் போட்டிகளில் 13 புதிய தேசிய சாதனைகள் நிலை - நாட்டப்பட்டுள்ளது.

கிழக்கைப் பொறுத்தவரை ஆண்களுக்கான கபடி போட்டியில் மட்டக்களப்பு மாவட்ட அணியினர் 2 ம் இடத்தையும், ஆண்க - ளுக்கான கயிறுழுத்தல் 17


## கிண்ணியாவில் தீ விபத்து

கிண்ணியாவில் அலுமினியம் விற்கும் கடையொன்று திடீரெனத் தீப்பற்றியெரிந்ததில் பல லட்சக்கணக்கான சொத்து இழக்கப்பட்டுள்ளது.

நேற்று (20) அதிகாலை நடைபெற்ற இத் தீவிபத்தில் கடை முற்றாக எரிந்து அழிவடைந்துள்ளது.

குறித்த தீவிபத்துத் தொடர்பாக கிண்ணியா காவல்துறையினர் விசா -ரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

ஹலீம்



## கிழக்கின் தமிழ் அமைச்சர்களைச் சீண்டினார் அமீர்
## கௌரவ தண்டாயுதபாணி ஒரு நிராயுதபாணி
### கௌரவ துரைராஜசிங்கம் ஒரு தலையாட்டிபொம்மை







கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் தண்டாயுதபாணி கிழக்கு மாகாண முதலமைச்சருக்கு முன்பாக ஒரு நிராயுதபாணி. கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் ஒரு தலையாட்டி பொம்மை என கிராமிய அபிவிருத்திப் பிரதி அமைச்சர் எம்.எஸ்.எஸ். அமீர் அலி தெரிவித்தார்.

ஏறாவூரில் நிகழ்வொன்றில்..... 17

## புல்மோட்டையில் 3கிலோ கஞ்சா - வைத்திருந்தவர் கைது

திருகோணமலை புல்மோட்டைப் பிரதேசத்தில் மூன்று கிலோ கிராம் கஞ்சாவை வைத்திருந்த ஒருவரை அடுத்த மாதம் 2ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு குச்சவெளி நீதிமன்றம் நேற்று வியாழக்கிழமை (19) உத்தரவிட்டுள்ளது.

புல்மோட்டைப் காவல் பிரிவுக்குட்பட்ட மகேசன்புர பகுதியிலே குறித்த சந்தேக நபர் நீண்ட காலமாக கஞ்சா வியாபாரம் செய்து வந்துள்ளதாகவும், சந்தேக நபருக்கெதிராக திருகோணமலை உயர் நீதிமன்றில் இரண்டு கஞ்சா சம்பந்தமான வழக்குகள் 17

## அல்ஹிஜ்ரா நகரில் வடிகான்களை அமைக்கப் பணிப்பு

தம்பலகாமம் ஹிஜ்ரா நகர் கிராமத்தின் வடிகான் - கள் பல வருடங்களாகத் திருத்தப்படாததால் சில நாட்களுக்கு முன்னர் பெய்த மழையில் வெள்ள நீர் வழிந்தோட முடியாது மக்கள் பெரும் துன்பமடை - ந்துள்ளனர்.

இதனையடுத்து கிராம அபிவிருத்திச் சங்கத் செயலாளர் அப்துல் ஹலீம் எடுத்த முயற்சி - யினால் பிரதேசசபைத் தலைவர் ஜே.விஸ்னு, பிரதேசச் செயலாளர் திருமதி ஸ்ரீபதி ஆகி - யோரின் முயற்சியால் வடிகான் கள் வெட்டப்பட ஏற்பாடுகள் செய்யப் - பட்டுள்ளன.



## காணாமற்போன 52 பேரில் கிழக்கின் இளைஞர்கள் பலர்



அவுஸ்திரேலியாவிற்குப் பயணம் செய்து காணாமற் போயுள்ள ஐம்பத்திரண்டு தமிழ் உறவுகளின் நிலை தொடர்பாகக் கடந்த ஆறு ஆண்டுகளாக எவ்வித தகவல்களும் இல்லை என பிபிசி உலகச் செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

அவ்வாறு புறப்பட்டுச் சென்றவர்களில் பலர் கிழக்கைச் சேர்ந்தவர்கள். அத்துடன் சில இளம் குடும்பங்களும் இப்பயணத்தில் ஈடுபட்டதை மலைமுரசு உறுதிசெய்துள்ளது.

2009ம் ஆண்டில் அக்டோபர் மாதம் 13 ஆம் தேதி இந்தியக் கடற்பரப்பில் இருந்து புறப்பட்டுச் சென்ற படகொன்றில் பயணம் செய்ததாகக் கூறப்படுகின்ற 52 பேருக்கு என்ன நடந்தது என்பது பற்றிய தகவல்களே இதுவரை தெரியவில்லை.

இலங்கையிலும் இந்தியாவிலும் அப்போது செயற்பட்டு வந்த முகவர்களின் உதவியுடன் இந்தப் பயணத்தை மேற்கொள்ளத் துணிந்திருந்த போதே, 52 பேர் காணாமல் போயிருப்பதாகக் கூறப்படுகின்றது.

ஆபத்து மிக்க அதேநேரம் பின்னர் தடைசெய்யப்பட்ட இந்த படகுப் பயணத்திற்கு, பயணி ஒருவருக்கு இலங்கைப் பணம் 25 லட்சம் ரூபா கட்டணமாகக் கேட்கப்பட்டதாகவும், முற்பணமாக ஒரு லட்சம் ரூபா செலுத்தி பயணத்தை மேற்கொள்ளலாம் என்றும், அவுஸ்திரேலியாவைச் சென்றடைந்த பின்னர் மிகுதி பணத்தைச் செலுத்த வேண்டும் என்றும் அவர்கள் நிபந்தனை விதித்திருந்ததாகத் தெரிவிக்கப் - படுகின்றது.

ஆனால் 52 பேருடன் புறப்பட்டுச் சென்ற படகுக்கு என்ன நடந்தது என்பது தெரியாமல் போனதையடுத்து, யாழ்ப்பாணத்தில் செயற்பட்டு வந்த முகவர் தலைமறை வாகியிருப்பதாகப் பாதிக்கப்பட்டவர்கள் கூறுகின்றார்கள்.

அதேநேரம் இந்தியாவில் இருந்து செயற்பட்ட முகவர் கைது செய்யப் - பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் காணாமல் போன படகும், அதில் இருந்தவர்களும் எங்கு சென்றார்கள், அவர்களுக்கு என்ன நடந்தது என்பது தெரியாமல், அவர்களின் குடும்ப உறவினர்கள் தவித்துக் கொண்டிருக்கின்றார்கள் என்றும் பிபிசியின் உலகத் தமிழ் செய்திச் சேவை தெரிவிக்கின்றது.




முதற்தடவையாக திருகோணமலையில் அனைத்து வசதிகளையும் கொண்ட ஒவ்செற் அச்சுப் பதிப்பு நிலையத்தை வாடிக்கையாளரின் வசதி கருதி நிறுவியுள்ளோம்

ஸ்ரீராம் பிறிண்டர்ஸ்
SHRIRAM PRINTERS

தங்களுடைய புத்தகங்கள், திருமண அழைப்பிதழ்கள், சஞ்சிகைகள், துண்டுப்பிரசுரங்கள், வாழ்த்துமடல்கள், மற்றும் அனைத்து வகையான ஒவ்செற் அச்சுப்பதிப்புக்களும் வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கேற்ப அழகாகவும் வர்ணமயமாகவும் திறம்பட செய்து தரப்படும்.



159A, கடல் முக வீதி,
திருகோணமலை.
0777 555 738

இவ்வாரந்த பத்திரிகை மலைமுரசு நிறுவனத்தினால் இல.159 ஏ, கடல் முக வீதி, திருகோணமலையில் இருந்து 21.11.2015ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org